528
இ
12

இலக்கியத் தென்றல்

ஆர். வீரபத்திரன்

KMM0008.

528
இ/12

இலக்கியத் தென்றல்

976

ஆசிரியர்:
ஆர். வீரபத்திரன், எம். ஏ., எல். டி.,
தமிழ் விரிவுரையாளர்,
திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைக் கல்லூரி,
திருவனந்தபுரம்.

1954

முதற் பதிப்பு: ஸெப்டம்பர், 1954.
உரிமை ஆசிரியர்க்கே
விலை ரூ. 2-0-0

இந் நூலாசிரியர் இயற்றியவை:

1 செய்யுள் திரட்டு (குறிப்புரையுடன்)
2 இயற்கையின் விந்தை
3 நாகரிகச் சிற்பிகள்
4 கலையும் கவிதையும்
5 உயிர் நூல் (முதற் புத்தகம்)

சாந்தி அச்சகம், நாகர்கோவில்.

பொருளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	
1	முத்தமிழ் வாணர்	1
2	அறிவுச் செல்வம்	7
3	ஒழுக்கம்	18
4	சான்றோர் நெறி	34
5	இளங்கோவடிகள்	49
6	கண்ணகியின் வழக்குரை	59
7	கம்பரின் உரையாடல்	85
8	கொடை விந்தை	103
9	மூவருலா	118
10	பட்டினப்பாலை	139

முன்னுரை

இலக்கியங்களைக் கற்பவர்கள் அவற்றில் கூறப்படும் அரிய கருத்துக்களை அறிவதோடு கவிதைச்சிறப்பு, கலையழகு, காவிய இன்பம் என்பனவற்றை உணர்ந்து அனுபவிப்பதையும் நோக்கமாகக் கொள்கிறார்கள். அம்முறையில், தமிழிலக்கியங்களைக் கற்கப் புகும் மாணவர்களுக்கும் இலக்கியப் பயிற்சியில் தலைப்படும் ஏனையோர்களுக்கும், பயன்படுமாறு தமிழிலக்கியப் பரப்பிலிருந்து தேர்ந்தெடுத்த சில சிறந்த கருத்துக்களும், சந்தர்ப்பங்களும், நூற் பொருள்களும் இந் நூலின்கண் விளக்கப்படுகின்றன. இலக்கியம் பற்றித் தமிழ் நாட்டின் தென் கோடியான குமரிப் பகுதியிலிருந்து வெளி வரும் இந் நூலுக்கு இலக்கியத் தென்றல் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன்கண் பத்துக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. தமிழ்த்தொண்டு புரியும் தமிழ்வாணர்களைப் பற்றியது முதற் கட்டுரை. அறிவுச்செல்வம், ஒழுக்கம் என்னும் இரண்டும் திருக்குறட் கருத்துக்களை அடியொற்றி எழுதப்பட்டவை. அவ் அறிவு ஒழுக்கங்களை அடைவதற்குச் சான்றோர் நெறி எங்ஙனம் துணை புரிகின்றது என்பதை நான்காவது கட்டுரை விளக்குகின்றது. சேர நாட்டுப் புலவர் திலகரான இளங்கோவடிகளின் வரலாறும், அவர் இயற்றிய சிலப்பதிகாரத்தில் வரும் வழக்குரை காதையின் நயமும் அடுத்து வரும் கட்டுரைகளில் கூறப்படுகின்றன. இராமாயணத்தில் அமைந்துள்ள உரையாடல் நயத்தை மந்தரை சூழ்ச்சிப்படலத்தின் வாயிலாக விளக்குவதே ஏழாவது கட்டுரையின் நோக்கம். இலக்கியங்

களிற் கூறப்படும் கொடைகளில் விந்தையாகவுள்ளனவற்றை எட்டாவது கட்டுரையில் காணலாம். கம்பனைப் போன்று கவிச்சக்ரவர்த்தி என்ற பட்டம் பெற்ற ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாவின் சிறப்புக்களை ஒன்பதாவது கட்டுரை எடுத்துரைக்கின்றது. பத்துப்பாட்டினுள் ஒன்றான பட்டினப்பாலையின் பொருள் இறுதிக் கட்டுரையில் விளக்கப்படுகிறது.

ஒழுக்கம், இளங்கோவடிகள் என்னும் கட்டுரைகள் இரண்டும் திருவனந்தபுரம் வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப் பெற்றவை. அவை சிறிய மாறுதல்களுடன் வானொலி நிலையத்தாரின் அனுமதி பெற்று இங்கு வெளியிடப்படுகின்றன. முத்தமிழ்வாணர், மூவருலா என்ற கட்டுரைகள் ஸர்வகலாசாலை இடைநிலைக் கல்லூரிப் பத்திரிகையிலும், செந்தமிழும் முன்னர் வெளிவந்தவை.

இந்நூலை அச்சிடும்போது உதவி புரிந்த நண்பர் வித்வான் எஸ். ஆசிர்வாதம் அவர்களுக்கும், அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த சாந்தி அச்சகத்தாருக்கும் எனது நன்றி.

ஸர்வகலாசாலைக் கல்லூரி,
திருவனந்தபுரம்.
17—9—1951

ஆர். வீரபத்திரன்

இலக்கியத் தென்றல்

1. முத்தமிழ் வாணர்

தமிழ் மூன்று வகைப்படும். அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பனவாம். செய்யுள் வடிவாக அமைந்த ஆன்ரோர் இலக்கியங்கள் யாவும் இயற்றமிழில் அடங்கும். சிறந்த உரைநடை நூல்களையும் அதில் சேர்க்கலாம். பத்துப்பாட்டு, அகநானூறு, புறநானூறு, கீழ்க்கணக்கு நூல்கள், இராமாயணம், பாரதம் முதலியன இயற்றமிழுக்கு உதாரணங்களாம். இவ் இயற்றமிழ்க் கவிதைகள் இராகம், தாளம் என்பவற்ரோடு பொருந்தி வரும்போது இசைத்தமிழ் என்று பெயர் பெறுகின்றன. தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம், நந்தன் கீர்த்தனை முதலியன இசைத்தமிழ் நூல்களாகும். இசையில் வல்லவர்கள் இவற்றைப் பண்ணுடன் இசைத்துப் பாடும்போது கேட்போர் செவியும் மனமும் குளிர்கின்றன. இனி, இவ் இசைத் தமிழ் கூத்தர், விறலியர் முதலியோர் நடிக்கும் நடிப்பிற்கும் பொருந்தி வருமானல் அப்போது நாடகத்தமிழ் என்று வழங்கப்படும். இராம நாடகம், குற்ருலக் குறவஞ்சி முதலியன நாடகத்தமிழ் நூல்களாகும். நாடகத்தமிழ் செவியின்பத்தைத் தருவதோடு கண்ணுக்கு விருந்தாகவும் அமைகிறது.

முற்காலத்தில் இயல், இசை, நாடகம் என்னும் ஒவ்வொரு பிரிவிலும் எண்ணற்ற நூல்கள் இருந்தன. அகத்திய முனிவர் மூன்று தமிழுக்கும் இலக்கணம் வகுத்தனர் என்று கூறுவர். பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம் முதலிய இசைத்தமிழ் நூல்கள் முற்காலத்தில் இருந்து இப்பொழுது இறந்துபோயின. இவைபோலவே நாடகத்தமிழ் நூல்களிலும் பண்டு வழங்கியிருந்துப் பின்னர் அழிவெய்தியன பலவாம். அவை பாரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலியன.

சிலப்பதிகாரத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் விரவி வருகின்றன. ஆதலால் அது 'முத்தமிழ்ப் பாடல்' என்றும், 'இயல் இசை நாடகப்பொருள் தொடர் நிலைச் செய்யுள்' என்றும் பெயர் பெறும். சிலப்பதிகாரத்தின் சிறப்பிற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இம் மூவகைத் தமிழும் பற்றி இலக்கிய இலக்கணங்களை வகுத்த புலவர்கள் சங்ககாலம் முதல் இன்றளவும் நூற்றுக் கணக்காக அறியப்படுகின்றனர். இப்புலவர்களை அவ்வக் காலங்களில் வாழ்ந்திருந்த பொதுமக்களும், புரவலர்களும், வள்ளல்களும், அரசர்களும் ஆதரித்து வந்துள்ளார்கள். தமிழ்ப் புலவர்களுக்கு மன்னர்கள் வரிசை அளித்துச் சிறப்பித்த வரலாற்றை நமது இலக்கியங்களில் மிகுதியாகக் காணலாம். இப்புலவர்கள் தமிழ் (வாழ்நர்) வாணர் என்னும் பெயர்க்கு உரியராவர். தமது தமிழ்ப் புலமையின் துணையால் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளைப் புரவலர்பாற் பெற்று வாழ்ந்து வந்ததால் தமிழ் வாணர் (தமிழால் வாழ்பவர்) என்னும் பெயர் அவர்க்குப் பொருந்துவதாகும். இனி மூவகைத் தமிழையும் ஆர்வமுடன் கற்றும், கற்றுணர்ந்த

நயங்களைப் பிறர்க்கு எடுத்துரைத்தும் தமிழோடு இயைந்த வாழ்க்கை நடத்துபவர்களையும் தமிழ் வாணர் எனக் கூறுவது ஏற்புடையதாகும்.

தமிழை மூன்றாகப் பகுத்து முத்தமிழ் என வழங்கியதுபோலவே தமிழ் வாணர்களையும் மூன்று வகையாகப் பிரித்து மூன்று தமிழ் வாணர் அல்லது முத்தமிழ் வாணர் என்று கூறலாம்.

முதல் வகுப்பைச் சார்ந்த தமிழ் வாணர்கள் தமது அரு முயற்சியால் தமிழ் மொழியை வாழ்வித்துத் தாம் மட்டும் அதனால் ஓர் ஊதியமும் பெறாதவர்கள். தமிழுக்கும் அவர்களுக்குமுள்ள தொடர்பில் தமிழ் ஒன்றே வாழ்வு பெறுகிறது. கைம்மாறு கருதாது தொண்டுபுரியும் இவர்கள் தமிழ் மக்களால் எந்நாளும் போற்றுதற்குரியவர்கள். நம் நாட்டுப் புலவர்களிலிருந்தே உதாரணம் கூறப் புகுந்தால், பேராசிரியர் பி. சுந்தரம் பிள்ளை அவர்களையும், இசைச்செல்வர் தி. இலட்சுமணன் பிள்ளை அவர்களையும் இவ்வகையைச் சார்ந்த தமிழ் வாணர்களாகக் கூறலாம். சுந்தரம் பிள்ளை அவர்கள் தத்துவ சாஸ்திரத் துறையில் பேராசிரியர் பதவி வகித்தவர்கள். அந்த சாஸ்திரத்தில் அவர்கள் அழுத்தமான ஞானத்தைப் பெற்றிருந்தார்கள். அதனோடு தமது தாய் மொழியாகிய தமிழிலும் பற்று வைத்துத் தொண்டுபுரிந்தது தமிழ் மக்கள் செய்த பாக்கியமேயாகும். அவர்கள் இயற்றிய மனோன்மணீயம் என்ற நாடக நூல் தமிழறிஞர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது. திருஞான சம்பந்தர் காலத்தைக் குறித்த அவர்களது ஆராய்ச்சி தென்னிந்தியச் சரித்திர ஆராய்ச்சியாளர்க்குச் சிறந்த வழிகாட்டியாக உள்ளது. நூற்றொகை விளக்கம், திருவிதாங்கூர் மன்னர்கள் முதலிய வேறு பல நூல்களையும் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

இசைச் செல்வர் தி. இலட்சுமணன் பிள்ளையவர்கள் அரசாங்கக் கஜனுவில் தலைமைப் பதவி (Major Treasury Officer) வகித்தவர்கள். தமிழுக்குப் புறம்பான ஒரு துறையில் வேலை பார்க்க நேரிட்டபோதும் அவர்களது தமிழ் ஆர்வமும், தொண்டும் குறைவுபடவில்லை. தமிழிலுள்ள மூன்று துறைகள் பற்றியும் அவர்கள் நூல்கள் இயற்றியுள்ளார்கள். அவர்களது இயற்றமிழ்ப் பாடல்களும், இசைக் கீர்த்தனங்களும் தனித்தனித் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தமிழிசை உள்ளளவும் அவர்கள் புகழ் நிலைபெறும் என்று எதிர்பார்க்கலாம்.

இனி, இரண்டாம் வகுப்பைச் சார்ந்த தமிழ் வாணர்களை நோக்குவோம். அவர்கள் தமிழால் தாம் வாழ்வு பெற்றதோடு, தாமும் பதிலாகத் தமிழை வாழ்வித்தவர்கள். இத் தொடர்பில் தமிழும் வாழ்கிறது; புலவரும் வாழ்வெய்துகின்ருர். தமிழ் தமக்குச் செய்த நன்றியை மறவாது புலவர் தாமும் அதன் வளர்ச்சிக்குத் தொண்டு புரிகின்ருர். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களை இவ்வகைத் தமிழ் வாணருக்கு உதாரணமாகக் கூறலாம். அவர்கள் திருவனந்தபுரம் மாதர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பல ஆண்டுகள் வேலைபார்த்தவர்கள். பிதுரார்ஜிதமாகப் போதிய செல்வம் படைத்தவர்களே; எனினும் தமிழ்த்துறையில் தாம் ஊதியம்பெற நேர்ந்தமையால் அந்நன்றியை மறவாமல் அதனினும் பன்மடங்கு பெரிதாகத் தமிழ்த் தாய்க்குப் பணிபுரிந்துள்ளார்கள். அவர்கள் பாடிய ‘மலரும் மாலையும்’ தொட்டால் கை மணக்கும்; பாடினல் வாய் மணக்கும்; நினைத்தால் நெஞ்சுவக்கும். அவர்கள் சமீப காலத்தில்

பாடிய கீர்த்தனைகள் இசைத்தமிழுக்குக் கிடைத்த ஒரு புதிய தேட்டமாகப் போற்றத்தக்கன. சரித்திர ஆராய்ச்சித் துறையையும் அவர்கள் வளம்படுத்தியுள்ளார்கள்.

இனி, மூன்றும் வகையுள் அடங்கும் தமிழ் வாணர்கள் யாரெனில், தமிழ்த் துறையில் புகுந்து, அதனால் பீடும், பெருமையும், செல்வமும், செல்வாக்கும், பெருவாழ்வும் பெற்றிருந்தும் அத்தமிழைப் புறக்கணிப்பவர்கள். தாம் தமிழ்த் தொண்டுபுரிய அறியாதது மட்டுமல்ல; அவ்வாறு புரிபவர்களையும், அவர் செய்யும் தொண்டினையும் உள்ளத்தால் வெறுப்பவர்கள். தமிழன்னையின் சன்னிதியில் நன்றி கொன்ற குற்றத்திற்கு ஆளாகி நிற்பவர்கள். தமிழுக்கும் இவர்களுக்குமுள்ள தொடர்பில் தமிழின் வளர்ச்சி குன்றுகிறது; இவர்கள் வாழ்வு ஓங்குகிறது. உதாரணம் "வந்துழிக் கண்டுகொள்க அல்லது வல்லார் வாய்க் கேட்டுணர்க."

இம்மூவகைத் தமிழ் வாணர்களுக்கும் புறம்பாக வேறோர் இனம் தமிழ் வாணரும் உண்டு: அவரைத் தமிழ் வாணர் என்பதைவிடத் தமிழ் வீணர் என்பதே மிகப் பொருத்தமாக இருக்கும். பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழ் இலக்கியங்களிலே தாம் இயற்றிய புல்லிய கவிதைகளை இடைச்செருகல் செய்து அந்நூல்களின் தூய்மையைச் சிதைப்பவர்கள், ஆன்றோர் கவிதைக்கு நேர் பொருள் கூறாது திரிபுப் பொருளை வலிந்துரைத்து அதுவே சரியென்று சாதிப்பவர்கள், யாதானும் ஒரு முடிபை முன்னிறுத்திக்கொண்டு அதற்கேற்றவாறு கோணலாராய்ச்சி புரிபவர்கள், தாமே நீதிபதியாக இருந்து தமது கொள்கையே சரியென்று தீர்ப்புக் கூறுவதோடமையாமல் அக்கொள்கைக்கு ஒவ்வாத புலவர்களையும், நூல்களையும் தாக்கி

யும் வைதும் கொடுமை இழைப்பவர்கள், கருத்து வேற்றுமையுடையாரோடு நிலையின் இழிந்து சொல் வழங்குபவர்கள் ஆகியோர் இவ்வகையுள் அடங்குவர்.

உண்மைத் தமிழர்கள் தமக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பில் மூன்றும் வகைத் தமிழ் வாணராகவோ அல்லது தமிழ் வீணராகவோ அமையாமல், முதலிற் கூறிய இருவகைத் தமிழ் வாணர்களுள் ஒருவராக இருப்பதற்கு முயல வேண்டுவது அவர்களது கடமையாகும்.

"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ".

2. அறிவுச் செல்வம்

பலவகைப் பிறப்புக்களிலும் மனிதப் பிறவியே மிகவும் உயர்வுடையதென்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது

என்னும் ஔவையார் வாக்கும் இதனை வலியுறுத்துகின்றது. டார்வின் என்னும் மேனாட்டு விஞ்ஞானி பல பிராணிகளின் உடலமைப்பையும் நுணுகி ஆராய்ந்து, இயற்கையில் இடையறாது நிகழ்ந்துகொண்டிருக்கும் பரிணாம வளர்ச்சியிலே மனிதன் மிக உயர்ந்த படியில் விளங்குகிறான் என்று கூறியுள்ளார். மாணிக்கவாசகர் சிவபுராணத்தில்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் ... ... (26—28)

எனக் கூறியிருப்பதும் இக்கருத்தை ஒரு வகையில் ஆதரிப்பதாகும். திருமாலின் அவதார முறைமையினும் இவ்வுண்மை விளங்குகிறதென்பர். படைப்பில் மனிதன் மிகவுயர்ந்து இறைவனது வடிவத்தைத் தான் பெற்றிருக்கிறான் என்று சமய நூல்கள் சில அறிவிக்கின்றன.

உயிர்களை அவற்றின் புலனறிவுக்கேற்பப் பல வகையாகப் பகுத்துக் கூறுவது சமண நூற்கொள்கையாகும். நன்னூலாரும்,

புல் மரம் முதல உற்றறியும் ஓரறிவுயிர் (உரி. 4)
முரள் நந்தாதி நாவறிவோ டீரறிவுயிர் (உரி. 5)
சிதல் லெறும்பாதி மூக்கறிவின் மூவறிவுயிர் (உரி. 6)
தும்பி வண்டாதி கண்ணறிவின் நாலறிவுயிர் (உரி. 7)

வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்
ஆதி செவியறிவோடு ஐயறி வுயிரே (உரி. 8)

என்று புலன்களின் எண்களுக்கேற்ப உயிர்களை ஐவகையாகப் பகுத்து, ஐயறிவுயிரின் இனத்தில் விலங்கு புள் என்பவற்றோடு மனிதனையும் கூட்டி உரைக்கின்றார்.

புலன்களின் எண்ணினை நோக்கும்போது மனிதனை விலங்குகளோடு கூட்டியுரைத்தல் பொருந்துவதாகலாம். சிற்சில பிராணிகள் மனிதனைவிடவும் கூரிய புலனாற்றல் வாய்ந்தனவாய் உள்ளன. கட்புலனில் பறவையும், நாசிப் புலனில் நாயும், செவிப் புலனில் முயலும் மனிதனைவிடச் சக்தி பெற்றிருக்கின்றன. ஆனால் மனிதனே இவ் ஐவகைப் புலன்களுக்கும் மேம்பட்டதும், அவற்றை அடக்கி ஆள வல்லதுமான அறிவு ஒன்றைச் சிறப்பாகப் பெற்றிருக்கிறான். இவ்வறிவால் உலகப் பொருள்களைப் பகுத்துணர்ந்து ஆராய்வதற்குரிய வல்லமை அவன்பால் அமைந்துள்ளது. பகுத்தறிவின் உதவியால் மனிதன் முதலில் உருவிலும், வலியிலும் மிக்க குதிரை யானை முதலிய வனவிலங்குகளை அடக்கி அவற்றைத் தனது நன்மைக்காகப் பயன்படுத்தினான். அதன்பின் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் இயற்கைச் சக்திகளின் இயல்பை அறிந்து அவற்றை ஏவல் கொள்ளத் தெரிந்துகொண்டான். இதனால் நீர்மேல் மிதக்கவும், காற்றிலே கடுவிசையில் பறந்து செல்லவும், மிகத் தொலைவிலுள்ள பொருள்களைக் காணவும், உலகிலுள்ள எல்லா மக்களும் ஒரே சமயத்தில் கேட்கும்படி பேசவும், அணுவைப் பிளந்து பிரமாண்டமான சக்தியை வெளிப்படுத்தவும் ஆற்றல் பெற்றிருக்கிறான்.

பகுத்தறிவு காரணமாக மனிதன் ஏனைய விலங்குகளிலிருந்து வேறு பிரித்துத் தனியாக எண்ணப்படுகின்ற நிலைக்கு

உயர்ந்திருக்கிறான். நன்னூலாரும் பொருள்களை இரு திணைகளாகப் பாகுபாடு செய்யும்போது இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டே

> மக்கள் தேவர் நரகர் உயர்திணை
> மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை (பெயர். 4)

எனச் சூத்திரம் செய்தார். இங்கே அவர் பகுத்தறிவுக்குக் கொடுக்கப்படும் சிறப்பு சிந்தித்தற்குரியதாகும். மக்களைப் போன்று ஏனைய விலங்கினங்களுக்கும் உயிர் இருக்கிறது. ஆயினும் பகுத்தறிவு அமையப்பெறாத காரணத்தால் அவை மக்களினின்றும் தாழ்ந்து, அவர்களிலிருந்து வேறாகப் பிரித்து எண்ணப்படும் நிலையில் உள்ளன. மேலும் ஒன்று முதல் ஐந்துவரையுள்ள புலனறிவுகளை உடையவாயினும், சில வேளைகளில் மனிதனுக்கிருப்பதைவிட மிகக் கூரியவாக அவற்றைப் பெற்றிருப்பினும், அம் மிருகங்கள் பகுத்தறிவொன்றில்லாத ஏதுவால் அவ் அறிவுகளுள் ஒன்றுமே பெறாத கல் முதலிய உயிரற்ற பொருள்களோடு சேர்த்து எண்ணப்படும் இழிநிலையில் இருக்கின்றன. எனவே, பகுத்தறிவு இருந்தால் மட்டும் ஏனைய புலன்களும் உள்ளனவாகக் கருதப்படும்; அஃதில்லையேல் அப்புலன்கள் இருந்தும் இல்லாதனவேயாம். இதுவே நன்னூலார் கருத்தாகும்.

நன்னூலின் முதனூலாகிய தொல்காப்பியத்திலே பகுத்தறிவுக்கு மிக வெளிப்படையான ஓர் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் பகுத்தறிவை ஆறாவது அறிவாகக்கொண்டு அவ்வறிவு பெற்ற மக்களை ஏனைய உயிர்களினின்றும் வேறு பிரித்துத் தனியாகக் கூறுகின்றார்.

மக்கள் தாமே ஆறறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே. (தொல். மரபு. 33)

புலனறிவின் எண்ணிக்கையைக் கருதி மக்களையும் புள் விலங்கு முதலிய வற்றோடு சேர்த்துக் கூறிய நன்னூலாரது பாகுபாட்டினும் பகுத்தறிவின் அடிப்படையில் மக்களைத் தனியாகப் பிரித்து ஓதிய தொல்காப்பியரது முறை வைப்பு சாலச்சிறந்ததாகும்.

இப்பகுத்தறிவின் காரணமாகவே மனிதன் தன் புலனுணர்வுகளை நெறிப்படுத்துகிறான். விலங்குகளில் பசு, நாய் முதலியவற்றில் பகுத்தறிவு சிறிதளவு புலப்படுகிறது. ஏனையவற்றில் அவ்வறிவு அமையப்பெறவில்லை. மிருகங்களின் வாழ்வில் காணப்படும் இயக்கங்கள் புலனுணர்ச்சியால் தூண்டப்படுகின்றன. இப் புலன்களினும் வேறான உணர்ச்சி அவற்றிடம் அமைந்திருக்கவில்லை. அவற்றில் உள்ளுணர்ச்சி என்று பேசப்படுவதெல்லாம் இப் புலனுணர்ச்சியேயாகும். ஆதிகால மனிதனும் மிருகங்களைப் போன்று புலனுணர்ச்சியையே தன் உள்ளுணர்ச்சியாகப் பெற்றிருந்தான். பச்சிளங் குழந்தைகளிலும் புலனுணர்வே உள்ளுணர்வாக அமைகிறது. ஆயினும் அவ்வுள்ளுணர்வு வளர்ந்து பகுத்தறிவாகப் பரிணமிப்பதற்குரிய ஓர் அற்புதப்பண்பு அதன்பால் இயற்கையிலேயே அமைந்துள்ளது.

பகுத்தறிவு செவ்வையாக வளர்வதற்கு ஐம்பொறிகளும் பழுதின்றி அமையவேண்டியது அவசியமாகும். பொறிகளே அறிவு பெறுவதற்குரிய வாயில்கள். கண்கள் குருடாகவோ, காதுகள் செவிடாகவோ இருந்தால் ஒருவனது அறிவு அம்மட்டிற்குக் குறையுடையதாய் இருப்பதை நாம்

அறிவோம். அதுபோலவே, பொறிகள் எவ்வளவு வலி யுடையனவாய் இருந்தாலும் சூழ்நிலைகள் தக்கவாறு அமை யாமற்போனால் பகுத்தறிவு வளர்ச்சியடைவதில்லை. இது சம்பந்தமான பல சோதனைகள் மேல் நாடுகளில் நிகழ்த்தப் பட்டுள்ளன. ஒரு குழந்தையை அது பிறந்தபொழுதே மனித இனத்திலிருந்து பிரித்துத் தனி அறையில் வளர்த்து வந்தனர். சில ஆண்டுகள் சென்றபின் அதன் அறிவைப் பரிசோதித்தபோது அது மிருக நிலையிலேயே இருப்ப தைக் கண்டனர். பின்னர் அவ் இளைஞனை மக்கள் இனத் தோடு வாழ்ந்துவரச் செய்தபோது அவனது பகுத்தறி வும் படிப்படியாக வளரத் தொடங்கியது.

இதனால் சமூகமே அறிவு வளர்ச்சிக்குரிய நிலையம் என் பது தெளிவாகிறது. மக்களின் கூட்டுத் தொகுதியே சமூ கம் ஆகும். சமூகத்தைச் சார்ந்த ஒரு மனிதன் தன் இயற்கை நுண்ணுணர்வாலும், உழைப்பாலும் பெறும் அறிவு பின்னர் அச் சமூகம் முழுவதிற்கும் உரியதாகிறது. அந்தச் சமூகத் தில் பிறந்து வளர்கிற ஒரு குழந்தை அவ்வறிவு முழுவதை யும் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டு, அதன்பின் அவ்வறி வின் அடிப்படையில் நின்று மேலும் அறிவைத் திரட்ட முயல்கிறது. அது ஈட்டும் அறிவும் சமூகத்திற்கு உரியதாகி சமூக அறிவை மேலும் வளம்படுத்துகிறது. இவ்வாறு காலந்தோறும் அறிவு வளர்ந்துகொண்டே வருவதால் சமூக நிலை மேன்மேலும் முன்னேறிச் செல்கிறது.

ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த அறிஞர்கள் தம் அரு முயற்சியால் ஈட்டும் அறிவுச் செல்வத்தை வருங்கால மக்க ளுக்குப் பயன்படும்பொருட்டு நூல்களாக எழுதி வைத்த னர். இவையே பிற்காலத்தவர்கள் போற்றும் அறிவுச் சுரங்

கங்கள். இந்நூல்கள் தொகுத்து வைக்கப்பட்ட இடங்கள் நூல் நிலையங்கள் என்று பெயர் பெற்றன. நாகரிகமிக்க நாடுகளிலெல்லாம் நூல் நிலையங்கள் இருந்தன. அவற்றை அந்நாட்டு மக்களும் அரசர்களும் கண்ணேபோல் காத்து வந்தனர். தமிழ் நாட்டிலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த புலவர்கள் தமக்கு முன்னிருந்த அறிஞர்கள் பாடி வைத்துச் சென்ற பாடல்களைத் திரட்டி வகைப்படுத்தி நற்றிணை, குறுந்தொகை முதலிய பெயர்களால் சங்கத்திலே தொகுத்து வைத்தனர். உரோம சாம்ராஜ்யம் மிக உன்னத நிலையில் இருந்த காலத்தில் கான்ஸ்டான்டிநோபிள் என்ற இடத்தில் மிகப் பெரிய நூல் நிலையம் ஒன்று இருந்ததாகவும், பதினைந்தாம் நூற்றாண்டில் துருக்கியர் உரோம ராஜ்யத்தின்மீது படையெடுத்துச் சென்றபோது அந்நாட்டினர் விலைமதித்தற்கரிய அவ் இலக்கியச் செல்வங்களை எடுத்துக்கொண்டு மேற்குத் திசை நோக்கிச் சென்றதாகவும், அப்பொழுது அவ் அறிவுச் செல்வத்தை ஐரோப்பிய மக்கள் பலரும் அறிவதற்கு இடமாயிற்றெனவும், அதன் விளைவாகவே ஐரோப்பிய நாடுகளில் மறுமலர்ச்சி (Renaissance) தோன்றிற்றெனவும் மேனாட்டு மொழிவரலாற்றாசிரியர் கூறுவர். இந்நாளிலும் நூல் நிலையங்கள் ஒரு நாட்டின் நாகரிகத்தை மதிப்பிடுவதற்குரிய அளவுகோலாகக் கருதப்படுகின்றன.

இத்தகைய அறிவுச் சுரங்கத்தை மக்கள் அடைவதற்குரிய வழிகள் இரண்டு. அவை கற்றல், கேட்டல் என்பனவாம். ஒரு நூலை ஒருவன் தானே வருந்திக் கற்பது கற்றல் என்றும், கற்றறிந்த பெரியோர் வாயிலாக அரிய நூற்பொருள்களைக் கேட்டு உணர்வது கேள்வி என்றும்

பொதுவாகக் கூறலாம். நூலைத் தனியாகக் கற்கும் போது ஏற்படும் ஐயங்கள் யாவும் அறிவுடையோர்பால் அந்நூற்பொருளைக் கேட்கும்போது நீங்கி அறிவு விளக்க மடைகிறது. தானே முயன்று ஒன்றைக் கற்பது மிகக் கஷ்டமானதாகும். அதற்குக் காலமும் அதிகம் வேண்டும். நல்லாசிரியர்களிடம் பாடம் கேட்கும்போதோ அவர்கள் அரும் பொருளாக இருந்தாலும் கேட்போர் தகுதியறிந்து வழங்கி அதனை அவர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிய வைப்பர். இக்காரணங்களால் "கற்றலிற் கேட்டல் இனிது" என்ற பொருளுரை எழுவதாயிற்று.

மனிதனது அறிவு வளர்வதற்கும் உள்ளம் பண்பட்டு வாழ்க்கை சிறப்பதற்கும் கல்வி கேள்விகளினும் சிறந்த கருவி வேறில்லை. இதனாலேயே ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒழுக்க நூல்களும் கல்வி கேள்விகளின் அவசியத்தை நன்கு வற் புறுத்தி வந்துள்ளன. திருவள்ளுவரும் கல்வியின் அவசி யத்தை ஒரு தனி அதிகாரத்தில் வற்புறுத்திக் கூறியதோடு அமையாமல், கல்லாமையால் வரும் தீமையையும் வேறோர் அதிகாரத்தால் விளக்குகின்றார். அதனையடுத்துக் கேள்வி என்ற அதிகாரத்தை அமைத்து அதன் நன்மைகளை எடுத்துரைக்கின்றார்.

கல்வியின் சிறப்பைக் குறித்து அவர் கூறுவனவற்றை நாம் நினைவிற் கொள்ளுதல் தகும். மனிதனின் உடலி லிருக்கும் உறுப்புக்களில் கண்கள் மிக முக்கியமானவை. அவை அவனுக்குப் பார்வையையும் அழகையும் அளிக்கின் றன. கண்ணற்ற குருடர்களது அவலநிலை யாவரும் அறிந் ததே. இத்துணை முதன்மை வாய்ந்த கண்களைப் பெற்ற வன் என்று ஒருவன் சிறப்பிக்கப்படவேண்டுமானால் அவன்

976

கல்வி கற்றவனாக இருக்கவேண்டும். கல்வியறிவில்லாத ஒருவனது முகத்திலிருக்கும் கண்கள், கண்கள் என்று கூறப்படாவாம். அவற்றைப் புண்கள் என்று கூறுவதே பொருந்தும் என்கிறார் வள்ளுவர்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர். (393)

வள்ளுவர் மேலும் கல்வியை ஒரு செல்வமாக மதிக்கின்றார். செல்வத்தினும், பொன் மணி முதலியவற்றிற் சிறந்ததும் அழிவற்றதுமான விழுச்செல்வம் அது என்கிறார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. (400)

என்னும் குறளினைக் காண்க.

இம்மை மறுமைகளில் நம்பிக்கையுடைய வள்ளுவர் அதன் மூலமாகவும் கல்வியின் பெருமையை விளக்குகின்றார். ஒருவன் ஒரு பிறவியில் அடைகின்ற கல்வி, அப்பிறவியோடு அழிந்துபோவதில்லை; எழு பிறவிகளில் அவனுக்குத் துணையாக நிற்கும் என்கிறார்.

மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்; ஆதலின் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. எந்த நாடும் எந்த ஊரும் அவருக்குச் சொந்த நாடும் சொந்த ஊரும் போலாகும். இவ்வளவு பெருமையைத் தரும் கல்வியை மக்கள் இறக்குமளவும் ஏன் கல்லாதிருக்கின்றார்கள் என்று வள்ளுவர் கேட்கின்றார்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (397)

கல்லாமை என்ற அதிகாரத்தில் நூல்களைக் கற்று அறிவு பெற்றவர்களே மக்கள் எனப்படுவர் என்றும், கல்லாதவர்கள் விலங்குகளுக்கு ஒப்பாவர் என்றும் அவர் கூறுகின்றார். பகுத்தறிவானது நூல்களைக் கற்பதன் மூலம் விளக்கம் பெறுகிறது. நூல்களைக் கல்லாதவன் அறிவு பெரும்பாலும் மிருகங்களின் புலனறிவை ஒத்திருக்கும். பல நூல்களையும் கற்றுப் பகுத்தறிவை வளர்ப்பதன் மூலமே மனிதன் விலங்கு நிலையிலிருந்து மேம்பட்டு உயர்திணையாக எண்ணப்படும் சிறப்புக்கு உரியவனாகிறான். உயர்திணை பற்றிய நன்னூலார் கருத்து இக் குறளாலும் வலியுறுகின்றது.

கேள்வி என்ற அதிகாரத்தில் கேள்வியால் பெறும் ஞானத்தைச் செவிச் செல்வம் என்ற செஞ்சொல்லால் வள்ளுவர் குறிப்பது நயமுடையதாகும். முன் கல்லாதவனது முகத்திலிருக்கும் கண்களைப் புண்களென்று இழித்துக் கூறியதைப்போலவே கேள்வி ஞானம் பெறாத காதுகளை செவிட்டுக் காதுகள் என்று பழித்துரைக்கின்றார். எனவே, நூல்களைக் கற்க முடியாவிட்டாலும் அறிவுரைகளையாவது ஆன்றோர்களிடமிருந்து கேட்கவேண்டும்; உறுதிப் பொருள்களனைத்தையும் கேட்க முடியாவிட்டாலும் சிறிதளவாவது கேட்கவேண்டும்; அக்கேள்வி அம்மட்டிற்கு நன்மைதரும்; அது வழுக்கு நிலத்தில் ஊன்றுகோல்போல் உதவிபுரிய வல்லது. இவ்வாறு வள்ளுவர் கேள்வியின் சிறப்பைப் பாராட்டுகிறார்.

அறிவுச் செல்வம் கால தேச நியதிகளின் கட்டுப்பாட்டிற்குள் அடங்குவதில்லை. ஓர் அறிஞன் எந்த நாட்டில் தோன்றினாலும் அவனும், அவனது பேரறிவும் அவனியற்றும் அரிய நூல்களும் உலகிலுள்ள எல்லா மக்களுக்

கும் உரிய பொதுச் சொத்தாகும். அம் மேதையின் மொழியை அறிந்தவர்களுக்கு அவரது நூல்களை நேரில் கற்றுணர முடியும். அம்மொழியை அறியாதவர்கள் மொழி பெயர்ப்பின் வாயிலாக அவற்றை உணர்ந்துகொள்ளலாம். ஒவ்வொரு மொழியிலுமுள்ள அரிய நூல்கள் பிற பாஷை களில் மொழிபெயர்க்கப்படுவது அறிவு வளர்ச்சிக்கு உறு துணையாக இருக்கும். ஒரு மொழியிலே ஒரு மேதை தோன்றினல் அம் மொழிவாணர்கள் அதனுல் பெருமை கொள்ளுவதற்கு நியாயமுண்டு. ஆனல் அம்மேதை அம் மொழிவாணர்க்கு மட்டுமே உரியர் எனக் கூறுவதும், அவர் அருளிய அறிவைப் பிறர் அறியாதபடி மறைத்து வைத்துத் தாமே அனுபவிப்பதும் அதர்மமாகும். சூரிய சந்திரர்கள்போல அறிஞர்கள் உலக முழுவதிற்கும் பொது வாக உரிய செல்வங்கள். அவர்களது அறிவுச்சுடர் எல்லா மக்களின் உள்ளத்திலுமுள்ள அஞ்ஞான இருளைப்போக்கி ஞான ஒளியை நல்க வல்லது. அவர்கள் எய்ப்பில் வைப்பாக வைத்துப்போன அறிவுச் செல்வத்தை ஒவ்வொருவரும் தமது உழைப்பால் ஈட்டும் கல்வியாலும், பிறர் வாயால் பெறும் கேள்வியாலும் அறிந்து அனுபவிக்கவேண்டும். அத ேேடு தாமும் அவ் அறிவுத் துறையில் முயன்று தம்மால் இயன்ற புதிய அறிவைத் திரட்டி அதனை உலகிற்கு வழங்க வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக ஒருவன் பெற்ற அறிவு அவனது ஒழுக்கத்தில் வெளிப்படுதல் வேண்டும். ஒழுக்கத்தில் பரிணமிக்காத அறிவு ஜீரணமாகாத உணவைப் போன்று பயனற்றதாகும். அறிவின் பயனெல்லாம், அத னுல் வாழ்க்கை செம்மைப்படுதலேயாம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (391)

என்று வள்ளுவர் இவ்வுண்மையையே வற்புறுத்துகின்றார். ஆகவே கல்வி கேள்விகளால் பெற்ற அறிவினால் சிறந்த ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்வது ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகும்.

3. ஒழுக்கம்

தற்காலத்தில் நிகழும் மாறுதல்கள்

1. அரசியல்

இருபதாம் நூற்றாண்டின் நடுவாகிய இக்காலப்பகுதி, பொதுவாக உலக சரித்திரத்திலும், சிறப்பாக நமது இந்திய நாட்டின் வரலாற்றிலும் பல அம்சங்களில் முதன்மை வாய்ந்ததாகும். பல நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்த கருத்துக்களும் கொள்கைகளும் புரட்சிகரமான மாறுதல்களை அடைந்துவருகின்றன. அரசியல், சமூகம், சமயம், இலக்கியம் முதலிய துறைகள் அனைத்திலும் தலைகீழான மாற்றங்கள் தோன்றியுள்ளன. "மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்ற கொள்கை பெரும்பாலும் மறைந்து, குடியரசே பல தேசங்களிலும் அமைந்து வருகிறது. வல்லரசும், ஸாம்ராஜ்யமும், எதேச்சாதிகாரமும் தகர்ந்து விழுகின்றன. ஏழை, அடிமை என்னும் நிலைகள் மாறி மக்கள் அனைவரும் சரிநிகர் சமானம் என்ற அடிப்படையில் ஒரு புதிய அரசியலமைப்பை உலகமெங்கும் நிறுவுவதற்கான முயற்சி எல்லா நாடுகளிலும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. சமூகம்

சமூக அமைப்பை நோக்குமிடத்தும் சாதி, குலம், குடிப்பிறப்பு, ஆசாரம், உயர்வு, தாழ்வு, தீண்டாமை முதலிய பழங்கொள்கைகள் நலிவுற்று சமத்வம், சகோதரத்

வம், சமபந்திபோஜனம், கலப்பு விவாகம், மறுமணம் முதலிய புதுக் கொள்கைகள் சக்திபெற்று வருகின்றன.

3. சமயம்

சமயத் துறையிலும் கோவில், அர்ச்சகர், வழிபாடு, திருவிழா அனைத்தும் பொருளற்றவை என்றும் அவை பேதமைக்கும் அனுசாரத்திற்கும், வகுப்புணர்ச்சிக்கும் புகலிடமாகவுள்ளன என்றும் மக்களில் ஒரு பெரிய இனம் கருதி வருகிறது.

4. இலக்கியம்

இலக்கிய உலகில் பழைய இலக்கியங்கள் புதிய நோக்கோடு ஆராயப்படுகின்றன. தற்காலக் கொள்கைகளுக்குப் பொருந்தாத இலக்கியங்களையும், புராண இதிகாசங்களையும இக்காலப் பேனு வீரர்கள் கடுமையாகத் தாக்கி அழிக்கக் கங்கணம் கட்டியுள்ளனர். அரசரையும், அமைச்சரையும், செல்வந்தர்களையும் கதாநாயகர்களாகக் கொண்டு, கற்பனையும் புனைந்துரையும் கலந்து பண்டிதர்க்காகப் பாடிய காலம் மலையேறிவிட்டது. பாட்டாளி மக்களையும், பரம ஏழைகளையும் பாத்திரமாகக் கொண்டு அவர்களது வாழ்க்கையை உள்ளவாறு பண்டிதரேயன்றிப் பாமரரும் கற்கும் வகையில், எளிய முறையில் சித்திரிக்கும் இலக்கியங்களே இக்காலத்தில் விரும்பப்படுகின்றன.

ஒழுக்கம் குன்றுதலின் காரணங்கள்

1. இளைஞர்களின் உணர்ச்சிப் பெருக்கு

இத்தகைய புரட்சி இயக்கங்களை முன்னின்று நடத்துகிறவர்கள் பெரும்பாலும் உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்

க்ளேயர்வர். அயல் நாடுகளிலிருந்துவரும் புத்தம் புதிய கொள்கைகள் அவர் உள்ளத்தை மிக விரைவாகவும் அழுத்தமாகவும் பற்றிக் கொள்கின்றன. அக் கொள்கைகள் நமது நாட்டிற்கு ஏற்குமா என்பதையும், ஏற்பனவாயின் அவற்றை நடைமுறையில் கொண்டுவருவதற்குரிய வழிகள் யாவை என்பதையும் ஆர அமரச் சிந்திப்பதற்குமுன்பு தானே அவர்கள் செயலிற் குதித்துவிடுகிறார்கள். அப் பொழுது காரிய சித்திக்கு எந்த வழி எளிதாகத் தோன்றுகிறதோ அதனை மேற்கொள்ள அவர்கள் தயங்குவதில்லை. இதனால் ஒழுக்கத்தின் வரம்புகள் மீறவும் சிதைக்கவும் படுகின்றன.

2. சுதந்திரம் பெற்ற புது ஆவேசம்

தற்காலத்தில் நமது நாட்டில் ஒழுக்கத்தைப் பற்றிய மதிப்புக் குறைந்திருப்பதற்கு வேறு காரணங்களும் உண்டு. சுமார் இருநூறு ஆண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அல்லலுற்ற மக்கள் இப்பொழுது சில ஆண்டுகளாகத்தான் விடுதலைபெற்று சுதந்திரமாய் வாழ்ந்துவருகின்றனர். சுதந்திரம் பெற்ற புது ஆவேசத்தில் அவர்களில் பலரும் கட்டவிழ்த்துவிட்ட இளங் காளைகள் போன்று ஒழுக்க நெறிகளைப் பொருட்படுத்தாமல் மனம்போன போக்கில் சென்றுவிடுகின்றனர்.

3. பிறநாட்டார் தொடர்பு

மூன்றாவதாக நாம் இன்று உலகிலுள்ள பலதேசத்தவரோடும் கல்வி, தொழில், வியாபாரம், அரசியல் முதலிய ஏதுக்களால் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்துவருகிறோம். நம் மக்கள் அயல் நாடுகளில் சென்று

தங்குகின்றனர்; அயல் நாட்டவர் இங்கு வந்து நம்மிடையே வாழ்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவகையான நடை, உடை, பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள் இருந்துவருகின்றன. இவ் அந்நிய நாட்டாரது தொடர்பால் நம் நாட்டுப் பரம்பரை ஒழுக்கங்கள் உறுதிகுலைந்து நெகிழ்ச்சியடைகின்றன.

ஒழுக்கத்தின் அவசியம்

மேற்கூறிய காரணங்களால் நம் முன்னோர்கள் நெடுங்காலமாக அரிதின் முயன்று ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைத்த நாகரிக மாளிகை அடியோடு தகர்ந்துவிடும்போல் தோன்றுகிறது. ஒழுக்கம் தளர்ச்சியுறும்போது காட்டு விலங்குகளினிடையே காணப்படும் "பலவான் ஜயவான்" (Might is right) என்னும் விதியே எங்கும் நிலவும் என்பதில் ஐயமில்லை. மனித சமூகத்திற்கு இதனினும் இழிந்த நிலை வேறு என்ன இருக்கிறது? ஒழுக்க நெறிகளை மக்கள் பேணிப் போற்றுதல் எக்காலத்திற்கும் அவசியமேயாயினும் அரசியல், சமூகத் துறைகளில் ஏற்பட்ட கொந்தளிப்பால் பழைய நிலைமைகள் மாறிப் புதிய கருத்துக்களும் கொள்கைகளும் உருவாகும் இவ்வேளையில் ஒழுக்கத்தின் இயல்புகளைச் சிந்திப்பதும், அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதற்கான உறுதியை மேற்கொள்வதும் இன்றியமையாதனவாம்.

ஒழுக்கமாவது யாது?

ஒழுக்கம் ஒரு சித்தாந்தமோ, மதமோ அல்ல; அதனைச் சிறந்த வாழ்க்கை முறை அல்லது நன்னடக்கையின் வரம்பு என்று கூறலாம். ஒழுக்கம் சமூகத்தின் அங்கமாக

வுள்ள ஒவ்வொரு மனிதனது முயற்சியையும் செயலையும் நெறிப்படுத்தி அவன் சிறந்த முற்போக்கை அடைவதற்குத் துணைசெய்வதோடு அவனது வாழ்க்கையை அழகும் இன்பமும் பயனும் நிறைந்ததாகவும் அமைக்கிறது.

ஒழுக்க உணர்வின் உதயம்

இவ் ஒழுக்க உணர்வு மாந்தர் உள்ளத்தில் இயற்கையிலே தானாக அரும்புவதில்லை. ஒரு குழந்தையை அது பிறந்த போதே மக்கள் இனத்திலிருந்து பிரித்துத் தனியாக வளர்த்து வந்தால், அது ஒழுக்கத்தைக் குறித்த சிந்தனை எதுவுமின்றி விலங்குகளைப் போலவே வளர்ந்து வரும். பின்னர் அக்குழந்தையை அதன் பெற்றோர்களிடையே வாழ்ந்துவரச் செய்தால் அது அவர்களது ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுகிறது. அவ்வாறன்றி அதனைத் தூர தேசத்திற் கனுப்பிப் புதியதோர் சூழ்நிலையில் வாழ்ந்துவரச் செய்தால் அது அங்குள்ள மக்களின் ஒழுக்க முறைகளைச் சிறிது சிறிதாக உணர்ந்து மேற்கொள்ளுகிறது. இதனால் இனத்தோடு சேர்ந்து வாழும் நிலையில்தான் மனிதனுக்கு ஒழுக்கத்தைப் பற்றிய உணர்வு உதயமாகிறதென்றும் அவ்வுணர்ச்சியும் வாழும் சூழ்நிலைக்குத் தக்கவாறு வேறுபடுகிறதென்றும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

ஒழுக்கத்துள் அடங்கும் பண்புகள்

உலக வழக்கிலே ஒருவனை ஒழுக்கமில்லாதவன் என்று சொன்னால் அவன் அயல் மாதர்களிடம் முறைகேடாக நடந்துகொள்வதையே நாம் முக்கியமாக எண்ணுகிறோம். ஆனால் ஒழுக்கம் என்பது இவ் ஒரு பண்பினுல் மட்டும்

அடங்கியிருக்கவில்லை. நமது முன்னோர்கள் பொய், களவு, சூது, கள்ளுண்டல், காமம், கொலை என்பனவற்றை மா பாதகங்கள் என்று பழித்து வந்தார்கள். இக் கொடிய செயல்களைப் புரிபவர்கள் வேறு எத்தகைய தகுதிகளைப் பெற்றிருந்த போதிலும் ஒழுக்கமில்லாதவர்கள் என்று பழிக்கப்பட்டு நன்மக்கள் வெறுப்புக்கும் அரசாங்கத் தண்டனைக்கும் ஆளாகிப் பல துன்பங்களை அடைவார்கள்.

இனி ஒருவனை ஒழுக்கமுடையவன் என்று சொல்ல வேண்டுமானால் ஆன்றோரால் பழிக்கப்படும் இக்குறைகள் அறவே இல்லாமல் இருப்பதோடு மேலும் பல நற்குணங்களும் நிரம்பியவனாதல் வேண்டும். அவை அன்பு, இன்சொல், ஈகை, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், சினங்காத்தல், தீவினையச்சம், செய்நன்றியறிதல், நடுவு நிலைமை, பண்புடைமை, கற்பு, மானம் முதலியனவாம். மேற்கூறிய நற்பண்புகள் அமையப்பெறாத காரணத்தால் ஒருவன் அரசாங்கத் தண்டனைக்கு ஆளாகப்போவதில்லை. எனவே இவற்றைச் சட்ட நியதிகளுக்குப் புறம்பான ஒழுக்கம் (Non-legal-virtues) என்று கூறலாம். இவ்வொழுக்கங்களைப் பெரும்பாலோரும் அத்தனை முக்கியமாகக் கருதுவதில்லை. அவற்றை மீறி நடப்பதைப் பெருங்குற்றமாகவும் எண்ணுவதில்லை. அதனால் சமூகவாழ்வில் நேரிடுகின்ற சீர்கேடுகள் பலவாம். இவ்வுண்மையை உணர்ந்தே நம் முன்னோர்கள் அப் பண்புகளனைத்தையும் நல்லொழுக்கத்தின் அங்கமாக வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். இதிலிருந்து ஒழுக்கம் என்னும் சொல் மிக்க வியாபகமான பொருளையுடையது என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஒழுக்கம் என்ற சொல்லை ஓர் இலக்கணத்துக்குள் வரையறை செய்வது எளிதல்ல. வாய்மை, இன்சொல் முதலிய பண்புகளுக்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர் ஒழுக்கத்திற்கு இலக்கணம் கூருது செல்கின்ருர். திருக்குறளுக்கு உரை இயற்றிய பரிமேலழகர் "ஒழுக்க முடைமை யாவது, தத்தம் வருணத்துக்கும், நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை யுடையராதல்" என்று பொருள் கூறுகின்ருர். இக்கருத்து வள்ளுவர்க்கும் உடன்பாடே என்பதை,

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (132)

என்று அவர் கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மேலும்,

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (139)

ஒழுக்காருக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. (161)

என்னும் குறள்களில் தீயசொல் வழங்காமை, அழுக்காருமை ஆகிய பண்புகளையும் ஒழுக்கத்தின் பகுதியாக வள்ளுவர் கூறுவதிலிருந்து ஒழுக்கம் என்னும் சொல்லின் வியாபகத்தை அவரும் உடன்படுகிருர் என்பது தெளிவாகிறது.

ஒழுக்கமும் இயற்கை உணர்ச்சியும்

மனிதன், இயல்பிலே தன்னலம், முரண், பகைமை முதலிய பண்புகளை உடையவனுக இருக்கிருன். அவன் வாழும் உலகமும் வாழ்க்கைக்காகப் போராடும் ஒரு போர்க்

ளமாகவே காணப்படுகிறது. வாழ்க்கைப்போருக்குத் தகுதியுள்ளவனே உலகில் அழியாமல் நிலைத்து வாழக்கூடும். ''Survival of the fittest'' என்பது ஒரு நியதியாகும். ஆகவே மனிதன் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு மேற் சொன்ன பண்புகள் கூர்ந்திருத்தல் மிக இன்றியமையாததா கும். ஆனால் ஒழுக்கமோ அவ்வியற்கைப் பண்புகளுக்கு முரணாக உள்ளது. அது மனிதனது உணர்ச்சிகளுக்கு வரம்பு கோலி நெறிப்படுத்தப் பார்க்கிறது. அதனை மனிதன் தன்னலத்திற்கும் தான் செய்யும் வாழ்க்கைப் போருக்கும் ஒரு தடையாக எண்ணுகிறான். ஆகவே அவ்வொழுக்க விதிகளை மீறுவதற்கே அவன் உள்ளம் முற்படுகிறது.

இது மனித இயல்பின் ஓர் அம்சம். அதன் மற்றோர் அம்சத்தையும் நாம் எண்ணுதல் வேண்டும். மனிதன் தன்னலம் முதலிய பண்புகளை உடையவனாயினும் தன்னந்தனியாக வாழ்வது அவனது இயற்கையல்ல. அவன் சமூகமாக வாழ்கின்ற ஒரு ஜீவி. மிகப் பழங்கால முதலே அவன் இனத்தோடு சேர்ந்து சமூகமாகவே வாழ்ந்து வந்திருக்கிறான். அவ்வாறு வாழ்வது கொடிய விலங்குகளினின்று தன்னைக் காத்துக்கொள்வதற்கும் வாழ்க்கையில் நேரிடுகின்ற பல இன்னல்களைப் போக்குவதற்கும் இன்றியமையாததாயிற்று. இச் சமூக வாழ்வில் மனிதன் தன்னலம் முதலியவற்றை விட்டுப் பிறர்நலம் பேணல், ஒற்றுமை முதலிய ஒழுக்க நெறிகளை மேற்கொள்ளவேண்டியவனானான். நாளடைவில் ஒழுக்க உணர்வும் அவனது பண்புகளுள் ஒன்றாக அமைந்தது.

மனிதனது வரலாற்றின் ஒவ்வொரு நிலையிலும், தன்னலத்திற்கும் சமூக நலத்திற்கும் உரிய போராட்டம்

நிகழ்ந்துவருகிறது. தன்னலம் வெல்லும்போது மனிதன் ஒழுக்கத்தின் வரம்பை மீறிவிடுகிறான். சமூகநலன் வெல்லும்போது ஒழுக்க நெறிக்கு உட்பட்டுக் காரியம் செய்கின்றான்.

ஒழுக்கம் குறள்நெறி

சமூக முன்னேற்றத்திலும் நாகரிக வளர்ச்சியிலும் ஆர்வமுடைய சான்றோர்கள் ஒழுக்கத்தையே அவற்றை அடைவதற்குரிய நெறியாக வற்புறுத்தி வந்துள்ளார்கள். வள்ளுவர் பெருமான் ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாகப் போற்றவேண்டு மென்கிறார்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (131)

என்பது அவர் அருள்வாக்கு.

திருவள்ளுவர் ஒழுக்கத்தின் பொது இயல்புகளை 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத்திலும், அதன் பல்வேறு அம்சங்களை 'அறன்வலியுறுத்தல்' முதலிய பல அதிகாரங்களிலும் வற்புறுத்தியதோடமையாமல் ஒழுக்கத்திற்குப் பகையான பண்புகளைக் 'கூடா ஒழுக்கம்' என்ற தனி அதிகாரத்திலும் வைத்து விளக்குகின்றார். ஒழுக்கத்திற்கு மூலமாக அமைந்த அறத்தைக் கூறும்போது "மனத்துக்கண் மாசிலனாதல் அறம்" என்றும், "அறத்தான் வருவதே இன்பம்" என்றும் "செயற்பால தோரும் அறனே" என்றும் கூறினர். அறச்செயல்களுக்குப் புறம்பான தீவினைகளை ஒவ்வொருவரும் நீக்கவேண்டும் என்பவர்,

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (202)

என்றும் எச்சரிக்கை செய்தார். 'வாழ்க்கைத்துணை நலம்' என்ற அதிகாரத்தில் பெண்ணின் நிறைபுடைமையாகிய'

கற்பைக் கூறியவர், 'பிறனில் விழையாமை' என்ற அதிகாரத்தில் அப் பண்பு ஆடவர்க்கும் இன்றியமையாததென்று வற்புறுத்தினர். ஈகையைக் கூறும்போது,

வறியார்க்கொன் றீவதே ஈகை

என இலக்கணம் வகுத்துப் பின்னும்,

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (222)

என ஈதலின்உயர்வையும் இரத்தலின் இழிவையும் ஒருங்கே கூறினர்.

ஒழுக்கத்தின் எந்த அம்சத்தை வற்புறுத்தினும் உலக நன்மையை முன் நிறுத்திக் கொண்டு கூறுவதே வள்ளுவரது இயல்பாகும். உதாரணமாக, வாய்மைக்கு அவர் வகுக்கும் இலக்கணத்தைக் கூறலாம். உள்ளதை உள்ளவாறு கூறுவதே வாய்மை என்று பொதுவாக நாம் எண்ணுகிறோம். "கண்டொன்று சொல்லேல்" என்ற ஆத்திசூடி விதியும் இதனை ஆதரிக்கிறது. ஆனால் வள்ளுவர்க்கோ இக்கருத்து உடன்பாடல்ல. ஒரு சொல் உண்மை நிகழ்ச்சியோடு எத்துணை பொருந்தியதாயினும் அதனால் பிறர்க்குத் தீமை விளையுமானால் அதனைப் பொய்யென்றுகொள்வதும், அது உண்மை நிகழ்ச்சியோடு ஒவ்வாதாயினும் குற்றமற்ற நன்மையைப் பயக்குமானால் அதனை வாய்மை என்று கொள்வதுமே வள்ளுவனர் கொள்கையாகும்.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். (291)
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். (292)

என்று உலக நன்மையின் அடிப்படையில் அவர் வாய்மைக்குக் கூறும் இலக்கணம் ஒரு புதுமுறையாகவே அமைந்துள்ளது.

ஒழுக்கத்தின் ஒவ்வொரு நெறியைப்பற்றிக் கூறும் போதும் அதனை மக்கள் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிக்க வேண்டி அதுவே மற்றெல்லாவற்றினும் முதன்மையுடைய தாகக் கூறுவது வள்ளுவர் இயல்பு. ஈகையின் உயர்வை யும் அவசியத்தையும் வற்புறுத்துவதற்காக,

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை. (230)

என்று கூறிய வள்ளுவர், 'இனியவை கூறல்' என்ற அதி காரத்தில்,

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின். (92)

என்று ஈதலை விடவும் இன்சொல் சிறப்புடையதென்று பேசுகிறார்.

சாதாரண நிலையில் ஒழுக்கத்தைப் பேணுவதில் பலர்க்கும் கஷ்டம் தோன்றுவதில்லை. ஆனால் பிறன் ஒரு வன் காரணமின்றி நமக்கு இடர் விளைக்கும்போது ஒழுக் கத்தைக் கடைப்பிடிப்பதிலேயே அருமைப்பாடு உள்ளது. சினங்காத்தல், பொறையுடைமை, இன்னா செய்யாமை ஆகிய பண்புகள் அப்பொழுதுதான் சிறந்து விளங்குகின்றன.

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (308)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314)

என்னும் குறள்கள் மிக்க மாண்புடையனவாகும்.

திருவள்ளுவர் ஒழுக்கத்தை மிக முக்கியமாகக் கருதினார் என்பதற்கு வேறோர் சான்றும் திருக்குறளில் காணப்படுகிறது. இறைவனை அடைவதற்குச் சிலர் அன்புநெறியை மேற்கொண்டு 'அன்பே கடவுள்' (God is love) என்று கூறுவர். மகாத்மா காந்தி உண்மை நெறியைப் போற்றி 'உண்மையே கடவுள்' (God is truth) என்றார். திருவள்ளுவரோ ஒழுக்க நெறியை வற்புறுத்தி இறைவனை அடைவதற்கு அதுவே மார்க்கம் என்று கூறுகிறார்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (6)

என்ற குறளில் இறைவனை ஐம்பொறிகளின் அவாவை அடக்கிய ஒழுக்கமூர்த்தி என்றும், அவரது நெறி குற்றத்தின் நீங்கிய ஒழுக்க நெறி என்றும், அந்நெறியில் வழுவாது நிற்பவர்கள் வீட்டுலகை அடைவார்கள் என்றும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஒழுக்கத்தை வற்புறுத்தும் முறை

1. தெய்வ நம்பிக்கை

ஒழுக்கத்தை ஆன்றோர்கள் எங்ஙனம் வற்புறுத்தியுள்ளார்கள்? அரசியலார் ஒழுக்கத்தை வற்புறுத்துவதற்குத் தண்டனைகளைக் கையாளுகின்றனர். ஆனால் அறநூல்கள் கூறும் முறையோ வேறானது. அவை தெய்வ நம்பிக்கை அல்லது மதத்தின் அடிப்படையில் ஒழுக்கத்தை வற்புறுத்துகின்றன. எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல இறைவன் மக்களின் நல்லொழுக்கத்திற்கு வெகுமதியாக இம்மையில் இன்பத்தையும் மறுமையில் மோட்சத்தையும் அளிக்கின்றான் என்றும், தீய ஒழுக்கத்திற்குத் தண்டனை

யாக இம்மையில் துன்பத்தையும் மறுமையில் நரகம், பிறப்பு முதலியவற்றையும் அளிக்கின்றான் என்றும் கூறுகின்றன. வள்ளுவரும்,

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (121)

என்று கூறி, சொர்க்கம் நரகம் என்பனவற்றின் அடிப்படையில் அடக்கத்தை வற்புறுத்துகிறார்.

2. மனச்சாட்சி

இரண்டாவது, மனச்சாட்சியின் அடிப்படையில் ஒழுக்க நெறிகளை வற்புறுத்துவதாகும். மனச்சாட்சியை, நம்மைச் சீர்ப்படுத்துவதற்காக நம் உள்ளத்திற்குள்ளிருந்து பேசும் தெய்வக் குரலென்று கூறலாம். நாம் ஒரு காரியத்தைச் செய்ய முற்படும்போது மனச்சாட்சி அது செய்யத் தகுவது அல்லது தகாதது என்று தீர்ப்பளித்து நம்மை எச்சரிக்கை செய்கிறது. வள்ளுவரும்,

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (293)

என்று கூறுகின்றார். ஒருவன் மனமாரப் பொய் சொல்வானானால் அவன் மனமே அப் பாவத்திற்குச் சாட்சியாக நின்று அதன்பயனாகிய துன்பத்தை அடைவிக்கும் என்பது இதன் பொருள்.

3. பொதுமக்கள் ஆதரவு

மூன்றாவதாகப் பொதுமக்கள் ஆதரவு என்ற அடிப்படையில் ஒழுக்கத்தை ஆன்றோர்கள் வற்புறுத்தியுள்ளார்கள். பொதுஜன அங்கீகாரம் மிகுந்த சக்தியுடையது.

பலரும் தம் சொந்த உணர்ச்சி வேருக இருந்தாலும் பொதுஜன அங்கீகாரத்திற்கு மதிப்பு வைத்து அதற்கு உட்பட்டே காரியம் செய்வர். திருவள்ளுவர்,

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (140)

என்றும்,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். (280)

என்றும், உலகப் பொது மக்களால் அங்கீகரிக்கப்படும் ஒழுக்க முறைகளையே மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கூறுகின்ருர்.

இப் பொதுஜன அங்கீகாரம் நாட்டுக்குநாடு, காலத்துக்குக் காலம் வேறுபடுகிறது. மேனடுகளிலே மணப்பருவம் எய்திய மங்கை ஆடவரோடு கலந்து பழகி உறவாடுதலை அங்குள்ள பொதுமக்கள் அங்கீகரிக்கின்றனர். ஆனல் நமது நாட்டில் பொதுமக்கள் கருத்து அதற்கு எதிராக உள்ளது. இன்னும் நமது நாட்டிலே இறந்த கணவனேடு மனைவி உடன்கட்டை ஏறுவதை மாதர் ஒழுக்கமாகச் சில நூற்ருண்டுகளுக்கு முன் வரையிலும் மக்கள் கருதி வந்தனர். ஆனல் இன்ருே அதை ஒரு பாவச் செயலாக நாம் எண்ணுகிருேம்.

ஒழுக்கத்தாலுண்டாகும் நன்மைகள்

ஒழுக்கத்தாலுண்டாகும் நன்மைகள் பலவாம். நல்லொழுக்கத்தால் மக்களின் உள்ளம் தூய்மை அடைந்து, உடலும் வலுப்பெறுகிறது. ஒழுக்கத்தைப் பேணுத ஒருவன் மனித நிலையினின்று இழிந்து விலங்கு நிலையை அடைந்த

வனுக எண்ணப்படுகிருன். ஒழுக்கவிதிகளைப் பேணுதல் வருங்காலச் சந்ததிகளின் முன்னேற்றத்திற்கும் இன்றியமை யாததாகும். தாய்தந்தையர் சிறந்த ஒழுக்கமுடையவர்களாய் இல்வாழ்க்கையை இனிது நடத்தி வந்தால் அவர்களது குழந்தைகள் நன்ருகப் பேணி வளர்க்கப்பட்டுச் சிறந்த முற்போக்கை அடைகிருர்கள். எந்தச் சமுதாயம் ஒழுக்க விதிகளுக்கு மதிப்பு வைத்து மதத்தின் பெயராலும், சமூக அங்கீகாரத்தாலும், தண்டனை முதலியவற்ருலும் அவற்றை மக்களிடையே வன்மையாக வற்புறுத்தி வந்துள்ளதோ அதுவே இன்றளவும் அழியாமல் நிலைபெற்று வருகிறது.

ஒழுக்கக் கேட்டிற்குப் பரிகாரங்கள்

ஒழுக்கக் கேட்டிற்குச் சில சமய நூல்கள் பரிகாரங் கள் கூறுகின்றன. அவை, தவறிழைத்தவர்கள் அச் செயல் குறித்து மனமார வருந்துவதும், அதனைச் சமயத் தலைவ ரிடம் அறிவித்து விடுவதும் ஆம். இதுபற்றி வள்ளுவர் கூறும் கருத்தைச் சிந்தித்தல் தகும். அவர்

> **எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்**
> **மற்றன்ன செய்யாமை நன்று.** (655)

என்று கூறுகின்ருர்.

'நான் எத்தகைய செயல்களைச் செய்துவிட்டேன்' என்று பின்னர் இரங்குவதற்குக் காரணமான செயல்களை ஒருவன் செய்யாதிருக்கவேண்டும்; ஒருகால் மயங்கி அவற் றைச் செய்துவிடுவானயின் அதன் பின்னர் அதைக் குறித்து இரங்காதிருத்தல் நல்லது என்பது இதன் கருத்து. இரங்குவதால் அது தீரும் வழியறியாதவன் எனவும், பய னில்லாதனவற்றைச் செய்கின்ருன் எனவும் பிறரால் இகழப்

படுவான் என்று பரிமேலழகர் இதற்கு விரிவுரை கூறுகின்றார். இதிலிருந்து முன் செய்த ஒரு பிழைக்குப் பின்னிருந்து இரங்குவதாற் பயனில்லை என்பதும், இரங்குதல் அப்பிழை தீர்வதற்குரிய வழியன்று என்பதும், இரங்குபவன் பிறர் இகழ்ச்சிக்கு உரியனாவன் என்பதும் திருவள்ளுவர், பரிமேலழகர் என்போரது கருத்துக்களாகும் என்று உணரலாம். பிறரும் இப்பரிகார முறைகள் பகுத்தறிவுக்கும் பரிணாம விதிக்கும் (law of evolution) பொருந்தாதன என்பர். ஒரு தீய செயல் அதனைச் செய்தவனுக்கும், செய்யப்பட்டவர்களுக்கும் தீய பயனை விளைத்தே விடுகிறது. இதுவே காரணகாரிய விதி (cause and effect) எனப்படுவது. இது மாற்றமுடியாத ஒரு நியதியாகும். ஒருகால் இதனை மாற்ற முடிந்தாலும் அது பல நற்கருமங்களைச் செய்வதன் மூலமாகத்தான் ஆகவேண்டும்.

ஒழுக்கத்தின் உயர்ந்த நிலை

ஒழுக்க வாழ்வின் உயர்ந்த நிலை யாதெனின் நல்லொழுக்கத்தை உவப்பதும் தீயொழுக்கத்தை வெறுப்பதும் ஆகிய பண்புகளை மக்கள் தம் இயற்கை உணர்வால் அடையப் பெறுவதேயாம். தலைமுறை தலைமுறையாக சமூகக் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பு வைத்து ஒழுகுவதாலும் குழந்தைப்பருவ முதற்கொண்டே பல்லாண்டுகள் ஒழுக்க நெறிகளில் பயிற்சி பெறுவதாலும் அந்நிலையை நாம் அடைதல் கூடும்.

4. சான்றோர் நெறி

உலகச் சரித்திரத்தைப் பற்பல காலப் பகுதிகளாகப் பகுத்து அவற்றைக் கற்காலம், இரும்புக்காலம் முதலிய பெயர்களால் சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அம்முறையில் இப்பொழுதுள்ள காலப் பகுதியை விஞ்ஞானக் காலம் என அழைப்பர். விஞ்ஞானம் என்பதற்கு உண்மையான அறிவு என்பது பொருள். உலகப் பொருள்கள், நிகழ்ச்சிகள் இவற்றைக்குறித்து முன்னாளில் வாழ்ந்த மக்கள் பிழையான கருத்துடையவர்களா யிருந்தனர். கொள்ளை நோய்கள் தோன்றும் போதும், பூகம்பங்கள் உண்டாகும் போதும், எரிமலைகள் அனற்பிழம்பை உமிழும்போதும் அவை சிறு தெய்வங்களின் சினத்தால் விளைந்தன என்று நம்பி வந்தனர். பின்னர் மக்கள் தம் பகுத்தறிவை அபிவிருத்தி செய்து விஷயங்களைச் சீர்தூக்கி உணரத் தொடங்கியபோதுதான் முற்கூறிய நிகழ்ச்சிகளின் உண்மைக் காரணம் அவர்களுக்குப் புலனாயிற்று. இதுவே விஞ்ஞானம் எனப்படும். இந்த விஞ்ஞானத்தைப் பெற்றபின் மக்கள் முன் கொண்டிருந்த கொள்கைகளையெல்லாம் மூட நம்பிக்கை என்று விட்டொழித்தனர்.

விஞ்ஞானத்தின் பயனாக மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. பொதுவாக ஒரு பொருளைப் பார்க்கின்ற பார்வையிலும், சிந்திக்கின்ற முறையிலுமே புதுமை தோன்ற ஆரம்பித்தது. இதனை விஞ்ஞான-நோக்கு என்ற சொல்லாற் குறிக்கலாம். எந்தப்

பொருளைக் குறித்துச் சிந்தித்தாலும் ஏன்? ஏன்? என்ற கேள்விகளைக் கேட்டு விடை காண முயல்வதே விஞ்ஞானத்தின் இயல்பாகும். ஏன் என்ற கேள்வியே விஞ்ஞானத்தின் உயிர் நாடி. அக்கேள்வியைக் கேட்டதன் பயனாகப் பல நன்மைகள் கைகூடி யிருக்கின்றன. பறவைகள் ஆகாயத்தில் வெகு சுலபமாகப் பறந்து செல்வதைப் பார்த்த மனிதன் மிகப் பழங்கால முதலே தானும் அவ்வாறு பறக்கவேண்டு மென்று விரும்பினான். அதைக் குறித்துப் பல வகையாக மனோராஜ்யம் பண்ணினான். பூமியில் செல்லும் தேர் முதலிய வாகனங்கள் இறகு முளைத்து ஆகாயத்தில் பறப்பதாகவும், மக்கள் அவற்றில் அமர்ந்து வான வீதியிலே சஞ்சரிப்பதாகவும் கற்பனை பண்ணினான். இராவணன் ஆகாயத்தில் சஞ்சரிப்பதற்கு உபயோகித்த புஷ்பக விமானமும், கோவலன் திருச்செங்குன்றில் வேங்கை மர நிழலில் நின்ற தன் மனைவி கண்ணகியை அழைத்துச் செல்வதற்காக வந்த வானவூர்தியும், விசையை சீவகனைக் கருவுற்றிருக்கும் போது ஊர்ந்து சென்ற மயிற் பொறியும், தொடித்தோட் செம்பியனால் எறிந்து அழிக்கப்பட்ட தூங்கெயிலும் மேற்கூறிய கற்பனையின் விளைவுகளேயாம்.

மனிதன் விஞ்ஞான நோக்குப் பெற்று ஏன் என்ற கேள்வியைக் கேட்டு விஷயங்களை ஊன்றிச் சிந்திக்கத் தொடங்கியபோது வெறுங் கற்பனைகளுக்கு வாழ்வு இல்லாமலாயிற்று. பறவைகள் எங்ஙனம் பறக்கின்றன என்று சிந்தித்துத் தானும் செயற்கை இறகுகளைக் கட்டிக்கொண்டு மரங்கள், மலைச்சிகரங்களிலிருந்து பறக்க முயன்றான். அதில் பலர் உயிரிழந்தனர். ஆனால் ஏன் என்ற கேள்விமட்டும் ஓயவில்லை. பின்னர், காற்றாடி காற்றுக்கு எதிராக ஆகாயத்தில் எழுந்து பறப்பதைக் கண்டு அது எங்ஙனம் பறக்கிறது

என்ற கேள்வியைக் கேட்டான். ஒரு கேள்வியிலிருந்து பல கேள்விகளுக்கு இடம் உண்டாயிற்று. பல உண்மைகள் தெரிய வந்தன. அவற்றைப் பயன்படுத்தி ரைட் சகோதரர்கள் ஆகாயவிமானத்தை நிருமித்தார்கள். இப்பொழுது அதன் உதவியால் முன் மனிதன் கற்பனை செய்ததை விடவும் பன்மடங்கு அதிவேகமாக வானத்தில் சஞ்சரிக்கின்றான்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே ஸ்காட்லாந்து தேசத்தில் ஜேம்ஸ் வாட் என்ற ஓர் அறிஞன் தோன்றினான். அவன் ஒரு நாள் 'கெட்டிலி'ல் கொதித்துக் கொண்டிருந்த நீர் மூடியை மேலே உயர்த்துவதைப் பார்த்தான். ஏன் அவ்வாறு உயர்கிறது என்ற கேள்வியைத் தனக்குள்ளே கேட்டு விடை காண முயன்றான். அதன் பயனாக அவன் நீராவி இயந்திரத்தை நிருமித்தான்.

பெஞ்சமின் பிராங்லின் என்ற சிறுவன் ஒரு நாள் பட்டம் விட்டுக் கொண்டிருந்தான். பட்டம் மின்னல் தவழும் மேகக்கூட்டத்தினிடையே சென்று பறந்தபோது நூலைப் பற்றியிருந்த சிறுவன் கையில் ஒரு நடுக்கம் உண்டாயிற்று. அவன் விஞ்ஞான நோக்குடையவன். ஏன் என்ற கேள்வியைக் கேட்டான். ஏதோ விடைகளைக் கண்டான். அவற்றின் மேலும் ஏன்? ஏன்? என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான். பல உண்மைகள் புலனாயின. அவற்றின் விளைவாக மின்சாரத்தையும் அதன் அளவற்ற ஆற்றலையும் உணர்ந்து கொண்டான்.

மேற்கூறியவற்றிலிருந்து விஞ்ஞானப் பார்வையாலும், ஏன் என்ற கேள்வியைக் கேட்டு உண்மை விடையைக் காண்பதாலும் உண்டாகும் பெரும் பயனைக் குறித்துத்

தெரிந்து கொள்ளலாம். ஆனால் சில சந்தர்ப்பங்களில் ஏன் என்ற கேள்வியைக் கேட்பது அசம்பாவிதமாக இருக்கும். உதாரணமாக, ஒருவனுக்கு நோய் கண்டிருக்கிறது. டாக்டரை அழைக்கிறோம். அவர் நோயாளியைப் பரிசோதித்து ஒரு மருந்தை உடலிற் குத்தி வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார். நோயாளி டாக்டரின் கருத்தை மறுத்துரையாமல் அதற்கு இணங்குவதே முறை. அதுவே அவனுக்கு நன்மையைத் தருவதுமாகும். இதற்கு மாறாக நோயாளி மருந்தை ஏன் குத்தி வைக்க வேண்டும்? அம் மருந்தில் என்ன இருக்கிறது? அது எங்ஙனம் தயாரிக்கப் படுகிறது? உடலிற்குள் அது நோயை எவ்வாறு தணியச் செய்கிறது?—என்றிவ்வாறு டாக்டரிடம் கேள்விக்குமேல் கேள்வியை அடுக்கிக்கொண்டு போவதும், அவற்றிற்கெல்லாம் விடை கண்டாலன்றி மருந்தைக் குத்தி வைக்க அனுமதியேன் என்று கூறுவதும் பகுத்தறிவாகாது; அறிவின்மையையே உணர்த்துவதாகும். மருத்துவக் கலையறிவும், அனுபவமும் வாய்ந்த டாக்டரின் உபதேசத்தை அங்ஙனமே அங்கீகரித்து அதன்படி நடக்கத் தெரியாதவன் நோய்முற்றி அபாய நிலைக்கு ஆளாகக்கூடும். ஆகவே விஞ்ஞானத்தைப் போலவே அறிஞர்கள், ஆன்றோர்கள் இவர்களது உபதேசங்களை ஏற்றுக்கொள்வதும் மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாததென்பதை ஒவ்வொருவரும் மனங்கொள்ளுதல் வேண்டும்.

எண், எழுத்து, விஞ்ஞானம் முதலிய கல்வியை நோக்கினும், அவற்றிலும் அறிஞர்களின் சொல்லை ஏற்றுக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணரலாம். முதல் வகுப்பிலே ஆசிரியர் இரண்டும் இரண்டும் நான்கு என்று

கூறுகிறார். மாணவன் அதனை ஏற்றுக்கொள்வதே முறை. அங்ஙனமின்றி ஏன் நான்கு என்று கூறவேண்டும்? ஆறு என்று ஏன் கூறலாகாது? என்று மாணவன் கேட்டுவிட்டால் அதற்கு அவ் ஆசிரியர் மட்டுமல்ல; எவருமே விடைகூற முடியாது. அதனை விளக்கிக் கூறினாலன்றி ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று மாணவன் பிடிவாதம் செய்தால் அவனது கல்வி அந்நிலையிலே நிற்க வேண்டியதுதான்.

பாடசாலையிலே ஆசிரியர் பூதநூல் கற்பிக்கின்றார். மரத்திலிருந்து பழுத்து இற்று விழும் பழம் பூமியில் வந்து விழுகிறது; ஒரு பொருளை உயரமான இடத்திலிருந்து இட்டால் அது கீழே மண்ணின்மீது விழுகிறது; இவ்வாறு பொருள்கள் கீழ் நோக்கி விழுவதன் காரணத்தை ஸர் ஐஸக் நியூட்டன் என்ற பேரறிஞர் சிந்தித்து, பூமி அப்பொருள்களைத் தன்பால் இழுப்பதால் அவை கீழ்நோக்கி விழுகின்றன என்று கூறினார்; இந்தச் சக்தி ஆகர்ஷண சக்தி அல்லது புவி ஈர்ப்பு விசை (force of gravity) எனப்படும்—இவ்வாறு ஆசிரியர் கூறினால் மாணவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதே முறையாகும்; அறிவு வளர்ச்சிக்கு அது துணையாகவும் இருக்கும். அங்ஙனமின்றி ஆகர்ஷண சக்தி எங்கே இருக்கிறது? எவ் இடத்தில் நிலை கொள்ளுகிறது? அதனைக் காண முடியுமா? என்றெல்லாம் கேள்வி கேட்டால் விஞ்ஞானம் அவர்களை வெளிச்சத்தில் அழைத்துச் செல்வதற்குப் பதிலாக இருளில் கொண்டு விட்டுவிடும்.

காற்று இருக்கிறது; அதைக் கண்ணால் காணமுடியுமா? காண முடியவில்லை என்பதற்காக அதனை இல்லையென்று கூறிவிடுவது விஞ்ஞானமாகுமா? அதன் உண்மையை வேறு வகையாக அறிஞர்கள் விளக்குவதை உணர்ந்து அதனை ஏற்றுக் கொள்வதே அறிவுடைமையாகும்.

நமது முன்னோர்கள் பன்னூறு வருடங்களாக அரு முயற்சியால் ஈட்டிய அறிவுச் செல்வத்தை நேரே பயன்படுத்திக் கொள்ளாமல், அந்த அறிவைத் திரட்டுவதில் அவர்கள் அடைந்துள்ள ஒவ்வொரு நிலையையும் தாமும் கடந்த பின்பே அதனை ஏற்றுக் கொள்வோம் என்றிருப்பது வீண் முயற்சியும் காலக்கழிவுமாகும். இது ஏணிப்படியிலே ஓரளவு உயரத்தில் நிற்பவன் அதிலிருந்து படிப்படியாக மேலே ஏற முயலாது, கீழே இறங்கி முதற்படியிலிருந்தே ஏற முயல்வதை ஒக்கும். இது இயற்கைக்கும், வரலாற்று முறைக்கும் முரணானதாகும். ஆனால் எந்த அறிவை அடிப்படை அறிவாக ஏற்றல் தகும்; எதனை ஏற்றல் தகாது என்று ஒருவன் சிந்தித்துத் தெளிவதில் தவறில்லை.

அறிவு வளர்ச்சித் துறையிலே ஆன்றோர் அறிவுரைகளுக்கும், அனுபவ மொழிகளுக்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. ஒழுக்க நூல்களைக் கற்கும்போது அவற்றில் ஒன்றிற்கொன்று முரணான பல விஷயங்களைக் காண நேர்ந்தால், அறிவின் துணையால் மட்டும் அவற்றிற்கு உண்மை காண முடியாது. ஆன்றோர் அனுபவ மொழிகள் மட்டுமே அவனுக்கு உள்ளத் தெளிவையும், உறுதிப் பாட்டையும் அளிக்க வல்லன. திருக்குறளையே எடுத்துக் கொள்வோம். பொருளைப்பற்றிக் கூறும்போது அது உலக வாழ்விற்கு மிக அவசியமானதென்பதை வள்ளுவர் பல இடங்களில் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். அருளுடைமை என்ற அதிகாரத்தில் மறுமை வாழ்விற்கு அருள் இன்றியமையாததென்பதைச் சொல்ல வந்தவர் அதற்கு உவமையாக இம்மை வாழ்விற்குப் பொருள் இன்றியமையாததென்ற கருத்தைக் கூறுகின்றார்.

அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு. (247)

என்பதைக் காண்க. பொருள் செயல் வகை என்ற அதிகாரத்தில் பொருள் இல்லாதவர் எல்லோராலும் இகழப்படுவர் என்றும், அறிவில்லாதவரே யாயினும் நிரம்பிய பொருளுடையவராயின் யாவராலும் மதிக்கப்படுவர் என்றும், பொருளால் அறமும் இன்பமும் மிக எளிதாக அடையக்கூடும் என்றும், பகைவர் எங்கே இருந்தாலும் அவர் இருக்குமிடம் சென்று அவரது செருக்கைப் போக்கி அவரைப் பணிய வைக்கும் கூரிய படைக்கலம் பொருளேயாம் என்றும் பொருளின் சிறப்பையும் அவசியத்தையும் வற்புறுத்திக் கூறியுள்ளார். மேலும், 'புலால் மறுத்தல்' என்ற அதிகாரத்தில் பொருளைப் போற்ற வேண்டுவதன் அவசியம் பற்றிப் பின் வருமாறு கூறுகின்றார்.

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. (252)

பொருளைப் போற்றுவதற்குரிய வழிகளைக் குறித்து 'வலியறிதல்' என்ற அதிகாரத்தில் மிக விரிவாகக் கூறுகின்றார். பிறர்க்கு வழங்கும்போது அளவறிந்து வழங்கவேண்டும்; அதாவது, வருவாயை எண்ணி அதனினும் மிகாது வழங்குதல் வேண்டும். அவ்வாறு அளவறிந்து செலவு செய்யத் தெரியாதவன் வாழ்க்கை வரவர நலிந்துகொண்டே வந்து பின்னர் முற்றிலும் அழிந்து போகும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (479)

வள்ளுவர் கூறும் இவ்வுபதேசங்களைக் கடைப்பிடிப்பவர்கள் 'அறன் வலியுறுத்தல்' 'ஈகை' முதலிய அதிகாரங்களிலுள்ள அவர் கூறும் ஒழுக்கத்தை மேற்கொள்வரோ என்பது

ஐயத்திற்கிடமேயாம். 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தில் அவர் அறஞ்செய்வதை விடவும் மக்களுக்கு நன்மை பயப்பதான நற்கருமம் வேறில்லை என்றும், ஆகவே

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல். (33)

என்றும், அறம் செய்தலைப் பின்னர் நோக்குவோம் என்று கருதாமல், கையில் பொருள் உள்ள போதே செய்யவேண்டும் என்றும், அறத்தால் இம்மை மறுமைப் பயன்கள் கைகூடும் என்றும் கூறுகிறார். 'ஈகை' என்ற அதிகாரத்தில் தம்பால் வந்து இரந்த வறியோர்க்கெல்லாம் இல்லையென்று சொல்லாமல் அவர் இன்முகம் காணுமளவும் ஈயவேண்டும் என்று கூறுகிறார். முன்னே போற்றவேண்டும் எனக் கூறிய பொருளை வைத்துக் காக்கும் இடம் கூறுவார் போன்று ஏழைகளின் பசியைப் போக்கும் அறச் செயலின்கண் அதனை வைத்துக் காக்கவேண்டும் என்று சொல்லுகிறார்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (226)

அறச் செயல் புரிபவனை இம்மை வாழ்விலே வறுமை, பசி என்பன அணுகுவதில்லை. இவ்வாறு இரப்போர்க்கு ஈய முடியாமல் வாழ்வதைவிட இறந்து போதலே நல்லதென்று மக்களைச் சற்று வன்மையாகக் கண்டித்து அறவுரை கூறுகின்றார்.

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. (230)

குமணன் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர்க்குப் பரிசிலளிக்க முடியாத நிலையில் உயிர் வாழ விரும்பாமல் தன்

தலையைக் கொய்து எடுத்துச் சென்று, தன் தம்பி கையிற் கொடுத்துப் பரிசு பெற்றுக் கொள்ளுமாறு புலவரை வேண்டிக்கொண்ட வரலாறு இங்கு நினைக்கத்தகும்.

இவ்வாறு, திருவள்ளுவர் ஒருபால் அளவறிந்து வழங்கிப் பொருளைப் போற்றவேண்டும் என்றும், மற்றோர்பால் இரப்போர்க்கெல்லாம் இல்லையென்னாது ஈயவேண்டும் என்றும் கூறுவதை எண்ணும்போது தாம் செய்தற்குரியது யாதென உணராமல் சாதாரண மக்கள் உள்ளம் மயக்கமடைதல் இயல்பே.

சங்க நாளிலே ஆய் அண்டிரன் என்று ஒரு குறுநில மன்னன் இருந்தான். பொதினி மலையும் அதன் அருகிலுள்ள ஆய்குடியும் அவனுக்குச் சொந்தமாக இருந்தன. அவன் ஒரு சிறந்த போர்வீரன். ஒருமுறை அவன் கொங்கு நாட்டாரோடு போர்செய்து அவரைத் தோல்வியுறச் செய்தான். அவன் சிறந்த வள்ளலுமாவன். தன்னைப் பாடிவந்த புலவர்களையும் பாணர்களையும் உபசரித்து விலையுயர்ந்த யானைகளை அவர்களுக்குப் பரிசாக அளித்தான். அவனது கொடைத் திறத்தை முடமோசியார் முதலிய புலவர்கள் உள்ளமுருகிப் பாடியிருக்கிறார்கள். பரிசிலர்கள் அவனது யானைக்கொட்டிலிற் சென்று இத்தனை யானைகள் தமக்கு வேண்டுமென்று கேட்பார்களானால் அங்ஙனமே கொடுத்து மகிழ்கின்ற பெரு வள்ளல் அவன். ஆகவே சில வேளைகளில் அவனது யானைக் கொட்டிலில் யானை எதுவுமின்றிக் காட்டு மயில்கள் கூட்டங் கூட்டமாகத் தங்கியிருக்குமாம். அவனது யானைக் கொடையின் மிகுதியைப் பார்த்து முடமோசியார் வியந்து "அரசே! உனது நாட்டில் பெண் யானைகள் ஒவ்வொரு சூலிலும் பத்துக் குட்டிகளை ஈனுமோ?" என்று கேட்டார். இங்ஙனம் வரையாது ஈயும் இயல்பு படைத்தவனாதலால் அவன் கடை

யெழு வள்ளல்களில் ஒருவனுக நூல்களில் சிறப்பிக்கப் படு கிருன்.

உலகிலே ஒருவன் நற்கருமங்கள் செய்வதற்குப் பற்பல ஏதுக்கள் இருக்கலாம். செல்வம் மிகுதியாகப் படைத்த சிலர் புகழ்பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு பொருளை அறவழி களிற் செலவிடுவர். சிலர் மக்கட்பேறு, உடல் நலம், நீடிய ஆயுள் முதலிய பயன்களில் ஒன்றைக் கருதி அறஞ்செய்வர். இப்பிறவியில் அறஞ்செய்தால் மறு பிறவியில் நன்மையுண்டா கும் என்று எண்ணி அறஞ் செய்பவர்களும் உண்டு. இவர் கள் அனைவரும் ஒவ்வொரு பயனை உட்கொண்டு அறம்புரிவ தால், அறத்தைக் கொடுத்து புகழ், மறுமையின்பம் முதலிய வற்றைக் கொள்ளும் பண்டமாற்றுப் புரிவோராக இவர்களைக் கூறலாம். பயன் கருதிச் செய்யப்படும் இவ் ஈகைகள் பெருஞ் சிறப்புடையனவல்ல. யாதொரு பயனையும் எண்ணுமல் துன் பமுற்றவர்களது நிலைகண்டிரங்கி, மனங்கசிந்து செய்யப்படு கின்ற அறமே மேலான அறமாகும். இவ்வகை அறங்களையே நிஷ்காம்ய கர்மம் என்று நூல்கள் சிறப்பிக்கின்றன. கண் ணன் கீதையில் உபதேசிப்பதும் இந்த அறமேயாம்.

ஆய்அண்டிரன் அறம்புரியும்போது அதன் பலாபலன் களைக் குறித்துச் சிந்திப்பதில்லை. தனக்கு முன்புள்ள ஆன் ருேர்கள் எவ்வாறு நடந்துவந்தார்கள்; அவர்களது அடிச் சுவட்டைப் பின்பற்றி நடப்பதே தனக்கும் முறை என்று எண்ணுகிருன். இடறி விழுந்தாலும் ஆன்ருேர்களின் அடிச் சுவட்டில் வீழ்வதே நலம் என்ற உறுதியோடு அவன் அறச் செயல்களில் ஈடுபடுகிருன். ஆய் அண்டிரனது இந்த மனப் பாங்கை முடமோசியார் மிகச் சிறப்பாகப் பாராட்டுகிருர்.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே. (புறம் 134)

பயன் கருதி அறஞ்செய்பவனை அவர் அறவிலை வணிகன் எனக் கவிஞர் கூறுவது மிக்க நயமுடையதாகும். ஆயோ, அவ்வகை அறவிலை வாணிகன் அல்லன். சான்றோர்கள் மேற்கொண்டது இவ் அறநெறி என்றுணர்ந்து அவனும் அந்நெறியிலே சென்று வள்ளன்மை புரிகின்றான்.

ஏதேனும் ஒரு செயல் சான்றோர் நெறிக்கண் அடங்குவதாயின் அதனைப் பின்னும் பகுத்தறிவால் தனியாகச் சிந்தித்து நன்று தீது உணரவேண்டும் அவசியமில்லை; எப்பொழுதும் அது நன்மையாகவே இருக்கும். இந்த நம்பிக்கை மக்களுக்கு உண்டாகவேண்டும். சறுக்கி விழுந்தாலும் ஆன்றோர்களின் அடிச்சுவட்டிலே வீழ்வோம் என்ற உறுதிப்பாடு நமது உள்ளத்தில் தோன்றுதல் வேண்டும். அங்ஙனமின்றி எப்பொழுதும் விஞ்ஞான நோக்கையும் பகுத்தறிவையும் நம்பி எல்லா விஷயங்களையும் அவ் அளவைகளால் அளந்து கொண்டிருந்தால் வளர்ச்சியும் முன்னேற்றமும் இல்லையாய்த் தீரும்.

சாதாரணமான இவ் அறம் புரிகின்ற விஷயத்தில் சான்றோர் நெறியைப் பின்பற்றுவதே வேண்டற்பாலதென்றால் மனம் வாக்குகளுக்கெட்டாத பரம்பொருளைப் பற்றிய விஷயங்களில் ஆன்றோர் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதே பாமர மக்களுக்கு நன்மையைத் தரும் என்பது கூறாதே அமையும். தூயவாழ்க்கையுடையவர்களாய்த் தம் வாழ்நாள் முழுவதும் இறைவன் நாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஞானிகளுங்கூட

அப்பரம்பொருளின் இயல்பைக் குறித்துத் திட்டமாக ஒன்றும் கூறமுடியாத நிலையில் உள்ளார்கள். கல்வியிற் பெரிய கம்பரும் அப்பரம்பொருளின் இயல்பை,

வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறனும் உளனென்ப
(அயோத். கடவுள் வாழ்த்து)

என்று கூறுகிறார். இறைவனின் பேரருளுக்குரியராகி ஆன்ம விளக்கம் பெற்ற அடியார்களும், ஆழ்வார்களுங்கூட இறைவனது திருவுருவையும், அவனது பெருங் கருணையையும் உவமை உருவகம் இவற்றின் வாயிலாகவே நமக்கு அறிவித்துள்ளார்கள். திருநாவுக்கரசு நாயனர் இறைவன் திருவடியை ஆன்மாக்கள் அடையும்போது பெறுகின்ற இன்பத்தை,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

என்று பாடுகிறார்.

அறுவகைப் பருவங்களிலும் சிறந்த இளவேனிற் காலம்; வானிலே பூரணச்சந்திரன் பால் நிலவைப் பொழிந்து உலகை அமுதமயமாக்கும் மாலைவேளை; நீர் நிரம்பிய பொய்கைக் கரை; அப்பொய்கையில் பூத்து விளங்கும் பன்னிற மலர்கள்; அம்மலர்களை வட்டமிடும் வண்டினங்கள்; இளந்தென்றல்; இவ் இயற்கைச் சூழ்நிலையிலே பொய்கைக் கரையிலிருந்து ஒப்பற்ற ஓர் இசைக்கலைஞன் தன் மாசற்ற வீணையிலிருந்து எழுப்பும் இன்பகீதம்—இவ்வாறு மக்களின் ஐம்புல அனுப

வத்திற்குமுரிய இன்பங்களைத் தொகுத்து உருவகமாக்கி அதன் வாயிலாகப் பேரின்பத்தை விளக்குகின்றார். இம் முறையைப் பின்பற்றியே இராமலிங்க சுவாமிகளும்,

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே, தருநிழலே, நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனை மணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல் அணிந்தருளே.

என்று இறைவனது இயல்பை நமக்கு அறிவிக்கின்றார்.

முற்றிய கோடை வெயில்; நீரும் நிழலுமற்ற சுரநெறி; அதில் நடந்து துன்புற்று வாடுகின்றான் ஒருவன்; சற்றுத் தூரத்திலே ஒரு மரத்தைக் காண்கின்றான்; அது குளிர்ந்த நிழலையுடையது; அவன் உள்ளம் தழைக்கின்றது; அதன் அடியில் சென்று இளைப்பாறுகிறான்; அம்மரத்திலே கனிந்த கனிகள் உள்ளன; அவற்றைத் தின்று பசியாறுகிறான்; தாகம் உண்டாகிறது; மிக அருகாமையில் ஒரு நீரோடை காணப் படுகிறது; அதில் இனிய நீர் ஊறித் தெளிவாகப் பாய்கிறது; அந்நீரைப் பருகுகிறான்; அவ் ஓடையிலே பல நீர்ப்பூக்கள் மலர்ந்துள்ளன; அவற்றிலிருந்து இனிய வாசனை வீசுகிறது; சற்று அப்புறமாக ஒரு அழகான மெத்தை வீடு இருக்கிறது; உள்ளே சென்று அதன் மேடையில் அமர்கின்றான் அம்மனிதன்; தென்றற் காற்று பூவின் நறுமணத்தை வாரி மேடைக் குள்ளே வீசுகிறது. என்ன ஆனந்தம்! இத்தகைய இன்பத்

தில் விளையும் சுகமாகவும், சுகத்திலுறும் பயனாகவும், இறைவனை உருவகப்படுத்துகிறார் இராமலிங்க அடிகள்.

அண்டகோளங்கள் அனைத்திலும் வியாபித்து, அவற்றிலுள்ள சராசரங்களனைத்தையும் தம் உடலாகக் கொண்டு உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூவகை நிலைகளையும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் உடையனாய் 'வேத சிகையும் விரிகலையும் மெய்யன்பர் போதமும் போய்த் தீண்டாப் பூரண'மாய் விளங்கும் பரம்பொருளை எல்லா மக்களும் தம் பகுத்தறிவொன்றின் துணையால் அறிதலும் அடைதலும் ஒல்லுமோ? இவ்விஷத்திலும் சான்றோர் நெறியைப் பின்பற்றுவதே அமையுடையதாகும். திருநாவுக்கரசு நாயனாரும் இந்நெறியையே மக்கட்கு அறிவுறுத்துகின்றார். இறைவனது இயல்பை உணர்ந்து, அவனது திருத்தொண்டில் மக்கள் ஈடுபட்டு உய்திபெறவேண்டும் என்ற அருள் நோக்கத்தோடு அவர் திவ்யமான பல பாடல்களை அருளிச் செய்துள்ளார். அப்பாடல்களில் அவர் தம்மைப் பொதுமக்களுள் ஒருவராகப் பாவித்து அவர்களது குறைபாடுகளையெல்லாம் தம்பால் ஏறட்டுக்கொண்டு, அவற்றைப் போக்கித் தம்மை ஆட்கொள்ளவேண்டுமென்று இறைவனிடம் வேண்டுவது அவரது இயல்பாகும். பாமர மக்கள் பரம்பொருள் நாட்டத்தில் எவ்வித கொள்கையுடையவர்களாய் இருத்தல்வேண்டும் என்பதை அவர் நமக்கு அறிவிக்கின்றார். அதனை நோக்குவோம்.

ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேனுனை நானலேன்
ஞானத்தால் தொழுவார் தொழக்கண்டு
ஞானத்தாய் உனை நானும் தொழுவனே.

ஆண்டவனை அப்பர் ஞானத்தாய்! ஞானமே உருவாகவுடைய வனே! என்று அழைக்கின்றார். சிறந்த ஞானத்தின் துணை யால் அறிதற்குரிய இறைவனை ஞானத்தாய்! என அழைப்பது மிகப் பொருத்தமாக உள்ளது. 'அவ் இறைவனின் இயல்பை மெய்ஞ்ஞானிகள் தாம் பெற்ற ஞானத்தால் உணர்ந்து அவனை வழிபடுகின்றனர். அந்த ஞானிகள் மிகச் சிலரேயாவர். அத் தகைய ஞானம் எல்லோராலும் எளிதில் அடைதற்குரிய தன்று. நாவுக்கரசர் அந்த ஞானம் தம்பால் இல்லையென்றும், எனவே ஞானத்தின் துணையால் இறைவனை உணர்ந்து வழி படுவதற்குத் தம்மால் இயலவில்லையென்றும், ஆதலால் ஞானம் படைத்த சான்றோர்கள் இறைவனைத் தொழுவதைக் கண்டு தாமும் அவர்களது நெறியைப் பின்பற்றித் தொழு வதாகவும் கூறுகின்றார்.

அப்பர் இவ்வாறு இறைவன் விஷயத்தில் தமது அனுப வத்தைக் கூறுவார் போன்று சான்றோர் நெறியை மேற் கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்துகின்றார். அரிச்சுவடி கற்பது முதல் ஆண்டவனை உணர்வது வரையிலுமுள்ள எல்லா நிலைகளிலும் பகுத்தறிவைப் போல் சான்றோர் நெறி யும் மக்கட்குத் துணைபுரிய வல்லது என்பதை இதனால் உணரலாம்.

---

5. இளங்கோவடிகள்

தமிழ்நாடு முன்னளில் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்களால் ஆளப்பட்டு வந்த செய்தி யாவரும் அறிந்ததே. அம்மூவேந்தர்களைப் போலவே பன்னூறுண்டு களாகத் தமிழ் மக்களின் உள்ளங்களில் அறிவுச் சிங்காதனத் தமர்ந்து, ஒழுக்கச் செங்கோல் பிடித்துத் தமிழரசு நடத்தும் கவி வேந்தர்களும் மூவருளர். அன்னோர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனரும், களங்கமில் உள்ளத்து இளங்கோவடிகளும், கல்வியிற் பெரிய கம்பரும் ஆவர். மூவேந்தர்களுள் சோழ பாண்டியர் ஆட்சி நெடுங்காலத்திற்கு முன்பே மறைந்தொழிந்தது. சேரராட்சியும் பண்டைப் பெருமையிலிருந்து குன்றியுள்ளது. இவ்வாறு, மாய்ந்தும் குன்றியும் தம் நிலை திரிந்த இப்புவி வேந்தர்களைப் போலன்றி, தமிழ் மொழியும் தமிழ் மக்களும் உள்ளளவும் அழியாப் புகழோடு கற்பவர் மனத்தைத் திறைகொண்டு கருத்துலகை ஆளும் திருவுடையவராக இக்கவி வேந்தர் மூவரும் விளங்குகின்றனர். இம்மூவருள்ளும் நமது சேர நாட்டில் பிறந்து அதற்குச் சிறப்பைத் தருபவர் இளங்கோவடிகளேயாவர்.

புலமை யுலகில் இளங்கோவடிகள் தோன்றியது ஓர் அவதார மகத்துவம் வாய்ந்துள்ளது என்னலாம். அவர் பிறந்த நாள் தமிழ் இலக்கிய வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறித்து வைக்க வேண்டிய ஒரு புனித நாளாகும். அவரால் தமிழ் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று என்பது மிகையாகாது. இளங்கோவடிகள் இலக்கியத் துறையிலே ஒரு புத்துணர்ச்சியையும், முற்

போக்கையும், வளர்ச்சியையும் உண்டுபண்ணியுள்ளார். பல நூற்றுண்டுகள் கழிந்த பின்பும் அவ்வுணர்ச்சி மாயாமல் இன்றும் தமிழன் இதயத்தை இயக்கி வருகிறது.

இளங்கோவடிகளின் வாழ்வின் நோக்கம் அவரியற்றிய சிலப்பதிகாரம் என்னும் பெருங் காப்பியத்தில் நிறைவுறுகின்றது. முன்னளில் தமிழ் நாட்டுக் கன்னிப்பெண்களின் பாதங்களைச் சிலம்புகள் அலங்கரித்தன. அவ்வணி அவர்களது கன்னிப்பருவத்தை உணர்த்தும் அடையாளமாகவும் கருதப்பட்டது. அம்முறையில் இளங்கோவடிகளும் மூவாது முதிராது என்றும் இளமை நலத்தோடு இலங்கும் கன்னித் தமிழின் பாதங்களில் ஒப்புயர்வற்ற செறியரிச் சிலம்பினை அணிந்து அலங்கரித்தார். அச்சிலம்பு மாற்றுயர்ந்த பசும் பொன்னல் அரிய சித்திர வேலைப்பாடுகள் புறத்தே அமைய, விலைமதிக்கவொண்ணு நவமணிக்குவையை உள்ளே பரல்களாக இட்டுக் கண்கவர் வனப்பினதாக இயற்றியதாகும். அவ்வணியால் தமிழணங்கு முன்னினும் பன்மடங்கு பேரழகு பெற்று விளங்குகிருள். அப் பொற்சிலம்பின் ஓசை அவள் பெருமையை உலகறிய எடுத்துரைக்கின்றது. அவ்வணியைச் சூடிய நாள் முதல் அவள் வாழ்வில் ஒரு புது மலர்ச்சி தோன்றத் தொடங்கியது. ஆறு அல்லது ஏழு நூற்றுண்டுக் காலம், அதாவது பன்னிரண்டாம் நூற்றுண்டில் கம்பர் தோன்றியது வரையிலும் தமிழின் வாழ்வில் சிலம்பின் ஒளியே மிகுதியாக வீசிக்கொண்டிருந்தது. கம்பர் காவியத்திற்குப் பின்னும் சிலம்பு முன்போலவே ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு தமிழின் வாழ்வு தழைக்கத் தோன்றிய இளங்கோவடிகளின் வரலாறு தமிழ் மொழிச் சரிதத்திலே

மிக முக்கியமானதாகும். எனவே அதைச் சிறிது நோக்கு வோம்.

இளங்கோவடிகளின் செய்தி சிலப்பதிகாரத்தால் அறியக் கிடக்கிறது. அவர் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் வேந்தனின் இளைய புதல்வர். அவரது தமையன், சேரன் செங்குட்டுவன் என்னும் வீரவேந்தன். இளங்கோ இளமையிலேயே துறவு நெறியை மேற்கொண்டமையால் அடிகள் எனப் பெயர் பெற்ருர். அவர் துறவறத்தை மேற் கொள்வதற்குரிய காரணம் சிலப்பதிகாரம் வரந்தருகாதை யில் தேவந்தியின் வாய் மொழியாகக் கூறப்படுகிறது.

ஒரு நாள் சேரலாதன் தன் மக்கள் இருவரோடும் அர சவையில் விற்றிருந்தான். அப்போது ஒரு சோதிடன் அவன் முன் போந்து, அவனது இறுதிக் காலம் சமீபித்திருக்கிறது என்றும், அவனுக்குப்பின் இளங்கோவே அரசராக வருவார் என்றும் கூறினன். இதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டான். செங்குட்டுவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. இளங்கோ தம் தமையன் மனம் ஆறுதலடையும் பொருட்டு அப்பொ ழுதே உலக இன்பத்தைத் துறந்து, குணவாயிற் கோட்டம் என்னும் இடத்தில் தங்கி சமயத் தொண்டும் தமிழ்த் தொண் டும் புரிந்து கொண்டிருந்தார்.

இளங்கோடிவகள் சிலப்பதிகாரம் பாடுவதற்குரிய கார ணம் அந்நூலின் பதிகத்தில் கூறப்படுகிறது. ஒரு நாள் செங் குட்டுவன் தன் மனைவி இளங்கோ வேண்மாளுடன் மலைவளங் காணச் சென்றிருந்தான். இளங்கோவடிகளும் மதுரைப் புலவர் சாத்தனுரும் அங்கே சென்றனர். சிறிது நேரத்தில், வேடர் சிலர் அரசன் முன் வந்து, அம்மலையில் தாம் கண்ட

அதிசயக் காட்சியை அவனுக்குக் கூறினர். ஒரு மார்பை இழந்த நங்கை ஒருத்தி அம்மலையிலுள்ள ஒரு வேங்கைமர நிழலில் வந்து நின்றதாகவும், தேவர்கள் அவள் கணவனோடு விமானத்தில் வந்திறங்கி அவளை விண்ணுலகத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் சொன்னார்கள். இதைக் கேட்ட செங்குட்டுவன் வியப்பினுள் ஆழ்ந்தான். அப்பொழுது சாத்தனார் அப் பெண்மணியின் பெயர் கண்ணகி என்றும், அவள் செய்தியைத் தாம் அறிவதாகவும் சொல்லி, கோவலன் கண்ணகி வரலாற்றை விரிவாகக் கூறினர். அதைக்கேட்ட செங்குட்டுவன் தன் அரசியின் வேண்டுகோளின்படி கண்ணகிக்குத் தலைநகரில் கோயிலெடுத்து வழிபட உறுதிகொண்டான். இளங்கோவடிகள் அவளது வரலாற்றை ஒரு காவியமாகப் பாட விரும்பினர். சாத்தனார், இளங்கோவடிகளே அதற்குத் தகுதியுடையவர் என்று கூறி அவரையே அக்காவியத்தைத் இயற்றும்படி வேண்டினர். இளங்கோவும் அதற்கு உடன்பட்டுச் சிலப்பதிகாரத்தை இயற்றினர். அதற்குள் சாத்தனார் கோவலன் மகள் மணிமேகலையின் வரலாற்றை ஒரு காவியமாகப் பாடி முடித்திருந்தனர். பின்னர் இருவரும் தத்தம் நூல்களை மற்றவர் அவைத்தலைமையில் அரங்கேற்றினர்.

மேல்விவரித்த செய்திகளின் உண்மை இக்காலத்தில் பற்பல காரணங்களால் ஐயுறப்படுகிறது. சேர வேந்தர்களின் வரலாற்றைக் கூறும் பதிற்றுப் பத்தில் 2-ம் 5-ம் பத்துக்கள் முறையே நெடுஞ்சேரலாதனையும், செங்குட்டுவனையும் பற்றியன. அகம் புறம் ஆகிய தொகைநூல்களிலும் இவ் வேந்தர்களைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. இவற்றுள் ஒன்றிலேனும் இளங்கோவடிகளைப் பற்றிய பிரஸ்தாபமோ, அவர் செங்குட்டுவனின் தம்பி என்பதற்குரிய சான்றுகளோ

காணப்படவில்லை. சங்கநூல் தொகுதிகளிலிருந்தும் இளங்கோவடிகள் என்னும் ஒரு புலவர் சங்க காலத்தில் இருந்தனராக அறியக்கூடவில்லை. அவரது நண்பராகிய சாத்தனுர் பாடிய தொகைநூற் பாடல்களிலும் இளங்கோவடிகளைப் பற்றிய பேச்சே இல்லை. இவை முதலிய பல காரணங்களால் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் இளங்கோவடிகள் செங்குட்டுவனது தம்பியரல்லர் எனவும், சிலப்பதிகாரம் கடைச்சங்க காலம் எனக் கருதப்படும் 2-ம் நூற்றுண்டுக்கு மிகப்பிற்பட்டே இயற்றப்பட்டிருக்க வேண்டும் எனவும் அபிப்பிராயப் படுகிறுர்கள்.

பேராசிரியர் அவர்களின் இக் கொள்கை தமிழ் ஆராய்ச்சித் துறையில் புரட்சிகரமான மாறுதல்களை விளைப்பதாக உள்ளது. இதனுல் இளங்கோவடிகளின் வரலாற்றைப் புதிய கோணத்திலிருந்து ஆராயவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு புலவரின் வரலாற்றை ஆராய்வதற்குப் புறச்சான்றுகளைவிட அவரது நூல்களில் காணப்படும் அகச்சான்றுகளே சிறந்த ஆதாரமாகக் கொள்ளத் தக்கன. இளங்கோவடிகளின் குடும்ப வரலாறும், கால நிர்ணயமும் சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவாம். ஆனுல் அவரது புலமையையும், கலை உணர்ச்சியையும், உள்ளப் பண்பாட்டையும் உணர்வதற்கு அவரது நூலை ஆராய்தல் ஒன்றே அமையும். அதன் மூலம் இளங்கோவடிகளது இயல்பின் முக்கிய அம்சங்களை நாம் அறிதல் கூடும்.

சிலப்பதிகாரத்தினுள்ளே ஒளிந்திருக்கும் இளங்கோவடிகளைத் தேட முயல்வது ஓர் இலக்கியப் பொழுது போக்காகும். அந்நூலைத் துருவினுல் இளங்கோவடிகளின் உள்ளத்தைக் காணலாம்; உரையைக் கேட்கலாம்; அவரது விருப்பு

வெறுப்புக்களை அறியலாம்; சமூகம், சமயம், அரசியல் முத லிய துறைகள் பற்றிய அவரது கொள்கைகளை உணரலாம்; அவரது பண்பாட்டுணர்ச்சியைத் தெரியலாம்; அவரது கலை ஞானத்திலும் நிறை புலமையிலும் நாம் திளைக்கலாம்; பொழுது போவது தெரியாமல் அவருடன் ஆன்ம உறவு கொண்டு மகிழலாம். சிலப்பதிகாரத்தைக் கற்கும்போது இளங்கோவடிகளது அளப்பரிய பெரும் புலமை நம்மை வியப்பினுள் ஆழ்த்துகிறது. அவர் கல்லாத கலை இல்லை; முங்கி முழுகாத அறிவுத் துறைகளில்லை; அவரது நுண் மாண் நுழைபுலத்தால் அளவிடப்படாத அறிவுச் சுரங்கம் அக்காலத்தில் எதுவும் இல்லை. அச் சுரங்கங்களில் அகழ்ந் தெடுத்த நன்மணிகளை அவர் தமது நூலில் காட்சிப் பொரு ளாகத் தொகுத்து வைத்துள்ளார். விஷயத்தின் பரப்பில் மட்டுமல்ல, ஒவ்வொன்றையும் நுட்பமாக உணர்வதிலும் அவருக்கு இணை அவரே. எந்த விஷயத்தையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். சமயக் கருத்துக்கள், யாகம் மந்திரம் இவை பற்றிய செய்திகள், உத்தரகுரு முதலிய போக பூமிகளைப் பற்றிய செய்திகள், ஆசிரம அமைதிகள், ஆசிரியர் மாணவர் இயல்புகள், சமூக நிலை, அக்கால மக்கள் அணிந்த ஆபரண வகைகள், நவமணி இலக்கணங்கள், அவர் கள் வழிபட்ட கோவில்களின் அமைப்புக்கள் வழிபாட்டு முறை கள், மக்களின் தொழில்கள், அவர்கள் கைபாண்ட கருவிகள், அவரது ஊர்திகள், உணவு, தானிய வகைகள், அரசியல் செய்திகள், மக்களின் கல்வி அறிவு ஒழுக்கங்கள், இசை, நாட கம், பரதநாட்டியம் முதலிய நுண்கலைகள், இசைக் கருவி களின் அமைதிகள், சோதிடம் முதலிய பிற கலைகள், செடி, கொடி, மரங்கள், பலவகைப் பூக்கள் இவைபற்றிய செய்திகள் இன்னும் இவ்வகையான அறிவுத் துறைகள் அனைத்தையும்

அவர் தெளிய உணர்ந்திருந்தார். சுருங்கக் கூறின் ஆயகலைகள் அறுபத்து நான்கும் ஒருங்கு குடிகொண்டிருந்த ஓர் அறிவுக் களஞ்சியம் அல்லது ஞானப் பொக்கிஷம் என்று அவரைக் கூறுதல் தகும். இத்தகைய ஞானச் செல்வத்தை அரசியல் துறையிலும், இல்லற வாழ்விலும் ஈடுபடும் ஒருவரால் அடைதல் இயலாதென்று கருதிப்போலும் இளங்கோவடிகள் இளமையிலேயே துறவற நெறியை மேற்கொண்டது, அல்லது அவர் மேற்கொண்டதாகக் கதை எழுந்தது.

புலமைக்கு அடுத்தபடியாக, இளங்கோவடிகளின் உயர்ந்த உள்ளப்பாங்கு நமது நெஞ்சைக் கொள்ளை கொள்ளுகிறது. அவரது உள்ளம் மாசு மறுவற்றது; துறவு வாழ்க்கைக்கேற்பத் தூய்மையுடையது; காய்தல் உவத்தல் அகற்றித் துலாக்கோல் போல நடுவு நிலைமையோடு விஷயங்களைச் சீர்தூக்கும் நேர்மை வாய்ந்தது. இளங்கோவடிகள் அரசன் தம்பியாக இருந்தும் ஏனைய சோழ பாண்டிய மன்னர்களையும் அவரது ஆட்சி முறை முதலியவற்றையும் கூறும்போது சிறப்பாகப் பாராட்டியே பேசுகின்றார். அவ்வாறே தமது சமண நெறிக்கு வேறான வைதிகம், பௌத்தம் ஆகிய நெறிகளைச் சொல்லும்போதும் அவற்றிற்கு யாதோர் இழுக்கும் வராமல் உயர்வு தோன்றக் கூறுகின்றார். இத்தகுதியை எண்ணியே சாத்தனார்,

> முடியுடை வேந்தர் மூவர்க்கு முரியது
> அடிகள் நீரே அருளுக

என்று சிலப்பதிகாரத்தை இயற்றும்படி அவரை வேண்டிக் கொண்டார்.

இளங்கோவடிகளின் உள்ளப் பண்பாடு அவர் பெண்மைக்கு அளிக்கும் பெருமையால் நன்கு புலனாகின்றது. கற்புடைய மாதரை அவர் பக்தியுடன் போற்றுகிறார். புகார் நகரிலிருந்த பத்தினிப் பெண்டிர் எழுவர் வரலாற்றை அவர்கள் புரிந்த அருஞ்செயல்களோடு வஞ்சினமாலையில் விளக்குவது இதற்குச் சான்று. கண்ணகியை மாதரெல்லாம் தொழுதேத்தும் ஓர் இலட்சியமாகச் சித்திரிக்கிறார். கோவலன் தன் தீய ஒழுக்கத்தால் கண்ணகியின் இல் வாழ்க்கையைச் சிதைத்து, அவளது அணிகலன்களைப் பெற்றுச் சென்ற போதும் அவள் அவனிடம் ஒருபொழுதும் கடுஞ்சொற் கூறி அறியாள். தன் பொருட்டுத் தன் மாமன் மாமியர் வருத்தம் கொள்கிறார்கள் என்பதை அறிந்தபோது அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காகத் தனது வருத்தத்தை வெளிக் காட்டாது நடந்து கொள்கிறாள். கோவலனது அன்பை மீண்டும் பெறுவதற்காகச் சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் தீர்த்தங்களில் நீராடி, காமவேட் கோட்டத்தை வழிபடும்படி தேவந்தி என்னும் தோழி கண்ணகியிடம் கூறிய போது அவள் ‘கொண்டானின் மிக்க தெய்வமில்லை’ என்ற உறுதிப்பாட்டால், அது பெருமையன்று என மறுத்து விடுகிறாள். கோவலன் மாதவியை வெறுத்து நீங்கித் தன்னிடம் வந்தபோது தன்பால் எஞ்சியுள்ள சிலம்பையும் எடுத்துக் கொள்ளச் சொல்லுகிறாள். கோவலன் மறுநாள் காலையில் மதுரைக்குச் செல்ல வேண்டுமென்று கூறியபோது, மறுக்காமல் புறப்பட்டுக் கூடவே செல்கிறாள். இத்தகைய பெண்மை நலம் சிறந்த கண்ணகியைத் தெய்வமாக வழிபடுகிற முறையை இந்நாட்டிலும், இலங்கை மாளவம் முதலிய தீவுகளிலும் பரப்பிப் பெண்மை யுலகத்திற்குப் பெருமை யளித்தவர்கள் சேரன் செங்குட்டுவனும் இளங்கோவடிகளு மாவர்.

சிலப்பதிகாரத்தில் வரும் மற்ருேர் பெண்பாலான மாதவியை ஓர் இழிந்த பாத்திரமாகச் சிலர் கருதுவதுண்டு. அதன் காரணம். அவள் கோவலனது அன்பைத் தனக்குரிமையாக்கி அதனுல் கண்ணகிக்குக் கேடு விளைத்தாள் என எண்ணுவதேயாம். ஆனுல் இளங்கோவடிகளோ அவளை ஒரு சற்பாத்திரமாகவே தீட்டுகிருர். இசை நடனங்களில் வல்ல ஒரு கலையரசியாகவும், பின்முறை வதுவையர்க்குரிய பெருமை யுடையவளாகவும் அவள் காட்சி அளிக்கிருள். கோவலன் ஊழ்வினை காரணமாக மாதவியை வெறுத்துக் கண்ணகியிடம் வந்தபோது, தன் வருத்தத்தில் அவளைச் 'சலம்புணர் கொள்கைச் சலதி' என்று குறிப்பிட்டாலும் கோபந் தணிந்த நிலையில், 'தன் தீதிலள்' எனக் கௌசிகன் என்னும் அந்தணனிடம் கூறுகிருன்.

இளங்கோவடிகளின் பண்பாட்டுணர்ச்சி சிறந்து காவிய இன்பம் தரும் இடங்களில் ஒன்று வழக்குரை காதையில் வருகிறது. கோவலன் கொலையுண்ட பின் கண்ணகி அனுதையாய் ஆருத் துயரத்தோடு அரசனைக் கண்டு முறையிடுவதற்காக அரண்மனைக்கு வருகிருள். அப்பொழுது அங்கே அரச சபை கூடியிருக்கவில்லை, அதற்குரிய காலமன்ருதலின் அரசன் மட்டும் அரியணையில் தனித்திருக்கிருன். வாயிற் காவலன் அரசனிடம் சென்று கணவனை இழந்த பெண் ஒருத்தி அவனைக் காண வந்திருப்பதாக அறிவிக்கிருன். பின் அரசன் கட்டளைப்படி வாயிற்காவலன் கண்ணகியை அவனிருக்கும் இடத்திற்கு அழைத்து வருகிருன். கண்ணகியை அரசன் முன்னிலையிற் கொண்டு நிறுத்தியபின் வாயிற்காவலனுக்கு அங்கே நிற்பதற்கு உரிமையில்லை. அவன் அவ்விடத்தினின்று அகன்றுவிடவேண்டும். ஆகவே கண்ணகி மன்னனது மாளிகையில் அவன் தனித்திருக்கும்போது தன் வழக்கை

உரைக்க வேண்டியவளாக இருக்கிறாள். இம் முறையிலே கதையை அமைப்பதற்கு அடிகளின் பண்பாட்டுணர்ச்சி இடந்தரவில்லை. ஆகவே அடிகள் முன்னெச்சரிக்கையோடு தக்க சூழ்நிலையைக் காவியத்தில் அமைக்கிறார். கண்ணகி அரசன் முன்னிலையில் தோன்றுமுன் பாண்டிமா தேவியை அரசவைக்குக் கொணர்ந்து அவன் அருகில் அமரச் செய்கிறார். தேவி தீக்கனாக்கண்டு அதனை அரசனிடம் அறிவிப்பதற்காக அங்கு வருகிறாள். அரசனும் அரசியுமாக இருக்கிற சபையிலே கண்ணகியைக் கொண்டு நிறுத்தி வழக்காட வைக்கிறார் கவிஞர்.

உலக மக்கள் நல்லொழுக்கங்களைக் கடைப் பிடித்து நல் வாழ்வு வாழ வேண்டுமென்று இளங்கோவடிகள் அறிவுறுத்துகின்றார்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றுவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்

ஆகிய மூன்று உண்மைகளை உலகத்தார்க்கு உணர்த்துவதன் பொருட்டே அவர் சிலப்பதிகாரத்தை இயற்றியதாகப் பதிகம் கூறுகிறது. நூலின் கண் அமைந்துள்ள அரும் பொருள்களும், கவிதை நயங்களும், நாடக இயல்புகளும் மிகப்பல. இவை யாவும் இளங்கோவடிகளின் மேதையைக் குன்றின்மேலிட்ட தீபம் போல நன்கு புலப்படுத்துகின்றன. இம்மேதையின் சிறப்பாலேயே இளங்கோவடிகள் தமிழிலக்கிய உலகில் அழியாத அமர நிலையை எய்தியுள்ளார்.

'தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேரும் சிலப்பதி கார மதை
ஊனிலே எம் உயிர் உள்ளளவும் நிதம்
ஓதியுணர்ந்தின் புறுவோமே'.

6. கண்ணகியின் வழக்குரை

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தைக் கலைத்துறையில் அப்புலவர் பெருமான் அடைந்துள்ள ஒப்பற்ற சாதனையாக அறிஞர்கள் பாராட்டுகின்றனர். கவிஞர் பாரதியாரும்,

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்

என்று மிக்க ஆர்வத்துடனும் உணர்ச்சியுடனும் அந்நூலைக் குறிப்பிடுகின்றார். அதன்கண் கலையமைப்பும் கலையழகும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. அதில் வரும் முக்கியமான கட்டங்களைக் கவிஞர் உருவாக்கும் வகை மிக அற்புதமாக உள்ளது. கதை நிகழ்ச்சிகளைக் கண்முன் நிகழ்வதைப் போன்ற உணர்ச்சி தோன்றுமாறு அமைத்தல், பாத்திரங்களை அவ்வவர்களின் தனிப் பண்புகள் புலனாகுமாறு சிருஷ்டித்தல் முதலிய நாடகத்தின் நல்லியல்புகள் யாவும் அதனிடம் அமைந்து விளங்குகின்றன. இதனை நன்குணர்ந்தே நமது முன்னோர்கள் நாடகக் காப்பியம் என்ற பெயரை அதற்குச் சூட்டியுள்ளனர். நாடக இயல்பு செவ்வையாகப் புலப்படும் இடங்களில் கணவனை இழந்த கண்ணகி பாண்டியன் முன்போந்து வழக்குரைக்கும் பகுதி சாலச் சிறந்ததாகும். அதன் நயத்தைச் சற்றுக் காண்போம்.

வழக்குரை காதைக்கு முந்திய காதை ஊர்சூழ் வரி என்பதாகும். அதில் கூறப்படும் செய்திகளின் தொடர்பாகவே வழக்குரை காதை அமைந்துள்ளது. ஊர்சூழ் வரியின் இறுதியிலே கோவலன் வெட்டுண்டு கிடந்த இடத்

திற்குக் கண்ணகி அழுது அரற்றிக்கொண்டு வந்து அவனது மார்பைத் தழுவிக் கொள்வதும், அப்போது குற்றுயிராகக் கிடந்த கோவலன் எழுந்து கண்ணகியின் முகம் வாடியதென்று வருந்திக்கூறி அவள் கண்ணீரைக் கையால் மாற்றுவதும், கண்ணகி அவன் பாதங்களைக் கையாற் பற்றிக் கொண்டிருக்கவே அவனது உயிர் உடலைவிட்டுப் பிரிவதும், உடனே கண்ணகி மிக்க சினங்கொண்டு பழி பாவம் அறியாத தன் நாயகனை அநியாயமாகக் கொன்ற தீ வேந்தனைக் கண்டு அதன் காரணத்தைக் கேட்பேன் என்று கூறிப் புறப்பட்டு மன்னன் மாளிகை வாயிலின் முன் வருதலும் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்ணகி மன்னவன் கொற்ற வாயிலின் முன்வந்து நிற்கும் வேளை இரவுப் பொழுதாகும். இச் செய்தி ஊர்சூழ் வரியில் வரும்,

கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணுள்
மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற்
செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றெளிப்ப
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட

(19; 29-32)

செவ்விய பொற்கொடி போன்றவளான கண்ணகி, கோவலன் இறந்த செய்தியைக் கேட்டு ஆற்ருது, அவனைக் காண்பதற்காக, மதுரையின் மாட வீதியிலே, பெண்டிரையும், சான்ருேரையும் தெய்வத்தையும் நொந்து அழுதுகொண்டு வருவதைக் கண்டு, சகியாமல் மேற்குத் திசைநோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் சூரியன், கண்ணகி வெட்டுண்ட தன் கணவனைக் காணும்போது அடையவிருக்கும் பேர் அவலநிலையைக் காண விரும்பாதவனுய் உலகை இருள் சூழும்படி

செய்துவிட்டு மேற்குத் திசையிலே மறைந்து விடுகின்றான். இயற்கைப் பொருள்களை இங்ஙனம் கதை நிகழ்ச்சிகளுக் கேற்ப இன்பமோ துன்பமோ உறுவதாக வர்ணித்துப் பாடுவது காவிய நயத்தை மிகுவிப்பதன் பொருட்டுக் கையாளப்படும் ஓர் இலக்கிய மரபாகும்.

கோவலன் இறந்த செய்தியைக் கேட்ட அப்பொழுதி லிருந்து கண்ணகியின் நிலையில் ஒரு பெரிய மாறுதல் காணப் படுகிறது. அதற்கு முன்பெல்லாம் கண்ணகியை ஒரு பேரழகி, பெருஞ்செல்வி, கொண்டானையன்றி வேறு தெய் வமில்லை என எண்ணும் குலமகள், கணவன் இழைத்த துன் பத்தையெல்லாம் தாங்கும் குணக்குன்று, பொறுமையின் பூண், ஒரு சிறந்த இல்லற மங்கை என்ற அளவில் நாம் அறி கின்றோம். கோவலன் ஒழுக்கத்தில் குன்றியவனாயினும் அவன் உயிருடன் வாழ்ந்த காலத்தில் கண்ணகி ஒரு மனை யாளுக்கிருக்க வேண்டிய நற்குணங்களையெல்லாம் பேணிக் காத்து வந்தாள். அவ்வாறு பேணுவதைத் தன் கடமையா கவும் எண்ணினாள். இப்பொழுதோ, கோவலன் கொலையுண் டதால் அவளது இல்வாழ்வு சிதைக்கப்பட்டுள்ளது. எனவே, இல்லற மங்கைக்குரிய பண்புகளை இனிமேலும் கடைப்பிடிப் பது அவசியமில்லை என்று எண்ணுகின்றாள். மேலும் ஒரு குற்றமும் செய்யாத தன் கணவனைப் பாண்டியன் அநியாய மாகக் கொன்றதை எண்ணும்போது பல்லாண்டுகளாகப் போற்றி வந்த நற்குணங்களெல்லாம் அடங்கி ஒடுங்கிப்போக சினமும் சீற்றமும் மேலெழுந்து விடுகின்றன. ஆதலால் அவள் வீர பத்தினியாகக் காட்சியளிக்கின்றாள். இந்நிலையையே அரும்பத உரையாசிரியர் சீறிய கற்பு என்று குறிக்கின்றார். கணவனை இழந்தபின் கண்ணகிக்கு உலக வாழ்க்கையிலே

வெறுப்புத் தோன்றி விடுகிறது. ஒருசில பத்தினிப் பெண்டிரைப்போல் கணவன் இறந்தபின் துன்புறுவன நோற்றும், துறைபல மூழ்கியும் வாழ அவள் விரும்பவில்லை.

இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறுவன நோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ
(18; 34 - 37)

என்று கூறுகின்றாள்.

கண்ணகி கணவனைப் பிரிந்து உலகில் தனித்து வாழ விரும்பவில்லை. அவனுடனே தனது வாழ்க்கையையும் முற்றுவித்துக்கொள்ள உறுதிகொண்டுவிட்டாள். ஆயினும் அதனை அக்கணமே செய்துகொள்ள எண்ணவில்லை. உயிரைத் தன் உடலிற் சில தினங்கள் தாங்கி நிற்கின்றாள். அதற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு. கோவலன் குற்றமற்றவன் என்பதையும், விற்கக்கொண்டு வந்தது தனது சிலம்பே என்பதையும் கண்ணகியையன்றி அம் மதுராபுரியில் வேறு எவரும் அறியமாட்டார்கள். பாண்டியனுக்கும் உண்மை தெரியாது. அவன் கோவலனைக் கள்வன் என்று எண்ணிக் கொலைத் தீர்ப்பு வழங்கினான். ஆணையும் நிறைவேற்றப்பட்டு விட்டது. பாண்டியனும் குடிவருந்தக் கோலோச்சும் கொடுங்கோல் வேந்தனா? அல்லன். அவனும் ஒரு செங்கோல் வேந்தனே. இதுகாறும் அவனது ஆட்சியில் இம்மாதிரியான பிழை எதுவும் நேர்ந்ததில்லை. வெட்டுண்ட கோவலனைக் காண்பதற்காகக் கண்ணகி வீதிவழியே கண்ணீரும் கம்பலையுமாக வருவதைக் கண்ட மாநகர் மக்கள்,

"வளையாத செங்கோல் வளைந்தது இதுவென்கொல்"
"தண்குடை வெம்மை விளைத்தது இதுவென்கொல்"
என்று கூறுவதிலிருந்து பாண்டியன் நேர்மையைக் குறித்து மக்கள் கொண்டிருந்த மதிப்பு வெளிப்படுகிறது.

பாண்டியன் மனமறியத் தவறிழைப்பவனல்லன். பொற்கொல்லன் அரசமாதேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் தன் சிற்றிலில் இருக்கிறான் என்று கூறியபோது, மன்னனது அப்பொழுதைய மனநிலை அதனைக் குறித்து நன்கு சிந்திப்பதற்கு இடந்தராமல் போயிற்று. மன்னன் அன்று மாலையில் தன் தேவியுடனும், மந்திரச் சுற்றத்துடனும் ஆடல் பாடல் முதலிய இன்ப நிகழ்ச்சிகளில் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தான். கலையின் நிலையமான மதுரையிலே ஆடல் பாடல், இசை முதலிய கலைகளில் சிறந்த மகளிர்கள் அரச சபையில் தம் கலைத்திறமையைப் புலப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அரசன் கலை நுகர்ச்சியில் ஈடுபட்டுப் பக்கத்திலிருக்கும் தன் மனைவியையும் மறந்து, கலைச்செல்வம் வாய்ந்த அக்காரிகைகளையே இமை கொட்டாமற் பார்த்திருந்தான். இதனைத் தேவி தவறாக உணர்ந்து, மன்னன்மீது ஊடல்கொண்டு தனக்குத் தலைநோய் கண்டிருப்பதாகப் பொய்க்காரணத்தைக் கூறி, அரசவையை விட்டு அகன்று அந்தப்புரம் சென்றாள். தேவி மனவருத்தங்கொண்டு செல்வதை அறிந்த அரசன் அவள் ஊடலைத் தணிப்பதற்காகச் சபையைக் கலைத்துவிட்டுச் சில பணிப்பெண்கள் தன் பின்னால் வரக் கோப்பெருந்தேவியின் கோயிலை நோக்கிக் காமபரவசனாய்ச் சென்றுகொண்டிருந்தான். அவ்வேளையில் பொற்கொல்லன் அரசன் முன் சென்று பணிந்து, கோயிற் சிலம்பு கொண்ட கள்வன் தன் சிறிய குடிலின்கண் இருப்பதாகக் கூறினான். சிலம்பு காணா

மற் போனதால் முன்பு ஒரு சமயம் வருத்தமுற்றிருந்த தேவியிடம் சிலம்பு அகப்பட்ட செய்தியைக் கூறினுல் அவள் தற்சமயம் கொண்டிருக்கும் ஊடல் நீங்குவதற்கு ஏதுவாகும் என்று அரசன் எண்ணியிருத்தலும் கூடியதேயாம். காதல் மிகுதியால் பகுத்தறிவு குன்றியிருந்த அவ்வேளையிலும், மன்னவன் ஏவலாளரை நோக்கித் தன் தேவியின் காற்சிலம்பு கள்வன் கையிலிருந்தால் அவனைக்கொன்று சிலம்பைக் கொணருமாறு தான் கட்டளையிட்டான். களவு செய்தவனுக்குக் கொலைத் தண்டனை வழங்குதல் அக்கால நியதி என்று தெரிகிறது. அவ்வாறு கட்டளை பிறப்பித்ததில் மன்னவன் இழைத்த தவறு ஒன்று உண்டு. ஒருவன் குற்றவாளியா அல்லவா என்று விசாரித்து முடிவுகட்டவேண்டிய பொறுப்பு அரசனைச் சார்ந்ததாகும். அதன் பின் அவன் ஏவியபடி செய்வதொன்றே ஏவலாளருக்குரிய கடமை. சிலம்பைத் திருடியவன் கோவலன்தான் என்பதைப் பொற்கொல்லன் கூற்றைக் கொண்டே முடிவு செய்யாமல், கோவலனையும் தன்பால் வரவழைத்துக் கேட்டுப் பின்னர் இருவர் கூற்றையும் சீர்தூக்கி ஆராய்ந்து நீதி வழங்குவதே முறையாகும். அங்ஙனம் செய்யாது தண்டனையை நிறைவேற்ற வேண்டிய ஏவலாளனிடம் (executive) தீர்ப்புக் கூறும் பெரும் பொறுப்பையும் (judiciary) ஒப்படைத்த பெருங் குற்றம் அரசனைச் சார்ந்தது. அரசனது இந்தத் தவற்றைப் பொற்கொல்லன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான். கோவலனது தோற்றத்தைக் கண்டு அவன் களவு செய்திருக்கக்கூடுமா என்று சந்தேகித்த ஏவலாளர்களிடம் கள்வர்களின் களவாடும் ஆற்றலை உதாரணமாகத்தான் எடுத்துக்கூறிக் கோவலன் கள்வன் என்றே அவர்களும் கருதும்படியாகச் செய்துவிட்டான். உடனே கொலையிற் பழகிய ஏவலாளன் ஒருவன் தன்

வாளாற் கோவலனை வெட்டி வீழ்த்தினான். ஆராஅமரச் சிந்தித்துச் செயல்புரியும் மன்னன் இன்று இத்தவறு இழைத்ததற்குப் பொற்கொல்லன் அவனை அணுகியபோது இருந்த அவனது மனநிலையும், சூழ்நிலையுமே காரணமாகும். அத்தகைய நிலைமையைத் தோற்றுவித்ததற்கு இளங்கோவடிகள் ஊழ்வினையே ஏதுவாகக் கூறி அமைகின்றார். அறநெறி வழுவாத இப்பாண்டியனுக்குத் 'தீய வழுக்கியும் வாயாற் சொல்லிய குற்றம் வாராதிருக்க வேண்டுமென்று சிலப்பதிகாரத்தின் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் ஆசைப்படுகின்றார். அவர்,

> ... ... என்
> தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
> கன்றிய கள்வன் கைய தாகிற்
> கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென (16; 151-153)

என வரும் அடிகளுக்கு, "அவனைக் (கோவலனை) கொல்ல அச்சிலம்போடு ஈங்குக் கொணர்க எனக் கருதியவன் வினை விளைகாலமாதலின் கொன்று அச்சிலம்பு கொணர்க என்றான்" என்று சமாதானம் கூறுவார் போன்று விரிவுரை எழுதுகின்றார்.

இங்ஙனம் நீதிமானாகக் கருதப்பட்ட மன்னன் அறிந்தோ அறியாமலோ கோவலனைக் கள்வனாக மதித்துக் கொலைக் குற்றம் வழங்கியிருக்கும்போது உண்மை உணராத மக்கள் கோவலனைக் கள்வன் என்றே எண்ணக்கூடுமல்லவா? கோவலன் ஒரு காலத்தில் பெருநிலக்கிழவனாயிருந்து செல்வத்தை வாரி வழங்கியதுபோக, இப்பொழுது தன் நிலைகெட்டுக் களவு செய்யும் அளவிற்கு இழிந்துவிட்டான் என்ற பழி உலகில் நிலைத்துவிடக் கூடுமே என்று கண்ணகி அஞ்சுகின்றாள்.

"செம்மையின் இகந்தசொல் செவியகம் புகா அளவை
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி அழிவலோ"
(18; 44-45)

என்று கூறுவதிலும் இக்கருத்து வெளிப்படுகிறது. ஆகவே இறந்த தனது கணவன்மீது சுமத்தப்பட்டிருக்கும் களவுக் குற்றத்தைப் போக்குவதுதான் உயிருடன் வாழும் சிறு காலத்திற்குள் தான் செய்யவேண்டிய முதற்கடமை என்று எண்ணுகின்றாள். உடனே கண்ணகி தன் கண்ணிலிருந்து வடியும் நீரைத் துடைத்துக்கொண்டு அரசனைக் காண்பதற் காக அவன் மாளிகை நோக்கிப் புறப்பட்டுச் சிறிதுநேரத்திற் குள் அதன் வாயிலை அடைந்தாள்.

வழக்குரைகாதை இதிலிருந்து ஆரம்பமாகிறது. கோவ லன் களவுக்குற்றம் சார்த்தப்பட்டுக் கொலையுண்டான் என்ற செய்தியை மாதரி வீட்டில் வைத்துக் கேள்வியுற்று அவனைக் காண்பதற்காக அங்கிருந்து புறப்பட்டு வந்தபோதே கண்ணகி தனது கணவனின் மெய்ம்மையை விளக்குவதற்குப் பயன் படும் என்று எண்ணித் தன்பால் இருந்த ஒற்றைச் சிலம் பைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

செம்பொற் சிலம்பொன்று ஏந்திநம் பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்த திதுவென்கொல்
ஐயரி யுண்கண் அழுதேங்கி யரற்றுவாள்
தெய்வமுற் றுள்போலுந் தகைய திதுவென்கொல்
(19; 23-26)

என்று அவள் சிலம்போடு வரும் தோற்றத்தை மக்கள் வரு ணிப்பதைக் காண்க.

கோவலனும் கண்ணகியும் வாணிபம் செய்யும் நோக்கத்தோடு மதுரைக்கு வந்தபோது கண்ணகிக்குரிய இரண்டு சிலம்புகளையும் எடுத்து வந்தனர். ஆனால் மாடவீதியிலே சிலம்பு விற்கப் புறப்பட்டபோது கோவலன் அவற்றுள் ஒன்றை மட்டும் எடுத்துக்கொள்கின்றான். சிலம்புகள் சாதாரணமாக இரட்டையாக விற்கப்படுவதே முறை. தக்கவிலையும் அப்பொழுதுதான் கிடைக்கும். மாசாத்துவான் மகனான கோவலன் இதனை அறியாதிருக்க முடியாது. ஆயினும் கோவலன் ஒற்றைச் சிலம்பை மட்டும் எடுத்துச்சென்றதாக இளங்கோ கதை அமைப்பதன் நோக்கம் சிந்திக்கற்பாலதாகும்.

கோவலனும் கண்ணகியும் மதுரையில் மாதரி என்னும் ஆயர்குல நல்லாளின் வீட்டில் விருந்தினராக அமைகின்றனர். அம்மங்கை தன் வீட்டில் ஒரு பகுதியை அவர்களுக்கு அளித்து, உணவு ஆக்குவதற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் கொடுத்துத் தன் மகள் ஐயை என்பாளையும் குற்றேவல் புரிவதற்காக நியமித்தாள். கண்ணகி உணவு சமைத்துக் கோவலனை உண்பித்தாள். தன் கூடா ஒழுக்கத்தால் கண்ணகியோடு இல்வாழ்க்கை புரிதலை நெடுங்காலமாக இழந்திருந்த கோவலன் இன்று மீண்டும் அவள் இல்லறம் நடத்துவதைக் கண்டு இன்புறுகின்றான். அப்பொழுது கண்ணகிமாட்டுத் தான் இயற்றிய கொடுமைகள் யாவும் அவன் நினைவிற்கு வருகின்றன. அதற்காக அவன் இரங்குகின்றான். முன் செய்த தீங்குகளையெல்லாம் அவளிடம் கூறி வருந்துகின்றான். தான் மதுரைக்கு வா என்று அழைத்தபோது மறுத்துரையாது தன் பெற்றோர் உற்றோரிடமும் கூறிக்கொள்ளாது உடனே புறப்பட்டு வந்த அவளது பெருங்குணத்தைப் பாராட்டுகின்றான். ஆர்வ மிகுதியால்,

பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி (16; 89 - 91)

என்று அவளைப் போற்றுகின்றான். பெருஞ்செல்வக்குடியிலே பிறந்து மிகப் பெரிய விலை மதிப்புடைய அணிகலன்கள் பூண்டு செல்வக்குடியிலே வாழ்க்கைப்பட்ட குணவாட்டியை "அணிபறித்து அழகு செய்யும்" நிலைமைக்கு ஆளாக்கிய தன் வழுவாயில்லாத பிழையை எண்ணி மாழ்கின்றான். எஞ்சியிருக்கும் சிலம்புகள் இரண்டையும் விற்றுவிட்டால் அவள் பூண்டு வந்த அணிகள் அத்தனையும் இழந்ததாகிவிடும். ஞாபகத்திற்கேனும் ஒன்று இல்லாத நிலையில் அவ்விரண்டு சிலம்புகளையும் விற்றுவிட அவன் மனம் துணியவில்லை. ஆகவே இணையாக விற்றால் கூடுதலாகக் கிடைத்தற்குரிய பொருள் கிடைக்காவிடினும், ஒற்றைச் சிலம்பிலுள்ள பொன், அப் பொன்னில் இழைக்கப்பட்டுள்ள நவமணிகள், உள்ளீடாக இடப்பட்டுள்ள பரல்கள் இவற்றின் விலை கிடைத்தாற் போதும் என்று அமைகின்றான். அவ் ஒற்றைச் சிலம்பை விற்றுவரும் முதலே வாணிகத்திற்கு வேண்டிய மூலதனத்தைக் கோவலனுக்கு அளிக்கவல்லது. சிலம்பை விற்கச் சென்ற கோவலன் அதனை அரண்மனைப் பொற்கொல்லனிடம் காட்டி,

காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதியோ? (16; 111 - 112)

என வினவுவதும், பொற்கொல்லன்

கோப்பெருந் தேவிக் கல்லதை இச்சிலம்பு
யாப்புற வில்லை (16; 121 - 122)

என விடை பகர்வதும் சிலம்பின் உயர்வை வெளிப்படுத்து கின்றன. அச்சிலம்பு அரசமாதேவியின் சிலம்பை வேலைப் பாட்டாலும் அருவிலையாலும் ஒத்திருந்ததாலேயே, பொற் கொல்லன் தான் கவர்ந்த சிலம்புக்குப் பதிலாக, அரசனும் தேவியும் அறியாதபடி அதனைக் கொடுத்துவிடலாமெனத் தீர்மானித்தான். கண்ணகி காலில் அணிந்த நகையே இத் துணைச் சிறப்புடையதாயின் அவள் கழுத்திலும் கையிலும் முன் அணிந்திருந்த பிற நகைகளின் மதிப்பு அனுமானிக்கக் கூடியதே. இதனால் அந்நகைகளை அணிவித்த மாநாய்கனின் செல்வ நிலையின் உயர்வும் வெளிப்படுகிறது. இத்துணைசெல்வக் குடும்பத்திலே பிறந்து வாழ்ந்த கண்ணகிக்கு இக்கதி நேர்ந் ததே என்று நாம் பச்சாத்தாபப் படுவதற்கும் இடம் அளிக் கிறது. மேலும் ஒற்றைச் சிலம்பை விற்கச் சென்றதாகக்கூறு வது கதையமைப்புக்கும் அவசியமாகவே உள்ளது. கோவ லன் கள்வன் என்று குற்றம் சார்த்திக் கொல்லப்பட்டபின் அவன் குற்றமற்றவன் என்ற உண்மையை அரசன் முன் விளக்குவதற்கு மற்றைச் சிலம்பு தக்க சான்றாகவும் அமைகி றது. அது இல்லையென்றால் ஒருவரையும் அறியாத அவ் வூரிலே தன் கணவனின் மெய்ம்மையைக் கண்ணகி எங்ஙனம் நிரூபித்தல் இயலும்? பாண்டியனை வழக்கில் வெல்வதற்கு இச்சிலம்பு பயன்படுகிறது.

> **மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
> **கையில் தனிச்சிலம்புங் கண்ணீரும் - வையைக்கோன்**
> **கண்டளவே தோற்றான்.** (20; வெண்பா 3)

வழக்குரைக்க வந்த கண்ணகியின் கையிலிருக்கும் ஒற்றைச் சிலம்பைக் கண்டபோது பாண்டியன் தான் புரிந்த தவற்றை உணர்ந்து தன் வழக்கிலே தோல்வியுற்றான் என்று பின்னர்க் கூறுவதால் இது தெளிவாகிறது. இவற்றையெல்லாம் உட்

பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி (16; 89 - 91)

என்று அவளைப் போற்றுகின்றான். பெருஞ்செல்வக்குடியிலே பிறந்து மிகப் பெரிய விலை மதிப்புடைய அணிகலன்கள் பூண்டு செல்வக்குடியிலே வாழ்க்கைப்பட்ட குணவாட்டியை "அணிபறித்து அழகு செய்யும்" நிலைமைக்கு ஆளாக்கிய தன் வழுவாயில்லாத பிழையை எண்ணி மாழ்கின்றான். எஞ்சியிருக்கும் சிலம்புகள் இரண்டையும் விற்றுவிட்டால் அவள் பூண்டு வந்த அணிகள் அத்தனையும் இழந்ததாகிவிடும். ஞாபகத்திற்கேனும் ஒன்று இல்லாத நிலையில் அவ்விரண்டு சிலம்புகளையும் விற்றுவிட அவன் மனம் துணியவில்லை. ஆகவே இணையாக விற்றால் கூடுதலாகக் கிடைத்தற்குரிய பொருள் கிடைக்காவிடினும், ஒற்றைச் சிலம்பிலுள்ள பொன், அப்பொன்னில் இழைக்கப்பட்டுள்ள நவமணிகள், உள்ளீடாக இடப்பட்டுள்ள பரல்கள் இவற்றின் விலை கிடைத்தாற் போதும் என்று அமைகின்றான். அவ் ஒற்றைச் சிலம்பை விற்றுவரும் முதலே வாணிகத்திற்கு வேண்டிய மூலதனத்தைக் கோவலனுக்கு அளிக்கவல்லது. சிலம்பை விற்கச் சென்ற கோவலன் அதனை அரண்மனைப் பொற்கொல்லனிடம் காட்டி,

காவலன் தேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதியோ? (16; 111 - 112)

என வினவுவதும், பொற்கொல்லன்

கோப்பெருந் தேவிக் கல்லதை இச்சிலம்பு
யாப்புற வில்லை (16; 121 - 122)

என விடை பகர்வதும் சிலம்பின் உயர்வை வெளிப்படுத்து கின்றன. அச்சிலம்பு அரசமாதேவியின் சிலம்பை வேலைப் பாட்டாலும் அருவிலையாலும் ஒத்திருந்ததாலேயே, பொற் கொல்லன் தான் கவர்ந்த சிலம்புக்குப் பதிலாக, அரசனும் தேவியும் அறியாதபடி அதனைக் கொடுத்துவிடலாமெனத் தீர்மானித்தான். கண்ணகி காலில் அணிந்த நகையே இத் துணைச் சிறப்புடையதாயின் அவள் கழுத்திலும் கையிலும் மூன் அணிந்திருந்த பிற நகைகளின் மதிப்பு அனுமானிக்கக் கூடியதே. இதனால் அந்நகைகளை அணிவித்த மாநாய்கனின் செல்வ நிலையின் உயர்வும் வெளிப்படுகிது. இத்துணைசெல்வக் குடும்பத்திலே பிறந்து வாழ்ந்த கண்ணகிக்கு இக்கதி நேர்ந் ததே என்று நாம் பச்சாத்தாபப் படுவதற்கும் இடம் அளிக் கிறது. மேலும் ஒற்றைச் சிலம்பை விற்கச் சென்றதாகக்கூறு வது கதையமைப்புக்கும் அவசியமாகவே உள்ளது. கோவ லன் கள்வன் என்று குற்றம் சார்த்திக் கொல்லப்பட்டபின் அவன் குற்றமற்றவன் என்ற உண்மையை அரசன் முன் விளக்குவதற்கு மற்றைச் சிலம்பு தக்க சான்றாகவும் அமைகி றது. அது இல்லையென்றால் ஒருவரையும் அறியாத அவ் வூரிலே தன் கணவனின் மெய்ம்மையைக் கண்ணகி எங்ஙனம் நிரூபித்தல் இயலும்? பாண்டியனை வழக்கில் வெல்வதற்கு இச்சிலம்பு பயன்படுகிறது.

> **மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
> **கையில் தனிச்சிலம்புங் கண்ணீரும் - வையைக்கோன்**
> **கண்டளவே தோற்றான்.** (20; வெண்பா 3)

வழக்குரைக்க வந்த கண்ணகியின் கையிலிருக்கும் ஒற்றைச் சிலம்பைக் கண்டபோது பாண்டியன் தான் புரிந்த தவற்றை உணர்ந்து தன் வழக்கிலே தோல்வியுற்றான் என்று பின்னர்க் கூறுவதால் இது தெளிவாகிறது. இவற்றையெல்லாம் உட்

கொண்டே கோவலன் ஒற்றைச் சிலம்பை விற்பதற்கு எடுத்துச் சென்றதாக இளங்கோவடிகள் கதை அமைக்கின்றார்.

கண்ணகி மன்னனைக் காணவரும்போது அவன் தன் சபையிலே தனித்திருக்கின்றான். சபையை முன்னரே கலைத்துவிட்டபடியால் அமைச்சர்கள் எவரும் அவனுடன் இல்லை. ஆகவே, மன்னன் அமைச்சர்களின் துணையின்றித் தானே கண்ணகியின் வழக்கை விசாரிக்கவேண்டியவனாகிறான். இவ்வாறு கதையமைப்பதிலும் ஒரு பொருத்தம் உள்ளது. எங்ஙனமெனின், முன் கோவலனுக்குக் கொலைத் தண்டனை வழங்கிய போதும் மன்னன் மதியமைச்சரைக் கலந்து ஆலோசிக்கவில்லை; தனது கருத்துப்படியே அத்தண்டனையை அளித்தான். ஆகவே அமைச்சர் முன்னிலையில் கண்ணகியை வழக்குரைக்க வைப்பதாற் பயனில்லை. மேலும் தாம் சம்பந்தப்படாத ஒரு காரியத்தில் அமைச்சர்கள் என்ன தீர்ப்புக் கூற முடியும்! ஆகவே தண்டனை அளித்த மன்னனே அதற்குப் பரிகாரம் காணும்படியாக அமைச்சர்கள் இல்லாத வேளையில் கண்ணகியை அவன் முன் வழக்காட வைக்கின்றார்.

ஆனால் வேறோர் விஷயமும் இங்கே சிந்தித்தற்குரியது. கண்ணகியோ ஒரு பெண்பால்; இப்பொழுது வேற்றூரில் இருக்கின்றாள். தனக்கு உறுதுணையாக இருந்த கணவனையும் அங்கே இழந்து பற்றுக்கோடற்ற கொடிபோன்று துவள்கின்றாள். ஆறுதல்மொழி கூறுவதற்கும் அவ்வூரில் உற்றார் உறவினர் இல்லை. அவள் சார்பாக மன்னனிடம் சென்று வழக்காடுவதற்கும் எவரும் இல்லை. எனவே, அவள் தானே அரசன் முன்போந்து, தன் கணவனின் மெய்ம்மையைக் குறித்து வழக்காட வேண்டியவளாகின்றாள். ஆயினும் அன்று பகற்பொழுதிலே, காமபரவசனாய் ஆராயாது கொடுவினை செய்த மன்னவன் முன்னே, அதுவும் அவனது மாளிகையிலே,

இரவுப்பொழுதிலே கண்ணகி தனித்துச் சென்று வழக்காடு வதாகக் கதையமைப்பது கவிஞர்க்கு அத்துணைச் சிறப்பாகத் தோன்றவில்லை. அவரது பண்பாட்டுணர்ச்சியும் அதனை அனுமதிக்கவில்லை. ஆகவே அந்தச் சந்தர்ப்பத்தைக் கவிஞர் வேறு வகையில் சுவைபட அமைக்கின்றார். அரசன் முன்னிலையில் கண்ணகி வழக்காட வருவதன்முன் கோப்பெருந்தேவி அரசனைத் தேடிக்கொண்டு அவன் இருந்த அரசவைக்கு வருகின்றாள். அவள் வருவதற்கு ஒரு காரணமும் கூறப்படுகிறது. முன்னிரவில் துயிலச் சென்ற அரசமாதேவி ஒரு தீய கனவைக் காண்கின்றாள். பாண்டியனது செங்கோலும் வெண்கொற்றக் குடையும் கீழே விழுகின்றன. வாயிலிடத்துக் கட்டப்பட்ட மணி அடிப்பாரில்லாமலே ஒலிக்கின்றது. எட்டுத் திசைகளும் அதிர்கின்றன. சூரியன் இருளை விழுங்குவதற்கு மாறாக, இருளே சூரியனை விழுங்கி விடுகிறது. இரவிலே வானவில் தோன்றுகிறது. பகலில் விண்மீன்கள் எரிந்து விழுகின்றன. இவற்றைக் கண்டு தேவி திடுக்குற்று விழித்தாள். ஏதோ தீங்குநேரப் போவதாக எண்ணி அஞ்சினாள். இவற்றை இரண்டுமுறை தனது குற்றேவல் மகளிரிடம் கூறுகின்றாள். அடுத்தடுத்து இருமுறை கூறுவதிலிருந்து அவள் மனத்தடுமாற்றம் புலனாகிறது. தேவி அரசனைக் காணச் செல்கின்றபோது தோழிப் பெண்கள் வழக்கம்போல ஆடை வகைகள், மலர்மாலை, வாசனைப் பண்டங்கள் முதலியவற்றை ஏந்திக் கொண்டு முன்னே செல்கின்றனர். அங்ஙனம்செல்பவர்கள் "பாண்டியன் பெருந்தேவி வாழ்க" என வாழ்த்துக் கூறுகின்றனர். இவ்வாறு பல வகையான நுகர்ச்சிப் பொருள்களோடு வாழ்த்துரை ஒலிக்கச்சென்ற பெருந்தேவியின் நிலைமை சிறிது நேரத்திற்குள் என்னாகிறது! அந்தோ! பரிதாபம். இங்கு விவரித்த

இன்ப வர்ணனை பின் விளையப் போகும் துன்பத்தைப் பன் மடங்கு மிகுத்துக் காட்டுகிறது. எனவே அவலச் சுவையைக் கூரிதாக்கும் நோக்கோடே இந்த வர்ணனை முதலில் தரப்பட்டுள்ளது என்பதை உணரலாம்.

இத்தகைய ஆடம்பரங்களோடு அரசமாதேவி சென்று தான் கண்ட தீய கனவை அரசனிடம் கூற அவன் அதனைத் தன் சிம்மாசனத்திலமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். இவ்விடத்தில் பாண்டியனைக் குறிக்கும்போது இளங்கோ "திருவீழ் மார்பில் தென்னவர் கோவே" என்ற சொற்றொடரை ஆளுகின்றார். திருவீழ் மார்பு என்ற சொற்றொடர் தனலக்ஷ்மி, ராஜ்யலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி ஆகிய திருமாதர் விரும்பும் மார்பு என்ற பொருளோடு, அத்திரு மாதர் வீழ்ந்து போகின்ற மார்பு என்றும் பொருள்படுமாறு அமைந்துள்ளது. திரு நீங்கிவிடப்போகும் மார்பு என்ற குறிப்பால் சிறிது நேரத்திற்குள் விளையப்போகும் தீய நிகழ்ச்சியைக் கவிஞர் இங்கே மறைமுகமாகச் சுட்டியவராவர்.

அரசனும் அரசியுமாக அரியணையில் அமர்ந்திருக்கும் வேளையிலேதான் கண்ணகி வழக்குரைக்க வருகின்றாள். வந்தவள் முதலில் வாயிற் காவலனைக் கண்டு,

> **அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து**
> **இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!** (20; 25-26)

என்று அழைக்கின்றாள். 'அறிவு அடியோடு மாய்ந்து புண்ணியமற்றுப் போன நெஞ்சத்தையுடைய, இராச நீதி தவறிய, மன்னனது வாயிற்காவலனே!' என்று கூறுவதில் அம் மன்னன் இழைத்த தவறுகளையெல்லாம் வெளியிடுகின்

ளுள். பின்னர், ஒற்றைச் சிலம்பேந்திக் கணவனை இழந்த கைம்பெண் ஒருத்தி வாயிலில் வந்து நிற்பதாக அறிவிக்கச் சொல்லுகின்ளுள். சிலம்பு, கைம்பெண் என்ற சொற்களைக் கேட்கும் பொழுதே மன்னவனுக்குச் செய்தி புலனுகிவிடும். கண்ணகி வாயிற் காவலனை அழைக்கும்போது "வாயிலோயே வாயிலோயே!" என்றும் அரசனிடம் தான் வந்திருக்கும் செய்தியை அறிவிக்கச் சொல்லும்போது "அறிவிப்பாயே அறிவிப்பாயே" என்றும் இருமுறை கூறுவதால் அவளது மனக்கலக்கம் வெளிப்படுவதோடு அச்சூழ்நிலை முழுவதையும் கவிந்து கொள்ளும் ஒரு சோகப் படலமும் உருவாகிறது.

கணவனை இழந்தபின் சீறிய கற்பினளாக மாறிய வீர பத்தினியின் உருவைக் கவிஞர் இங்கேதான் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்ருர். கண்ணகியின் நிலையைக் கண்டவாயிற் காவலன் அதனை அரசன்பாற் சென்று அறிவிக்கும் மூலமாக அவளது நிலையை வெளியிடுவது காவிய அமைப்புக்கு மிக்க அழகைத் தருகிறது. வாயிற் காவலன் கண்களுக்குக் கண்ணகி எவ்வாறு காணப்பட்டாள், அவளைப் பார்த்த மாத்திரத்தில் அவன் உள்ளத்தில் எவ்வகை உணர்வுகள் தோன்றின என்பனவற்றை அவன் வாய்ச் சொற்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. வீர பத்தினியின் தோற்றம் ஏவலாளனது உள்ளத்தில் மகிஷாசுரன் தலையை வெட்டி வீழ்த்தி, குருதி ஒழுகும் அத் தலையைப் பீடமாகக் கொண்டு ஏறி நின்ற, பெரிய வேலைக் கையில் தாங்கிய கொற்றவையையும், சப்த கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியையும், இறைவனை நடனமாடச் செய்த பத்திரகாளியையும், தாருகாசுரன் மார்பைப் பிளந்த துர்க்கையையும் நினைவிற்குக் கொண்டு வருகிறது. ஆனல்

அழுத கண்ணும் ஆருத்துயரமுமாக ஒற்றைச் சிலம்பை ஏந்தி நிற்கும் பெண் உண்மையிலே அத்தெய்வங்களுள் ஒன்ருக இருக்கமுடியுமா? எனவே, கொற்றவை முதலிய தெய்வங்கள் போன்று தோன்றினும் அப்பெண் கொற்றவையல்லள், பிடாரியல்லள், பத்திரகாளியல்லள், துர்க்கையுமல்லள் என்று கூறுகின்ருன். அல்லள், அல்லள் என்று கூறினும் கொடுமையிழைத்த அசுரர்களைக் கோரக் கொலை புரிந்த அப்பெண் தெய்வங்களைக் கண்ணகி ஒத்திருந்தாள் என்ற குறிப்பு மன்னனது உள்ளத்தில் பெருந்திகிலை உண்டுபண்ணுகின்றது. மன்னன் கண்ணகியை உடன்தானே தன்பால் அழைத்து வருமாறு வாயிற்காவலனை ஏவுகின்ருன். "வருக மற்றவள் தருக ஈங்கு" என்று மன்னன் கூறும்போது அவனது மனத் தடுமாற்றம் வெளிப்படுகிறது.

காவலன் விரைந்து சென்று கண்ணகியை மன்னன் முன்னிலையில் அழைத்து வருகின்ருன். காவியத்தைக் கற்பவர் உள்ளம் இனிமேல் என்ன நடக்கப் போகிறது என்பதை அறிவதில் ஆர்வங் கொள்வது இயல்பு. இதை அறிந்தவர் போல் இளங்கோவும் இக்கட்டத்தில் கதையை வேறு வகையாக விரித்தலின்றி விறு விறுப்பாக நடத்துகின்ருர். ஏவலாளன் அரசன் ஆணையை மேற்கொண்டு அவன் முன்னிலையிலிருந்து நீங்கி, அரண்மனை வாயிலுக்கு வந்து, அங்கு நிற்கும் கண்ணகியிடம் அரசன் அவளைத் தன்பால் அழைத்து வரச் சொன்னுன் என்ற செய்தியை அறிவித்து, அவள் புறப்பட்டு வந்தபோது அவளை அழைத்துக்கொண்டு அரசன் முன்னிலையில் வந்தான் என்ற இத்தனை செய்திகளையும் 'வாயில் வந்து கோயில் காட்ட' என்ற ஓர் அடியில் சுருங்கக்கூறிக் கதைக்கு வேகம் தருகின்ருர்.

வாயிற் காவலன் கண்ணகியின் வரவைக் கூறிய போது மன்னன் மனதில் தோன்றிய தளர்வும் திகிலும், அவளை நேரிற் கண்டபோது பன் மடங்கு அதிகமாகின்றன. இவ்வுண்மை, கண்ணகியின் கோலத்தை ஒப்பற்ற சொற்சித்திரமாகத் தீட்டும் கீழ்வரும் வெண்பாக்களால் நன்கு புலனாகின்றது.

காவி உகுநீருங் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னன். (20; வெண்பா 2)

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர். (20; வெண்பா 3)

பாண்டியன் மனமாரத் தீமை செய்தறியாதவன்; ஆகையால் கள்வனைத் தான் கொன்றது நேர்மையான செயலென்றே எண்ணிக் கொண்டிருக்கின்றான். ஆதலால் கண்ணகி ஏதோ உண்மை அறியாமல் தன்பால் வழக்குரைக்க வந்திருக்கிறாள் என்று நினைத்து அக்கருத்துப் புலப்பட அவளை "மடக்கொடியோய்!" என்று அழைத்து "யாரையோய் நீ" என்று வினவினான்.

அப்பொழுது கண்ணகி விடுக்கும் பதில் அவன் நெஞ்சைப் பிளப்பதாக உள்ளது. தான் செய்தது நேர்மையானதே என்று எண்ணிக்கொண்டிருக்கும் மன்னனுக்கு அவ்வெண்ணம் தவறானது என்பதை அறிவிப்பாள்போல் "தேரா மன்னா!" என்று அழைக்கின்றாள். பின்னர், தான் புகார்

நகரத்தைச் சார்ந்தவள் என்பதை அவள் அறிவிக்கும் வகை மிக்க நயமுடையதாகும். முதலில் சோழநாட்டை ஆண்ட நீதி மன்னர்களான சிபிச் சக்ரவர்த்தி, மனுச் சோழன் என்போரின் வரலாற்றைக் கூறி, பொன்றாப் புகழுடைய அம் மன்னர்கள் நீதி போற்றிய புகாரே தம் ஊர் என்று குறிப் பிடுகின்றாள். இவ் வேந்தர்களில் சிபி தன்னிடம் அடைக்க லமாக வந்த ஒரு புறாவிற்கு நேர்ந்த துன்பத்தைத் தன் உடலை அர்ப்பணிப்பதன் மூலமாகத் தீர்த்துத் தேவர்களாலும் வியந்து பாராட்டப் பெற்றான் என்றும், மனு வேந்தன் கன்றை இழந்த ஒரு பசு மாளிகை வாயிலிற் கட்டிய மணியை ஒலித்து அரச குமாரன் தனக்கிழைத்த கொடுமையை அறி வித்தபோது, அரசன் தன் குலத்திற்கு ஒரு மைந்தனே உள்ளான் என்பதையும் உணராமல் கன்று மடிந்த இடத்தி லேயே மகனைக் கிடத்தித் தேர் ஊர்ந்தான் என்றும் கூறு கின்றாள்.

சிபியோ, தன்பால் அடைக்கலமாக வந்த புறாவிற்கு வேறொரு பருந்தால் நேர்ந்த துன்பத்தைத் தீர்ப்பதற்கே தன் உடலை அரிந்து துலையில் வைத்து, அது நிறைவுறாதாகப் பின் தானே துலையேறி மடிந்து புகழுடம்பு பெற்றான். கோவ லனும் கண்ணகியும் சோழ நாட்டை விட்டுப் பாண்டியநாடே தஞ்சமென்று வந்தவர்கள். கோவலன் உயிர் புறாவின் உயி ரினும் மிக்க உயர்வுடையதென்பதைக் கூறவேண்டியதில்லை. மேலும் புறாவிற்குத் துன்பம் பருந்தால் நேர்ந்தது. ஆனால், இங்கே காக்கக் கடம்பூண்ட மன்னனே கோவலனுக்குத் தீமை இழைத்திருக்கின்றான். இங்ஙனம் கூறியதால் சோழ னின் செங்கோன்மையாகிய திரையின் முன்னே பாண்டிய னது கொடுங்கோன்மை மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

மனுச் சோழன் வரலாற்றில் கன்றையிழந்து துன்புற்றது ஒரு பசு. பசுவும் தனக்கு நேர்ந்த துன்பத்தை வாயாற் கூற அறியாமல் மணியை ஒலித்துக் குறிப்பாலேயே அரசனுக்கு அறிவித்தது. குற்றமிழைத்த அரச குமாரனும் வேண்டுமென்று கன்றுக்குத் தீமை புரியவில்லை. ஆனால் கண்ணகி விஷயத்திலோ, துன்புறுவது ஒரு பெண்பால். அவளும் தன் துன்பத்தை வாய்விட்டுக் கூறி முறையிடுகின்றாள். அவளுக்கு நேர்ந்த துன்பம் மன்னவன் ஆணையால் விளைந்ததாகும். எனவே மனுச்சோழன் நீதிவழங்கிய போது அமைந்திருந்த சூழ்நிலையினும் மிகக் கொடுமையும் துக்ககரமுமான ஒரு நிலையில் தான் இருப்பதாகக் கண்ணகி மன்னனுக்குக் குறிப்பால் உணர்த்துகின்றாள்.

இவ்வாறு தன் ஊர் புகார் என்பதைக் குறித்த பின்னர் கண்ணகி தன் கணவன்

> "ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
> மாசாத்து வாணிகன் மகன்" (20; 57-58)

என்று அன்புகனியக் கூறுகின்றாள். இதனால், புகழாலும் செல்வத்தாலும் சிறந்த தன் கணவன், மன்னவன் கருதியதைப் போலக் களவைச் சிந்தையாலும் நினைப்பவனல்லன் என்றும், அவ்வாறு கருதிய மன்னனே தவறுடையான் என்றும் உணர்த்துகின்றாள். மேலும் தன் கணவன் "வாழ்தல் வேண்டி நின் நகர் புகுந்திங்கு என் காற் சிலம்பு பகர்தல் வேண்டி" வந்தவன் என்று சொல்லும்போது வாழவேண்டும் என்ற ஆவலோடு வந்த கணவன் வாழ்வை அரசன் முடித்து விட்டான் என்ற குறிப்பு சோக ரசத்தின் உச்ச நிலையை எட்டி விடுகிறது. மேலும், கோவலன் குற்றமில்

லாதவன்; அவன் விற்கக் கொணர்ந்தது தன் காற்சிலம்பே என்று கண்ணகி கூறியபோது தான் கூறும் வழக்குரையிலே தெளிவுபடுத்தப்பட வேண்டிய விஷயம் இன்னது என்பதையும் குறித்து விடுகிருள். இவ்வாறு சொல்லி வந்து கடைசியாக அவள் "நின்பாற் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயரே" என்று தன் வரலாற்றைக் கூறி முடித்தாள்.

தான் செய்தது சரியென்றே எண்ணிக் கொண்டிருக்கும் மன்னன் கண்ணகியைப் பார்த்து,

> ... ... பெண் அணங்கே
> கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
> வெள்வேற் கொற்றங் காண் (20; 64-65)

என்று கூறினன். இதைக் கேட்டதும் கண்ணகிக்கு, அரசன் தனது சிலம்பைத் தன் தேவியின் சிலம்பென்று எண்ணி இன்னமும் மயங்கிக் கொண்டிருக்கிருன் என்பது விளங்கி விட்டது. ஆகவே, தன் கணவன் விற்கக் கொண்டுவந்தது அரண்மனைச் சிலம்பல்ல; தனது சிலம்பே என்பதை நிரூபிக்க எண்ணி, "அரசே எனது பொற்சிலம்பின் அரி மாணிக்கம்" என்ருள். முத்துக்குப் பெயர்பெற்ற பாண்டிநாட்டு அரசன் தேவியின் காற்சிலம்பில் முத்துக்கள் பரலாக இடப்பட்டுள்ளன. இதனை மன்னவன் அறிவான். எனவே, கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பு யாருடையதென்று முடிவு கட்டுவதற்குத் தெளிவு கிடைத்துவிட்டது. மன்னனும் உண்மையை அறியவேண்டும் என்ற ஆர்வத்தில் அச்சிலம்பை அரண்மனையிலிருந்து எடுத்து வந்து கண்ணகியிடம் கொடுக்கச் சொல்லுகிருன். சிலம்பு கண்ணகியின் முன் வைக்கப்பட்டதும் அவள் அதனை உடைத்தாள். அப்போது அதற்குள்ளிருந்த மாணிக்கப் பரல் தெறித்து, ஆராயாது அநீதி செய்த

அரசனை அவனது முகத்திலே தாக்கி விட்டு அவன் கண்முன்னே வீழ்ந்தது. அந்த மணியைக் கண்ட மன்னவனது நிலையை இளங்கோவடிகள் ஒரு சோகச் சித்திரமாகத் தீட்டுகிறார்.

... ... மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே. (20; 72-78)

மன்னவன் வீழ்ந்ததும் அவன் உயிர் பிரிந்தது. முன்னே கண்ணகியின் தோற்றத்தைக் குறித்து வாயிற் காவலன் கூறியபோதும், பின் கண்ணகியை நேரிற் கண்டபோதும் பதைப்புற்றிருந்த அவனது உயிர் சிலம்பிலிருந்து தெறித்த மாணிக்கப் பரலைக் கண்டபோது உடலை விட்டு எளிதிற் பிரிந்து சென்றது.

பாண்டியன் மயங்கி வீழ்ந்து மடியவே, அதனைக் கண்ணுற் காணும் தீவினையுடையளாகிய அரசமாதேவி நடு நடுங்கிக் குலைந்து

"கணவனை யிழந்தோர்க்குக் காட்டுவ தில்"

என்று கூறித் தன் கணவனது இரண்டு பாதங்களையும் பற்றிக்கொண்டு தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடுவாள் போன்று ஆவி துறந்தாள். அரசமாதேவி அரசனுடன் உயிர் நீத்தது எவ்வகையிலும் பொருந்துவதேயாம். அரசன் தீவினை விளைப்பதற்கு அவளே காரணமாக இருந்தாள். ஆடல்

பாடல்களில் ஈடுபட்டிருந்த பாண்டியனைத் தவறாக உணர்ந்து அவள் ஊடி அகன்றதாலேயே மன்னன் அவளைச் சமாதானம் செய்வதற்காகக் காம பரவசனாய் மதியமைச்சரை விட்டு நீங்கி அந்தப்புரம் சென்றான். செல்லும் வழியில் எதிர்ப் பட்ட பொற்கொல்லனிடம் ஆராயாமலே, கள்வனைக் கொன்று மனைவியின் சிலம்பைக் கொண்டுவருமாறு ஆணையிட்டான். எனவே, கோவலன் இறக்கவும் அதனைத் தொடர்ந்து பாண்டி யன் இறக்கவும் அரசமாதேவி காரணமாக இருந்தாள் என்று கூறுவது தவறாகாது. அவள் மட்டும் நிதானமாக மன்னன் இயல்பறிந்து நடந்திருந்தால் இத் தீவினைகள் நிகழ்ந்திரா என்றும் கருதலாம். ஆகவே பாண்டியன் இறப்பதற்குக் காரணமாக இருந்த அரசமாதேவி தன் குற்றத்தை உணர்ந்து தானும் கணவனோடு மடிவது எவ்வகையாலும் பொருத்தமானதேயாம். அது அவளுக்குப் புகழையும் தேடித் தருகிறது.

அரசமாதேவி கூறிய "கணவனை இழந்தோர்க்குக் காட் டுவதில்" என்ற வாசகம் பொருள் நிரம்பியதாகும். ஒரு பெண்பால் தன் தாய் தந்தை முதலியவர்களுள் ஒருவரை இழந்து விட்டால் அவளை ஆற்றுவதற்காக நெருங்கிய உற வினர்களை அவளிடம் காட்டி, "அம்மா, இவள் பெற்ற தாயி னும் உற்ற தாயாக இருந்து உன்னை அணைத்துக் கொள் வாள்; இவர் தந்தைக்குத் தந்தையாக இருந்து உன்னை ஆதரிப் பார்" என்று கூறமுடியும். ஆனால் கணவனை இழந்த மனை விக்கு இவ்வகையில் ஆறுதல் கூற முடியாதல்லவா! இத னால் கணவனது மறைவு ஈடுசெய்வதற் கியலாத பெரிய நஷ்டம் என்பதைப் பாண்டிமாதேவி குறிப்பிடுகின்றாள்.

பத்தினிப் பெண்களை தலை, இடை, கடை என மூவகை யாகப் பகுத்துக் கூறும் முறை ஒன்றுண்டு. தன் கணவன் இறந்தபோது அவ் அதிர்ச்சியால் உலகில் இனிமேல் வாழ விரும்பாது உடனே உயிரை விடுகின்றவள் முதல் வகுப் பைச் சார்ந்தவளாவள். அரசமாதேவி இவ்வகையைச் சார்ந்து பெருமை பெற்றுள்ளாள். கண்ணகிக்குப் போலும் இப் பெருமை அமையவில்லை. கண்ணகி கோவலன் இறந்த பதினன்காம் நாளிலேயே திருச்செங்குன்றில் வைத்துக் கணவனுடன் விண்ணுலகம் ஏகினள்.

கோவலன் இறந்தபின்னும் கண்ணகி சில தினங்கள் உயிர் வாழவேண்டிய அவசியம் இருந்தது. அவள் கணவ னேடு இறந்திருந்தால் கோவலனின் மெய்ம்மையை உலகுக்கு விளக்குவதற்கு இடமில்லாமற் போகும். கண்ணகி பின் னும் சில தினங்கள் உயிர் தாங்கியிருந்து பாண்டியன்முன் வழக்காடி வென்றதாலேயே, கோவலனது மெய்ம்மை வெளிப்பட்டதோடு பாண்டியனது மனத் தூய்மையும், நேர் மையும், பாண்டிமாதேவியின் கற்பும் மலைவிளக்கென உலகில் துலங்கலாயின. பின்பு அவள் சேர நாட்டிற்குச் சென்று திருச்செங்குன்றில் வைத்து விண்ணுலகம் ஏகியதாலேயே அச் செய்தியை மலைவாணர் மூலம் அறிந்த செங்குட்டுவன் பத்தினி வழிபாட்டை நாடெங்கும் பரப்பினன்.

பாண்டிமாதேவியும் கண்ணகியும் உயர்ந்த பத்தினிப் பெண்டிரேயாவர். அவர்களுக்குள் உயர்வு தாழ்வு காணுதல் தகாது. இவ்வுண்மை சிலப்பதிகாரம் காட்சிக் காதையில் விளக்கப்படுகிறது. மலைவளங் காணச் சென்றிருந்த செங்குட் டுவன் மதுரைப் புலவரான சாத்தனர் மூலமாகக் கோவலன் கொலையுண்ட செய்தியையும், பாண்டியன் அரசுகட்டிலில்

துஞ்சிய செய்தியையும், அவற்றின் பின்விளைவுகளையும் கேட்டுக்கொண்டிருந்தபோது, அவன் தன் அரசியைப் பார்த்து, "பாண்டிமாதேவியினும் கண்ணகியினும் சிறப்புடையர் யாவர்" என்று வினவ, அவள் அவ்விருவருக்கும் உயர்வு தாழ்வு கூற விரும்பாளாய், "பாண்டியன்தேவி துறக்கத்தில் பெருந்திருவுறுக; கண்ணகியை நாம் கோவில் எடுத்து வழிபடுவோம்" என்று கூறிய பொருளுரை பாராட்டுதற் குரியதாகும்.

கோவலன் கண்ணகியரது வாழ்வு குலைவதற்குப் பாண்டியன் காரணமாக இருந்தாலும், அவன்மீது நமக்கு இரக்கமே தோன்றுகிறது. எத்தனை நற்குணமுடையவனாயினும் மனிதன் சூழ்நிலையால் அறிவு சோர்ந்து தவறிழைக்க நேர்கிறது என்பதையும்,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் (380)

என்பதையும் அவனது வரலாற்றிலிருந்து நாம் உணர்கிறோம். அநியாயமாக ஓர் உயிரை வாங்கிவிட்ட செய்தியைப் பாண்டியன் அறிந்தபோது அவன் பட்ட துயரும், அதனை ஆற்றாது அவன் அரசு கட்டிலில் விழுந்து இறந்ததும் அற்புதமாகவே அமைந்துள்ளன. இதனால் பாண்டியன் உலகுள்ளளவும் அழியாப் புகழுக்கு உரிமை பெற்று விடுகிறான். அவன்மீது நமக்குப் பரிவும் பெருமதிப்பும் உண்டாகின்றன. சேரன் செங்குட்டுவன் பாண்டியன் இறந்த செய்தியையும் அதன் காரணத்தையும் கேட்டபோது

எர்மோ ரன்ன வேந்தர்க் குற்ற
செம்மையின் இகந்தசொற் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்த்தமை உறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது (25; 95-99)

என்று பாராட்டுகிறான்.

பாண்டியன் தான் செய்த பழியைத் தன்போன்ற வேந்தர்கள் அறிவதன் முன்னே தன் ஆருயிர் துறந்ததும், தீவினையால் வளைந்த செங்கோலைத் தன் உயிரைக் கொடுத்து நிமிர்த்ததும் அவன்மீது படிந்த மாசைப் போக்கி ஓர் உயர்ந்த புனிதமான பாத்திரமாக அவனை ஆக்கித் தருகின்றன.

சிலப்பதிகாரத்தை மேனாட்டு இலக்கிய முறைப்படி ஒரு துன்பியல் நாடகம் (tragedy) என்று கூறலாம். சிலப்பதிகார நிகழ்ச்சியின் இறுதியில் ஆடவரும் பெண்டிருமாகப் பலர் உயிர் துறக்கின்றனர். முதன் முதலில் கதா நாயகனை கோவலன் கொல்லப்படுகின்றான். அன்றிரவே கண்ணகியின் வழக்குரை கேட்டுப் பாண்டியன் இறக்கின்றான். அவன் இறந்த சில நிமிஷங்களுக்குள் பாண்டிமாதேவியும் உயிர் துறக்கின்றாள். கோவலன் இறந்த பதினான்காம் நாள் கண்ணகியும் இவ்வுலக வாழ்வை நீத்து விண்ணுலகம் செல்கின்றாள். இச் செய்தியறிந்து மாதரியும், கோவலன் நற்றாயும், கண்ணகியின் நற்றாயும் உயிர் துறக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தில் வரும் துன்ப நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஊழ்வினையே முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

அடித்தளமாக அமைந்த ஊழ்வினையின் மீதாக வேறு சில காரணங்களும் புலப்படுகின்றன. கதா நாயகனான கோவலன் இறப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது அவன் மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியின்பால் வந்ததேயாம். மாதவியை விட்டு நீங்குவதற்குக் கடற்கரையிலே கோவலன் பாடிய பாட்டை மாதவி பிறழ உணர்ந்து தான் வேறு குறிப்புடையாள்போலப் பாடியதே காரணமாகும். கோவலனோடு நெடுநாள் பழகியிருந்தும் மாதவி அவனது மனத் தூய்மையை உணரவில்லை.

அதுபோலவே, கோப்பெருந்தேவியும் பாண்டியனின் செவ்விய மனத்தை உணராதவளாக இருந்தாள். மன்னன் ஆடல் பாடல்களில் மனம் ஈடுபட்டிருந்தபோது அதனைத் தவருக உணர்ந்து ஊடி அவனைவிட்டு அகல்கின்ருள். அதன் விளைவாகவே மன்னன் ஆராயாது கோவலனுக்குக் கொலைத் தண்டனை வழங்குகின்ருன். அது பின்னர், அவனது மரணத்திற்கும், அவன் தேவியின் மரணத்திற்கும் காரணமாகிறது.

இதிலிருந்து ஓர் உண்மை வெளிப்படுகின்றது. காதலர்கள் தம் மனத்திலே அன்பிற்குரியார்மீது வீணுக ஐயப்பாடுகள் தோன்ற இடங்கொடுத்து, அதனைத் தெளிய உணரும் பொறுமை இன்றி, நிதானத்தை இழந்து ஆத்திரத்தில் காரியம் செய்வதன் மூலமாகவே ஊழ்வினையானது தனது நோக்கத்தை முற்றுவித்துக் கொள்கிறது என்பதே அவ்வுண்மையாகும்.

இங்குக் கூறப்பட்டவை போன்ற பல நயங்களும், உண்மைகளும் ஏனைக் காதைகளிலும் உள்ளன. அவை யாவும் கலாரசிகர்களுக்கு நல் விருந்தாகும் என்பது உறுதி.

7. கம்பரின் உரையாடல்

கம்பர் இயற்றிய பேரிதிகாசமாகிய இராமாயணத்திற்குக் கம்ப நாடகம் என்னும் ஒரு பெயர்வழக்கு உண்டென்பதை அறிஞர்கள் அறிவர். சிலப்பதிகாரமும் இவ்வாறே நாடகக் காப்பியம் என வழங்கப்படுவதைக் குறித்து முன்பு கூறினேம். ஆனல் மேனாட்டு நாடக நூல்களைப் பயின்றவர்கள் அந்நூல்களிற் காணப்படும் அங்கம், களம் முதலிய பாகுபாடுகளும், நூல் அமைந்துள்ள முறையே அரங்கில் நடிப்பதற்குரிய தகுதிகளும் இவற்றில் இல்லாதிருப்பதை எளிதில் உணர்வர். சங்க காலத்தில் இருந்தனவாகத் தெரியவரும் நாடக நூல்கள் எத்தகைய அமைப்புடையனவாய் இருந்தன என்பதைக் குறித்து ஒன்றும் அறியக் கூடவில்லை. ஆயினும், ஷேக்ஸ்பியர் அரங்கில் நடிப்பதற்காக எழுதிய நூல்களை நாடகம் என்று வழங்கும் பொருளில் நமது சிலப்பதிகாரத்தையும் கம்பராமாயணத்தையும் வழங்குவதற்கில்லை என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

அங்கம், களம் முதலிய பாகுபாடுகளும், அரங்கில் நடிப்பதற்குரிய அமைப்புக்களும் ஒரு நாடகநூலிற்கிருக்கவேண்டிய இன்றியமையாத இலக்கணங்களேயாம். நாடகத்தின் பயன் நன்கு கைகூடுவதற்கு அவை மிகவும் உதவியாக இருக்கின்றன. ஆயினும், அவற்றோடு நாடகத்தின் எல்லாப் பண்புகளும் நிறைவுறுவதில்லை. நாடகத்தின் இலக்கணங்களாக அமைந்து அவற்றிற்குச் சிறப்பைத் தருகின்ற வேறு பண்புகளும் உண்டு: அவை கலையழகு தோன்றக் கதையை அமைத்

தல், அழகிய கட்டங்களைத் தக்க இடங்களில் அமைத்து நாடகத்தை உருவாக்குதல், காண்போர் உணர்ச்சியைக் கவர்தல், அவ்வுணர்ச்சியை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு வந்து உச்ச நிலையை எய்துவித்தல், அந்நிலையில் ஓர் உண்மையை அழுத்தமாகப் பதித்துவிட்டுப் பின்னர் அவ்வுணர்ச்சியைப் படிப்படியாகத் தளர்த்திக்கொண்டு வருதல், நிஜ உலகில் மக்களிடம் காணப்படும் வெவ்வேறு இயல்புகளும் புலனுகும்படி பாத்திரங்களைப் பலவகையாகப் படைத்தல், பாத்திரங்களைக் கதையில் வரும் இன்பமும் துன்பமும் ஆகிய அனுபவங்களில் திளைக்கச் செய்வதன் மூலம் உயர்ந்த நீதிகளை வெளியிடுதல், ஒவ்வொரு பாத்திரத்தின் இயல்புகளையும் நாடக் ஆசிரியன் தனது கூற்றுகக் கூருது, அப்பாத்திரங்களின் சொல், செயல் இவற்றின் மூலமாகவும் பிற பாத்திரங்களின் வாயிலாகவும் வெளியிடுதல், உரையாடல்களைத் திறம்பட அமைத்தல் முதலியனவாகும். இவை எல்லாவற்றினும், இறுதியிற் கூறிய உரையாடல் மிக முக்கியமானதாகும். நவீன நாடகங்கள் தொடக்கத்திலிருந்து இறுதி வரையிலும் சம்பாஷணை வடிவாகவே அமைந்துள்ளன. இச் சம்பாஷணை வாயிலாகவே ஏனைய பண்புகள் அனைத்தையும் நாடகாசிரியன் தான் இயற்றும் நாடக நூலில் அமைத்து வெற்றி பெறுகின்றுன். சம்பாஷணைகளைக் கலைத்திறனேடு அமைத்து நாடகத்தை உருவாக்குவதிலேயே நாடக ஆசிரியனின் மேதை வெளிப்படுகிறது.

நாடகத்தின் இலக்கணங்களாகப் பிற் கூறியவை யாவும் சிலப்பதிகாரத்திலும், கம்பராமாயணத்திலும் நன்றாக அமைந்துள்ளன. இவற்றை எண்ணியே நாடகம் என்ற பெயரை அவற்றிற்கு அமைத்து வழங்கலாயினர் நம் முன்னேர். கம்பராமாயணம் பல காண்டங்களாக விரிந்து செல்லும் ஒரு

பெரிய நூலாகும். அதில் தேவர், முனிவர், அரசர், அமைச்சர், மக்கள், வேடர், அரக்கர், குரங்கு, கழுகு முதலிய பல வகையான பாத்திரங்கள் வருகின்றன. ஒவ்வொரு பாத்திரமும் தனக்குரிய தனிப்பண்பு தோன்ற அமைக்கப்பெற்றுள்ளது. தசரதரின் புதல்வர்கள் நால்வரும் நால்வகையான குணமுடையவராக புலப்படுகின்றனர். மேலும் காதல், திருமணம், பூக்கொய்தல், புனல்விளையாடல், பிரிவு, துன்பம், போர், மரணம், வெற்றி, முடிசூட்டுவிழா முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளும் அந்நூலின்கண் விரிவாகக் கூறப்படுகின்றன. நகை, அழுகை முதலிய ஒன்பது சுவைகளும் வெவ்வேறிடங்களில் வெளிப்படுகின்றன. இவ் எல்லா அம்சங்களினூடும், மணிக்கோவை வடத்திற்குட் செல்லும் நூல்போலச் சிறந்த உரையாடற் பகுதிகள் கலையழகுபட அமைந்து அப்பெரு நூலுக்கு ஏற்றத்தை அளிக்கின்றன. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றாற்போல, அயோத்தியா காண்டத்தில் மந்தரை சூழ்ச்சிப்படலத்தை எடுத்து அதன்கண் அமைந்துள்ள உரைநடையின் நயத்தைச் சற்றுக் காண்போம்.

மிக நெடுங்காலமாக அயோத்தியை ஆண்டுவந்த தசரதர் தமக்கு முதுமை நெருங்குவதை உணர்ந்து, மறுமைக்கு ஆவனவற்றைச் செய்ய எண்ணி, காட்டிற் சென்று தவம் புரிய விரும்புகிறார். முதலில் இராமனுக்கு முடிசூட்டு விழாவை நடத்தி அரச பாரத்தை அவனிடம் ஒப்புவிக்க நினைந்து அதனைத் தம் அமைச்சர்களோடு ஆலோசனை புரிகின்றார். அவர்கள் தசரதர் முடி துறப்பதற்கு வருந்தியும், இராமன் அரசனாக வருவதற்கு மகிழ்ந்தும் ''இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆவென'' இருக்கின்றனர். அப்போது

வசிஷ்டர், அரசர் செய்ய நினைந்தது நற்கருமமே என்று பாராட்டுகிறார். பின்பு அமைச்சர்களும் அதற்கு உடன்படுகின்றனர். உடனே தசரதரது ஏவலின்படி சுமந்திரர் சென்று இராமனை அரசவைக்கு அழைத்து வருகின்றார். தசரதர் தமது எண்ணத்தை இராமனிடம் எடுத்துக்கூறி அரசுரிமையை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறார். தந்தையின் கட்டளையை ஏற்றுக்கொள்வதே தன் கடமை என்று எண்ணிய இராமன் அதற்கு இசைகின்றான். அரசர் பின்பு சோதிடர்களை அழைத்து முடிசூட்டு விழாவிற்கு நாள் நிச்சயிக்கச் சொல்லுகிறார். அவர்கள் மறுதினமே மிகப் பொருத்தமான நாள் என்று கூறுகின்றனர். தசரதர் உடனே முடிசூட்டு விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி வசிஷ்டரிடம் சொல்லுகிறார். வள்ளுவர் மூலமாகப் பட்டாபிஷேகச் செய்தி நகர மாந்தர்க்குப் பறையறைந்து அறிவிக்கப்படுகிறது. மக்கள் மிக்க கோலாகலத்தோடு நகரை அலங்கரிக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு முடிசூட்டுவிழாவிற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்துவிட்டுத் தசரதர் அச்செய்தியைக் கைகேயிக்கு உரைப்பதற்காக அவள் அரண்மனைக்கு வருகிறார். அவர் வருவதற்கு முன்புள்ள சிறு பொழுதிற்குள்ளேதான் கதைப்போக்கை எதிர்பாராத வகையில் முற்றிலும் வேறான ஒரு புதிய துறையிலே திருப்பிவிடுவதற்குக் காரணமான மந்தரையின் சூழ்ச்சி நடைபெறுகிறது.

நகர வீதியிலே சென்ற மந்தரை நகரம் அலங்கரிக்கப்படுவதன் காரணத்தை மக்களிடம் உசாவித் தெரிந்துகொண்டாள். அவள் முன்னரே இராமனிடம் பகைமையும் பழிவாங்கும் சிந்தையும் உடையவளாக இருந்தாள். இராமன் சிறு குழந்தையாக இருந்தபோது விளையாட்டாகத் தனது

வில்லில் மண் உருண்டைகளை வைத்து அவள் முதுகில் ஒரு முறை ஏவியதே அதன் காரணம். பிள்ளை விளையாட்டு என்று சிரித்து அப்பொழுதே மறந்துவிட வேண்டிய அவ் அற்பச் செய்தியை அவள் தன் தீய சிந்தைக்குள் மறைத்து வைத்துப் பழிவாங்குவதற்குத் தக்க தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். இராமனது பட்டாபிஷேகச் செய்தியைக் கேட்டதும் அவளது கெடுமனம் தீய வழியிலே தொழிற்பட ஆரம்பித்தது. மந்தரை மிக்க கோபங்கொண்ட வளாய், கைகேயியின் அரண்மனைக்கு வருகின்றாள்.

அங்கே கைகேயி ஒரு வெண்மையான படுக்கையின் மீது பாற்கடலில் பவளவல்லி கிடந்தாற்போன்று சயனித்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் அவளது கடைக்கண்களி லிருந்து கருணை பொழிந்து கொண்டிருந்ததாகக் கம்பர் பாடுகின்றார்.

> பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
> போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
> மேற்கிடந் தாள். (மந்தரை. 4)

எனவே, மந்தரை அணுகியபோது கைகேயியின் உள்ளம் எவர் மீதும் பொறாமை, கோபம், வெறுப்பு ஆகிய குறை குணங்கள் இல்லாதிருந்தது என்பது மட்டுமல்ல, பிறர்க்கு அருள்புரியும் நிறைகுணம் உடையதாகவும் இருந்தது என் பதை உணரலாம்.

கைகேயியை இதுவரையிலும் ஓர் உயர்ந்த பாத்திர மாகவே கம்பர் தீட்டியுள்ளார். தன் கணவன் கருத்துக்கு மாறுபட நடவாத "தெய்வக் கற்பின"ளாக அவள் காட்சி

தருகின்ருள். தசரதரும் ஏனைய மனைவியரை விடவும் அவ ளிடம் பேரன்புடையவராக இருக்கிருர். இராமன் முடிசூடப் போகும் நற்செய்தியைக் கோசலை நான்கு மங்கையர் சொல் லியே தெரிகின்ருள். கோசலையின் மூலமாகவே சுமத்திரை யும் அறிகின்ருள். ஆனல் கைகேயிக்கோ அச்செய்தியை மன் னரே சொல்ல வருகின்ருர். மற்றை மனைவியரிடம் அவர் சென்று சொன்னதாகக் கூறப்படவில்லை. கைகேயியிடம் மன் னர் பேரன்பு செலுத்துவதற்கு நியாயம் உண்டு. அவள் ஒரு வீரமாது. முன் தசரதர் தேவர்கள் பொருட்டுச் சம்பராசுர னுடன் பொருத போரில் இக் கைகேயியையும் உடனழைத் துச் சென்றிருந்தார். அப்போரில் அவள் தசரதருக்கு நேர்ந்த இடரைப்போக்கி, அவருக்குச் சாரதியாக அமைந்து உதவி புரிந்தாள். அவ்வுதவியாலேயே தசரதர் அசுரனை வென்று அழியாப் புகழைப் பெற்றதோடு, தேவர்களுக்கு நல்வாழ்வையும் தேடித்தந்தார். அந்நன்றியைப் பாராட்டியே தசரதர் இரண்டு வரங்களை அவளுக்கு அளித்தார்.

கைகேயி இராமன் மீது "ஆழ்ந்த பேரன்புடையவள்". தன் மகன் பரதனைப்போலவே அவனையும் நேசித்தாள். இரா மனும் அவளைத் தன் பெற்ற தாயாகவே மதித்து வந்தான். தன் பிள்ளையென்றும், சக்களத்தி பிள்ளையென்றும் அரசன் தேவியர்க்குள் ஒருபொழுதும் வேற்றுமை உணர்ச்சி தோன் றியதில்லை. இராமனைப்போலவே பரதனும் பல நற்குணங் களின் நிலையமாக உள்ளவன். எனவே, கோசலையையும் இராம னையும் கண்டு கைகேயி பொருமைப்படுவதற்கு ஏதுவே இல்லை. நான்கு புதல்வர்களிலும் முதலில் தோன்றிய இரா மன் தசரதச் சக்ரவர்த்திக்குப் பின் நாட்டை ஆள்வதே முறை என்ற பொது தர்மத்தைப் பாலிப்பவளாகவே கைகேயி இருந்தாள்.

இங்ஙனம் மிக வுயர்ந்த நிலையிலிருக்கும் ஒரு சற்பாத்திரத்தைத் தன்வயமாக்கி, அவள் உள்ளத்திற் குடிகொண்டிருந்த தாய்மை, பெண்மை, ஈவு, இரக்கம், நேர்மை முதலிய நற்பண்புகளை அறவே சிதைத்து, பொறாமை, பழி, பாவம், பிடிவாதம், கொலையஞ்சாமை முதலிய குணங்களைத் தடிப் பேறும்படியாகச் செய்துவிட்ட மந்தரையின் ஆற்றல் சாதாரணமானதன்று. நற்குணங்களில் மிக உறுதியோடிருக்கும் ஒரு பாத்திரத்தை அவ்வுறுதி குலையவைப்பதில்தான் வெற்றியின் சிறப்பு உள்ளது. அக்காரியத்தைச் சாதித்த மந்தரையின் பேச்சு வன்மை மிக மிக வியத்தற்குரியதாகும். அதனை நோக்குவோம்.

துயில்கின்ற கைகேயியின் பாதங்களை மந்தரை தன் கையால் தீண்டி உணர்த்துகின்றாள். துயில் முற்றும் நீங்கப் பெறாத நிலையில் எழுந்த கைகேயியைப் பார்த்து அவள் பின் வருமாறு கூறுகின்றாள்.

மந்தரை: தேவி! இராகு அணுகி விழுங்குமளவும் தனது ஒளியிற் சிறிதும் குறையாமல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் குளிர்ந்த வெண்மையான சந்திரன்போலப் பெரிய துன்பமானது உன்னைப் பிணிப்பதற்கு நெருங்கவும் அதற்காகக் கொஞ்சமும் வருத்தப்படாமல் துயின்று கொண்டிருக்கின்றாயே.

[மந்தரை கைகேயியைக் குளிர்ந்த வெண்மையான சந்திரனோடு உவமித்து அவளைத் தன் அன்புதோன்றப் பெருமையாக அழைக்கின்றாள். பாம்பின் வாய்க்குள் அகப்பட்டுச் சந்திரன் மறைந்து விடுவதைப்போலக் கைகேயியும் அடியோடு அழிந்து போவதற்கான ஒரு துன்பம் அவளை நெருங்கியுள்

ளது என்று கூறிப் பாதி உறக்கத்தில் இருக்கும் கைகேயி யின் உள்ளத்தில் ஓர் அதிர்ச்சியை உண்டுபண்ணப் பார்க் கிருள். மேலும் இது உறங்குவதற்குரிய வேளையல்ல உடனே விழிப்போடு பரிகாரம் தேடுவதற்குரிய காலம் என் பதையும் அவளுக்கு அறிவுறுத்துகின்ருள்.]

கைகேயி: யாவரும் புகழ்தற்குரிய நற்புதல்வர்களைப் பெற்ற வர்கள் எவ்வகைத் துன்பமும் நீங்கி நன்மையை அடைவார்கள். பகைவர்களை வெல்லும் வில்லைத் தாங்கிய எனது புதல்வர்கள் நால்வரும் க்ஷேமமாக இருக்கின்றனர். அவர்கள் தருமத்தினின்றும் வழுவா தவர்கள். மேலும் இராமனைப் பெற்ற எனக்கு என்ன துன்பம் வரக்கூடும்?

"இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ"

[ஒருவற்குத் துன்பம் பொதுவாக இருவகையால் வரக் கூடும். ஒன்று பிறரால் உண்டாவது; மற்றையது தானே விளை வித்துக்கொள்வது. பகைவரை வெல்லும் விற்படை தாங் கிய மக்கள் நால்வர் இருக்கும்போது பிறரால் துன்பம் உண் டாவதில்லை. அம்மக்கள் தருமத்தினின்றும் வழுவாத நல் லொழுக்க முடையவர்களாய் இருப்பதால் எவ்விதத் துன்ப மும் தாமாக விளைவதும் இல்லையன்ருே! இனி, ஊழ்வினையால் துன்பம் வருவதுண்டெனின், அது சற்புத்திரரைப் பெற்றவர் களை அணுகுவதில்லை என்று ஆன்ருேர் நூல்கள் கூறுகின் றன. ஆகவே ஒருவகையாலும் துன்பம் உண்டாவதற்கு இட மில்லை. இங்கே புதல்வர்களைக் குறிப்பிடும்போது பரதனைக் கூருமல் இராமனைச் சுட்டிக் கூறுவதும், அவனைத் தானே பெற்றதாக மொழிவதும் கைகேயி இராமனிடத்தில் வைத்த அன்பையும் அவளது உள்ளத்தின் உயர்வையும் நன்கு விளக்குகின்றன.

பேராபத்து வந்திருப்பதாகச் சொல்லி கைகேயியின் உள்ளத்தைக் கலக்க முயன்ற மந்தரையின் முதல் முயற்சி பயனுருது போகிறது. ஆதலால் அவள் சக்களத்திமார்களிடையே சாதாரணமாகவுள்ள பொருமையைத் தூண்டித் தீவினை சூழ நினைக்கின்ருள்.]

மந்தரை: தேவி! உனது நன்மையும் செல்வமும் அழிந்து விடப் போகின்றன. கோசலை புத்தியுடையவள். ஆதலால் அவள் செவ்வையாக வாழ்கின்ருள்; இனியும் வாழப்போகின்ருள். நீ இதனை உணரவில்லை.

(இதைக் கேட்ட கைகேயி மந்தரையின் பேதைமையை எண்ணிச் சிரித்து)

கைகேயி: பேதாய்! தசரதச்சக்ரவர்த்தி எனது நாயகராகவும், பரதன் மைந்தனுகவும் இருக்கும்போது இவ்வுலகில் கோசலைக்கு என்னினும் அதிக வாழ்வு உண்டாதல் எங்ஙனம்?

மந்தரை: இரக்கமின்றித் தாடகை என்னும் ஒரு பெண்ணை ஆடவர்கள் சிரிக்கவும், தனது வீரம் குற்றமடையவும் கொன்ற இராமன் நாளை முடி சூடப்போகின்முன். கோசலைக்கு வரும் வாழ்வு இதுவாகும்.

ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளைவாழ் விதெனச் சொல்லினுள்.

[முன் இரக்கமின்றிப் பெண் கொலை புரிந்த இராமன் கைகேயிக்கும் தீமை புரியத் தயங்கமாட்டான் என்று குறிப்பிடுகின்ருள் மந்தரை.

இராமன் நாளை முடி சூடப்போகின்றான் என்பதைக் கேள்வியுற்றதும், கைகேயியின் உள்ளத்தில் இராமன் மீது வைத்த அன்பு கடல் போற் பொங்கி எழுந்தது. அவள் முகம் பூரணச் சந்திரன் போன்று பொலிவுற்றது. மகிழ்ச்சி எல்லை கடந்து அதிகரிக்கின்றது.]

கைகேயி: இராமன் முடி சூடப்போகும் நற் செய்தியைக் கூறிய உனக்கு இதோ இந்த ரத்னமாலை பரிசு.

[கைகேயி மாலையைப் பரிசாக அளித்தாள். இதிலிருந்து மந்தரை இதுகாறும் தனது முயற்சியில் அணுவளவேனும் வெற்றி பெறவில்லை என்பதைத் தெரியலாம்.

தான் வருத்தப்பட வேண்டிய காரியத்திற்கு வருந்தாதிருப்பது மட்டுமல்ல, மகிழ்ச்சியுற்றுப் பரிசும் வழங்க முற்பட்ட கைகேயியின் செயலை மந்தரை வெறுத்து அவள் மீது சினம் பொங்கிப் பெருமூச்சு விட்டு அழுதுகொண்டே, அவள் பரிசாக அளித்த மாலையை மண்ணின் மீது ஓங்கி எறிந்தாள்.

சாதாரணமாக ஒரு தாதி தன் அரசி அளிக்கும் பரிசிலைஇவ்வாறு எறிய மாட்டாள். ஆனால் மந்தரை அரசியிடம் தனக்கிருக்கும் செல்வாக்கும் உரிமையும் பற்றி இங்ஙனம் நடந்து கொள்கின்றாள். கைகேயியும் அதனை ஒரு குற்றமாகக் கருதவில்லை. மந்தரை ஏதோ அறிவில்லாமற் செய்கிறாள் என்று எண்ணி அவளுக்குச் சமாதானம் கூறப் பார்க்கின்றாள். ஆனால் மந்தரையோ மிக்க கோபம் கொண்டவளாய்க் கைகேயியைப் பார்த்துப் பின் வருமாறு பேசுகின்றாள்.]

மந்தரை: நீ அறிவு கெட்டவள். தான் வேறு கோசலை வேறு என்ற உணர்வு இன்னும் உனக்கு உண்டாகவில்லை. இதனால் நீயும் உனது மைந்தன் பரத

னும் பெரிய துன்பம் அடையப் போகிறீர்கள். இது வரையிலும் உனக்கு அன்பு செய்தது போக இனிமேல் கோசலேயின் தாதியர்க்கு அடிமை வேலே செய்ய என்னுல் முடியாது.

தேவி! நாளை சீதையும் இராமனும் உயர்ந்த சிம்மாசனத்திலிருக்க உன் மகன் பரதன் வெறுந் தரையிலிருப்பானே. நீ அதனேப் பார்த்து மகிழச்சி யடைவாயோ? கோசலே புத்தியுடையவள். ஆதலால் அவள் தனக்கு நன்மையானவற்றை அவ்வப் போது நாடிச் செய்துகொள்கின்ருள். அவளது மகனுன இராமனும் அரசுரிமையைப் பெற்று மேன்மையுறப் போகின்ருன். ஆனல் பாவி, பரதனே, உனது வயிற்றில் வந்து பிறந்ததனுல் அரசச் செல்வமனேத்தும் நீங்கப் பெற்ருன். நல் வாழ்வு வாழக் கொடுத்துவைக்காத பரதன் ஐயோ! இறந்து போனுனில்லேயே.

இனி இவ்வுலகமனேத்தும் இராமனே இலக்குவனேடு ஆளப்போகின்ருன். அவ்வாருயின், பரதனும் சத்ருக்நனும் நாட்டை விட்டுக் காட்டிற்குச் சென்று தவம் புரிதல் நன்று. பரதன் உலகத்தைக்காக்கும் அரசர் வரிசையில் வைத்து எண்ணப்படும் நல்வினே செய்யாதவன். அவனே அன்று தசரதச்சக்ரவர்த்தி அயோத்தியை விட்டுக் கேகய நாட்டிற்குச் செல்லுமாறு அனுப்பி வைத்தாரே அதன் நோக்கம் என்னவென்பது இப்பொழுது தான் நன்ருகத் தெரிகிறது. அப்பா, பரதா! தான் பெற்ற மக்களுக்குள்ளே வேற்றுமை காட்டி உன்னேப் பாட்டன் வீட்டிற்கு அனுப்பி விட்டு

நாட்டை இராமனுக்குக் கொடுக்கும் உன் தந்தை மிகக் கொடியவன். தந்தை தான் அப்படியென்ருல் தாயும் கொடுமையாகவா இருக்கவேண்டும்? நீ இனி என்ன செய்யப் போகின்ருய் அப்பா!

ஏ தேவி! அரச குடும்பத்திலே பிறந்து, அரசர் மாளிகையிலே வளர்ந்து, பேரரசர்க்கு வாழ்க்கைப் பட்ட நீ இனிமேல் அரச வாழ்வை முற்றிலும் இழந்து, துன்பக் கடலிலே விழுந்து, மீள முடியாமல் வருந்தப் போகின்ருய். நான் சொல்லும் மொழியையும் கேட்கின்ருயில்லை. உனக்கு உணர்ச்சி என்பதே இல்லையா?

ஐயோ! பரதன் எத்தகைய சிறந்த குணங்களைப் படைத்தவன். அவனது இளமை, அழகு, கல்வி, வீரம், வில்லாற்றல் முதலிய குணங்களனைத்தும் புல்லில் உகுத்த அமுதம்போற் பயனற்றுப் போகுமே.

[மந்தரை இவ்வாறு, பரதன் மீது மிக்க பரிவுடன் பேசுகிருள். பரதனது தந்தை கொடியவராம். அது இராமனுக்கு முடிசூட்டும் சமயம் பார்த்து அவனைக் கேகய நாட்டிற்கு அனுப்பியதிலிருந்து புலனுகிறதாம். அவ்வாறு அனுப்பியதில் ஒரு சூது இருக்கவேண்டுமென்று குறிப்பாகச் சொல்லுகிருள். கைகேயியும் கொடியவளாம். இவற்ருல் சிறந்த குணங்களையுடைய பரதனது வாழ்க்கை வீணுக அழியப் போவதாகக் கூறி மந்தரை இரங்குகின்ருள்.]

இவ்வாறு மந்தரை கூறிய கொடுஞ் சொற்கள் அவள் கருதிய பயனை விளைக்காமல், அதற்கு மாருக நெருப்பிலே நெய்யை வார்த்தாற்போலக் கைகேயின் மனத்தில் கோபம்

மூண்டு எழச் செய்கிறது. அவள் கண்கள் சினத்தால் சிவப் படைகின்றன. மந்தரையைப் பார்த்து]

கைகேயி: ஏ கொடியவளே! உன்னுடைய இழிந்த சிந்தனை யால் என்ன வார்த்தைகளைக் கூறினாய்? சூரிய குலத் தில் தோன்றிய மனு முதலிய வேந்தர்கள் தமது உயிரே போவதாயினும், செல்வம் முழுவதும் அழி வதாயினும் முறைதவறிய செயல்களைச் செய்வ தில்லை. நான் பிறந்த கேகய குலத்தினரும் அத் தகையரே. இவ்விரு மரபினர்க்கும் குற்றம் வரும் படியாக நீ என்ன வார்த்தைகளைச் சொல்கின்றாய்.

எனக்கு நல்லையுமல்லை என்மகன் பரதன்
தனக்கு நல்லையுமல்லை அத்தருமமே நோக்கின்
உனக்கு நல்லையுமல்லை வந்தூர்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.

(மந்தரை. 65)

அடி பேதாய்! உலகிலே மக்கள் பெறுவதும் இழப் பதும் ஆகிய மேன்மைப் பொருள் புகழேயன்றி வேறில்லை. ஆதலால் எமது குலத்தினர் பரம்பரை யாக மேற்கொண்டுவரும் ஒழுங்கை நான் தவறுதல் முறையோ? குணம், நீதி, சன்மார்க்க நெறி, தவம், வீரம் இவை மாறுபட ஒழுகினும், வரன்முறை தவறும்படி நடக்கலாமோ? அதனால் புகழை இழப் பதற்கன்றோ ஏதுவாகும். (மேலும் சினம் மிகுந்து) அடி! நீ என்முன் நில்லாதே. அற்பப் பேச்சுக்களைப் பேசும் உன் நாவை அறுக்காமல் நான் இதுவரை பொறுத்திருந்தேன். வேறு யாரேனும் இதை

அறிந்தால் நீ பெருங் குற்றத்திற்கு ஆளாவாய். ஆதலால் அறிவு கெட்டவளே! வாயை மூடு.

[கைகேயியின் சொல்லிலிருந்து அவள் உள்ளத்தில் இன்னமும் உறுதி குலேயவில்லே என்பது தெளிவாகிறது. ஆயினும் மந்தரை விதைத்த நச்சு விதைகள் அவள் உள்ளத்தில் முளேத்து வளர்ந்துகொண்டுதானிருக்கின்றன. ஆனல் அவற்றின் தீய விளேவுகள் கைகேயியின் சொல், செயல்களில் இன்னும் வெளிப்படத் தோன்றவில்லே.

கைகேயி இவ்வாறு கடிந்து கூறியும் மந்தரை அஞ்சி அகலாது தான் விதைத்த தீய விதைகளுக்கு நீர் வார்த்தாற்போல மேலும் சொல்லுகின்ருள்.]

மந்தரை: தேவி! வஞ்சிக்கொடி போன்று மென்மையானவளே! நீயே எனக்குத் தஞ்சம். நீ அறிவில்லாமல் என்னைக் கோபிக்கின்ருய். நீ எவ்வளவு கோபித்தாலும் உனக்கு நன்மையான காரியங்களே நான் சொல்லாமலிருக்க மாட்டேன். அது எனது கடமை என்று நான் உணர்கிறேன். (இவ்வாறு கூறித் தான் மேற் சொல்லப் போகும் உறுதிமொழிகளேயும் பொறுமையோடு கேட்குமாறு காலேப் பிடித்து வேண்டுவாள்போலக் கைகேயியின் அடிமிசை வீழ்கின்ருள்.) மூத்தவன் இருக்க இளேயவன் ஆள்வது முறையன்று என்று பேசுகின்ருயே! தசரதரினும் இராமன் இளேயனன்ருே? அங்ஙனமாயின், தசரதர் உயிருடன் இருக்கும்போது இராமன் முடிசூடிக் கொள்வது முறையாகுமா? அது முறைமையே என்ருல் அவ்விதி பரதனுக்குமட்டும் விலக்காவது எங்ஙனம்? இராமன் நல்லவன் என்று கூறுகின்ருய்,

ஆனல் அந்நிலைமை எப்பொழுதும் ஒரே தன்மை யாக இராது என்பதை நீ உணர்தல் வேண்டும்.

அறம்நிரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்.

இராமன் மன்னனுக வரின் நிச்சயமாக உனக்குத் தீமையை இடையருது உண்டுபண்ணுவான். இராமன் அரசு செலுத்தும்போது உலக முழுவதும் கோசலைக்கு உடைமையாகும். அப்போது உனக்கும் உனது அன்பிற்குரிய பரதனுக்கும் அவர்கள் உதவும் பொருளல்லாமல் வேறு எந்தப் பொருளை உரிமையாகக் கூறமுடியும். மேலும் வறுமை துன்பம் இவை காரணமாக உன்பால் வந்து இரக்கும் இரவலர்களுக்கு ஏதாவது அறஞ் செய்யவேண்டுமென்று நீ விரும்பினல அதற்குரிய பொருளை நீ கோசலையிடம் கேட்டுப் பெறுவாயோ? அல்லது அவ்வாறு கேட்க நாணுவாயோ? அந் நிலையில் இரப்பவர்க்குக் கொடுக்க முடியவில்லையே என்று உள்ளம் உடைந்து இறந்துபோவாயோ? அல்லது இறவாமல் பிழைத்திருந்து அவ் இரவலர்க்கு இல்லையென்று கூறுவாயோ?

உனது தந்தை, தாய், நெருங்கிய கிளைஞர்கள், அகன்ற உறவினர்கள், இவர்களில் எவரேனும் வறுமையுற்று, அதனல் ஏற்படும் இழிவை நின்னையடைந்து போக்கிக் கொள்ளலாம் என்று வந்தால், அவர்கள் இங்கு வந்து காண்பது உனது செல்வத்தையா உன் சக்களத்தி செல்வத்தையா?

நீ ஏன் இன்னமும் உறுதியை உணராமல் இவ் வாறு திகைத்துக் கொண்டிருக்கின்ருய்!

இன்னும் கேள்! சீதையின் தந்தை ஜனகன் நமது தசரதச் சக்ரவர்த்தியை அஞ்சியே உன் தந் தை கேகயன் மீது இதுவரையும் படையெடுத் துச் செல்லாமலிருக்கின்ருன். தசரதருக்குப் பதில் இராமன் அரசனக வந்துவிட்டால் அதன் பின் உன் தந்தைக்கு வாழ்வு உண்டா? இதனைச் சிறிதும் சிந்திக்காமல் இருக்கின்ருயே! அறிவில் லாதவளே! இவ்வாறு தனக்குப் பழி வருமாறு நடந்து கொள்ளுகிறவர்கள் உன்னைப்போல் இப்புவி யில் வேறு யார் இருக்கிருர்கள்?

மேலும் கேட்பாயாக! உனது தந்தைக்கோ பகைவர்கள் அதிகமாக உள்ளனர். அவர்கள் ஒன் ருகச் சேர்ந்து உன் தந்தையை எதிர்த்தால் இக் கோசல நாட்டரசர் சென்று உதவி புரியாவிடில் உன் தந்தையின் கதி என்னவாகும். இராமன் மன் னனக வந்தால் உன் தந்தைக்குத் துணையாகப் போர் புரியச் செல்வான? ஆதலால் நீயும் பரதனும் மட்டு மல்ல, உன் சுற்றமும் கூடக் கேட்டை அடையும்படி துன்பக் கடலில் விழத் துணிந்திருக்கின்ருய்.

இராமனுக்கு அரசுரிமை கிடைத்து விட்டால் அது அவனுக்கும், அவனது புதல்வர்களுக்கும், அவனை நெருங்கியிருக்கும் அவன் தம்பி இலக்குவ னுக்கும் முறையாக உரிமையாகுமேயன்றி, அதனைப் பரதன் ஆளும் நிலைமை ஒரு காலத்திலும் ஏற்படப்

போவதில்லை. இவை எல்லாவற்றையும் சிந்தித்து நீ செயல் புரிதல் வேண்டும்.

மந்தரை இதுகாறும் கூறிவந்த சொற்கள் இப்பொழுது பயன்தர ஆரம்பித்தன. அவளுடைய முயற்சி கைகூடியது. "கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையும்" என்ற பழமொழி உண்மையாயிற்று.

தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது.]

கைகேயி: (கூனியை விருப்பத்துடன் பார்த்து) நீ என் மீதும் என் மகன் பரதன் மீதும் அன்புடையவள். அவன் முடி சூடுவதற்குரிய வழிகளை நீயே ஆராய்ந்து கூறுவாயாக.

மந்தரை: (மகிழ்ச்சி பொங்கக் கைகேயியை நோக்கி) என் தோழி வல்லள்; என் துணை வல்லள்; எனது சொற்படி நடந்தால் இக் கோசலை நாடு மட்டுமா, ஏழு உலகங்களையுமே உன் மகன் பரதனுக்கு உரிமையாக்குவேன்.

மந்தரை, முன்பு தசரதன் கைகேயிக்கு அளித்த இரண்டு வரங்களை நினைப்பூட்டி அவற்றால் பரதன் அரசுரிமை பெறுதலும், இராமன் பதினான்கு வருடம் காட்டிற்குச் செல்லுதலுமாகிய காரியங்களைச் சாதிக்கத் தூண்டுகிறாள். அதன் பின் நிகழ்ந்த செயல்கள் யாவரும் அறிந்தனவே.

மந்தரை இவ்வாறு கைகேயியின் நேர்மையான உள்ளத்தைத் தன் சொல் திறமையால் திரித்து, இராமனது பட்டாபிஷேகத்தைத் தடுத்து, அவனைக் காட்டிற்கனுப்பி, இராவண

வதம் நிறைவேறுவதற்குக் காரணமாக இருந்தாள். இதனுல் மந்தரையை சரஸ்வதியின் அம்சம் பெற்றவளாகக் கூறுவதும் உண்டு. மந்தரை உண்மையிலேயே கைகேயியிடம் எங்ஙனம் உரைத்தாள் என்பதை நாம் அறியோம். நாம் அறிவதெல்லாம் மந்தரை வாயிலாகக் கம்பன் பேசும் மொழிகளேயாம். அம்மொழிகள் கம்பன் கலைவாணியின் அருள் நோக்குப் பெற்றவன் என்பதை ஐயமற விளக்குகின்றன.

8. கொடை விந்தை

குமரி முதல் இமயம் வரையிலும் பரவியுள்ள இப் பரத கண்டத்தின் வடபாகத்திற்குப் புண்ணிய பூமி என்னும் ஒரு பெயருண்டென்பதைப் பலரும் அறிவர். கர்ணன் முதலிய பெரிய கொடை வள்ளல்கள் ஒவ்வொரு காலத்தும், அங்கே தோன்றி அறம் புரிந்து புண்ணியத்தை வளர்த்த காரணத்தால் அதற்கு இப் பெயர் அமைந்ததாதல் வேண்டும். இத்தகைய அறச் செயல்களைப் பேணி வந்த பெருமை தென்னாட்டு முடி மன்னர்களுக்கும், குறுநில வேந்தர்களுக்கும் சிறப்பாக உரியதென்பதைச் சங்க இலக்கியங்கள் பறையறைந்து சாற்றுகின்றன.

தமிழ் வேந்தர்கள் தம்மிடம் பரிசில் பெறவரும் புலவர், பாணர், கூத்தர், விறலியர் முதலியோரது தகுதியை எண்ணாமல், அவர்கள் எத்தனை முறை வந்தாலும் முகங் கோணாது, கேட்டதையெல்லாம் கொடுத்துப் பொருளைப் போற்றி வழங்க அறியாத அறிவிலிகள் போன்று நடந்து கொண்டனர். அவர்களது இத்தகைய ஈகைப் பண்பினைக் கொடைமடம் என்ற அழகிய சொல்லால் புலவர்கள் குறித்தனர். அதிகமானின் ஈகையைக் கூறப்புகுந்த ஔவையார்,

ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்
பலநாட் பயின்று பலரோடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ (புறம், 101)

என்றும்,

பாணர் பாடுநர் பரிசிலர் ஆங்கவர்,
தமதெனத் தொடுக்குவ ராயின் எமதெனப்
பற்றல் தேற்றாப் பயங்கெழு தாயம் (புறம், 135)

என்றும் சிறப்பிக்கின்றார்.

மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளல் தன்பால் வரும் பரிசிலர்களை அவரவர் தகுதிக்கேற்ப வகைப்படுத்திக் கூடுதல் குறைவாகக் கொடாமல், வேற்றுமையின்றி எல்லோருக்கும் வாரி வாரி வழங்குவதைக் கண்டு அவன் மீது குறைபட்டுக் கொள்ளுகிறார் ஒரு புலவர். அவரும் சாதாரணப் புலவர் அல்லர்; 'புலனழுக்கற்ற அந்தணாளர்' என்று சிறப்பித்துக் கூறப்படும் கபிலராவர். அவர் கூறுகிறார்: "கொடுப்பதென்பது அரிய செயலன்று; அது சாமான்ய மக்களுக்கும் இயல்வதே. ஆனால், புலவர்களின் புலமையின் ஆழத்தையும், தகுதியையும் அறிந்து அவற்றிற்கேற்ப வழங்குவதிலேயே அருமைப்பாடு உள்ளது." இங்ஙனம் கூறிய கவிஞர் எல்லாப் புலவர்களையும் ஒரே தகுதியினராக எண்ணி, அனைவர்க்கும் ஒப்ப ஈயும் வழக்கத்தைக் கைவிட வேண்டுமென்று திருமுடிக்காரிக்கு உபதேசிக்கிறார்.

... ... பரிசில் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே; மாவண் தோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயின்,
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே. (புறம், 121)

என்பது கபிலர் வாக்கு.

இத்தகைய கொடை வேந்தர்களது பெருமையே பெரும்பாலும் சங்க இலக்கியங்களில் புகழப்படுகிறது. அவ்விலக்கி

யங்கள் அவ்வேந்தர்களின் கொடைச் சிறப்பின் பயனாக, அவர்களது கொடையின் உயர்வை உலகறிய விளக்குவதன் பொருட்டுத் தோன்றியன என்று கூறின் அது மிகை யாகாது.

> உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்று
> ஈவார்மேல் நிற்கும் புகழ். (232)

என்ற வள்ளுவரின் பொருளுரைக் கிணங்கப் பழங்காலத் தில் தம் இணையற்ற ஈகையால் இறவாப் புகழுக்குரியரான வள்ளியோர்களை எவ்வெழுவர் கொண்ட மூன்று தொகுதி யினராகப் பகுத்துத் தலையெழு வள்ளல், இடையெழு வள் ளல், கடையெழு வள்ளல் என நம் முன்னோர் கூறி வந்தனர். அவர்களது ஈகைத்தன்மை எவரையும் வியப்பினுள் ஆழ்த் தும் என்பதில் ஐயமில்லை.

அன்னியரது துன்பத்தைக் காணும்போது வருந்துவது மனித இயற்கை. உறவு, நட்பு இவை காரணமாக அவ் வருத் தம் மிக அதிகமாகத் தோன்றும்: தந்தை, தாய், சகோதரர், மக்கள் முதலிய நெருங்கிய உறவினர்கள் கொடிய துன்பத் துக்கு ஆளாகி வருந்தும்போது அதனைக் காணச் சகியாமல் அவர்களுக்கு உதவுவதன் பொருட்டுப் பெரிய தியாகங் களைச் செய்வதற்கும் மக்கள் முன் வருவதைக் காண்கிறோம். இது சாதாரணமாக நிகழக்கூடியதே. ஆனால் விலங்குகளுக் கும் பறவைகளுக்கும் ஆபத்து நேர்வதைக் காணும்போது அதற்காக உள்ளம் உருகும் மகான்கள் மிகச் சிலரே இருத் தல் கூடும். புத்தர் பெருமான் அத்தகைய மகான்களுள் ஒருவர். தேவதத்தன் எய்த அம்பால் தாக்குண்ட அன்னப் பறவை அரண்மனைப் பூங்காவில் புத்தர் முன்னிலையில் விழுந்த

போது அவர் மனம் கசிந்துருகியதையும், விரைவாக ஓட்டப்பட்டுச் செல்லும் ஓர் ஆட்டுமந்தை பிம்பிசாரன் யாக சாலையில் பலியாகப் போகிறது என்பதை அறிந்தபோது அவர் உள்ளம் இரங்கிய நிலையையும் கவிமணியவர்கள் தம் ஆசிய ஜோதியில் மிக உருக்கமாகப் பாடியிருக்கிறார்கள். ஆனால் காட்டிலே பிறந்து அங்குள்ள இயற்கைத் தட்ப வெப்ப நிலைகளுக்கு உட்பட்டு வாழும் மயில் ஒன்று குளிரால் நடுங்கி நலிவதைக் கண்டு சகியாமல் பேகன் என்னும் ஒரு வள்ளல் தான் அணிந்திருந்த விலையுயர்ந்த போர்வையை எடுத்து அம்மயிலைப் பொதிந்து மூடி அதனைக் குளிர் தாக்காதபடி செய்துவிட்டுத் தான்மட்டும் குளிரால் மெய் நடுங்கி வீடு வந்தான் என்றால், அச்செயலில் புத்தர் செயலினும் மிக்க புதுமையும் அருமைப்பாடும் வெளிப்படுகின்றன. இச்செயலையே,

> கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
> அருந்திற லணங்கின் ஆவியர் பெருமகன்
> பெருங்கல் நாடன் பேகன். (85-87)

என்று நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் சிறப்பிக்கின்றார்.

பாரி என்னும் மற்றோர் வள்ளலின் ஈகை பேகனின் கொடையையும் விஞ்சுவதாக உள்ளது. பாரி ஒருநாள் ஒரு காட்டு வழியாகத் தேரில் வந்து கொண்டிருந்தான். வழியிலே ஒரு முல்லைக்கொடி படர்ந்தேறுவதற்குரிய கொழு கொம்பின்றி வருத்தமுறுவதைக் கண்டான். அவன் உள்ளம் துடித்தது. தான் ஏறிவந்த அழகிய தேரை அது பற்றிப் படரும் பொருட்டு அதன் அருகே நிற்க வைத்துத் தன்கால் நோவ நடந்து மாளிகைக்கு வந்தான். பாரியின் உள்ளப்

பாங்கும் அவனது கொடையின் இயல்பும் பலரும் உணர் தற்கரிய புதுமையாக உள்ளன: இதனை,

> சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
> பிறங்கு வெள்ளருவி வீழும் சாரற்
> பறம்பிற் கோமான் பாரி. (89-81)

என்று சிறுபாணாற்றுப்படை பாராட்டுகிறது.

முற்கூறிய பேகனது கொடையைச் சிறப்பிக்கும் போதுதான் பரணர் என்னும் பெரும் புலவர் கொடைமடம் என்ற நயமார்ந்த சொல்லை உபயோகிக்கின்றார். அவர் கூறுவது வருமாறு:

> கடாஅ யானைக் கழற்காற் பேகன்
> கொடைமடம் படுத லல்லது
> படைமடம் படாஅன்பிறர் படைமயக் குறினே.
> (புறம், 142)

பேகன் பிறர்க்குக் கொடுக்கும்போது மட்டுந்தான் அறிவில்லாதவன் போன்று நடந்து கொள்கிறான். ஆனால் பிற அரசர்களோடு போர் செய்யும் போர்க்களத்தில் அவன் நுண்மதியும் பேராற்றலும் உடையவனாக விளங்குவன் என்பது இதன் கருத்து.

இத்தகைய கொடை வள்ளல்கள் நமது நாட்டில் ஒவ்வொரு காலப் பகுதியிலும் இருந்து வந்திருக்கிறார்கள். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களான இம் மேன்மக்களாலேயே உலகம் அழிவின்றி நிலைபெற்று வருவதாக இளம் பெருவழுதி யென்னும் பாண்டியன் புறநானூற்றில் (182) பாடுகின்றான். இவ் வள்ளியோர் பரம்பரையில் சுமார் 250 வருடங்களுக்கு முன் காயற்பட்டினத்தில் தோன்றிய

வரே சையித் காதர் சீதக்காதி என்பவர். அவர் மகமதிய மதத்தினர்; தாம் வாழ்ந்த காலத்தில் தம்மை அடுத்தோர்க் கெல்லாம் வரையாது கொடுத்த வள்ளல். அவரது கொடைச் சிறப்பை விளக்க அந்நாளில் பற்பல வரலாறுகள், கதைகள் வழங்கின. அவர் இறந்த பின்னரும் அவரது கொடைச் சிறப்பு அதிசயோக்தியாகக் கற்பனையுடன் கலந்து புகழப் பட்டது.

சீதக்காதியின் காலத்தில் படிக்காசுப் புலவர் என்பவர் பிரசித்தி பெற்றிருந்தார். அவர் தொண்டை மண்டலத்தில் பொன் விளைந்த களத்தூரில் செங்குந்தர் மரபில் உதித்தவர். சிறந்த ஆசுகவிகளைப்பாடும் ஆற்றல் வாய்ந்து அறிஞர்களாலும் செல்வந்தர்களாலும் அபிமானித்துப் பாராட்டப்பட்டு வந் தார். அவர் ஊரூராகச் சென்று பல கொடையாளிகளைக் கண்டு பாடி அவர்கள் அளித்த பரிசிலைப் பெற்றுத் தம் வறு மையைப் போக்கினர். காயற்பதியில் வாழ்ந்த வள்ளல் சீதக் காதியையும் அவர் பலமுறை அணுகிப் பரிசில் பெற்றுள் ளார். இருவருக்கும் மனம் பொருந்திய நட்பு உண்டாயிற்று. புலவரின் பாடல்களில் வள்ளல் ஈடுபடுவார். அவர் அளித்த உபசாரத்தில் புலவர் மகிழ்ந்து பல நாட்கள் தொடர்ச்சியாக அவருடன் இருந்து வருவார். பின்னர் வள்ளலிடம் பெரும் பரிசைப் பெற்றுக்கொண்டு தம் ஊருக்கு மீள்வார். ஒருமுறை புலவருக்குச் சீதக்காதியைப் பற்றிய நினைவு உண்டாயிற்று. அவரைப் பார்ப்பதற்காக அழகிய பாடல் ஒன்றை இயற்றிக் கொண்டு காயற்பதிக்கு வந்தார். அப்பாடல் வருமாறு:-

காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னர் நெடுங்கண்கள் தொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம் அனுதினமும்
ஈய்ந்து சிவந்தது மால்சீதக் காதி இருகரமே.

நகரின் எல்லைக்குள் வந்ததும் புலவர் அந்தோ! தம் நெஞ்சு நடுங்கும்படியான செய்தியைக் கேள்வியுற்றார். அற்றார்க்கும் அலந்தார்க்கும் ஆதரவளித்துக் காத்த சீதக்காதி வள்ளல் அண்மையில் உலக வாழ்வை நீத்தார் என்று அறிந்தார். அவர் உற்ற துன்பம் சொல்லுந்தரமன்று. சீதக்காதி இல்லாத உலகம் அவருக்கு ஒரு சூன்யமாகவே காட்சி அளித்தது. தம்மைப் பலகாலும் ஆதரித்த வள்ளலைக் காணமுடியாவிட்டாலும் அவர் சமாதியடைந்த இடத்தையாவது பார்க்க வேண்டும் என எண்ணிப் புலவர் அதனை விசாரித்துச் சென்றார். சமாதியை அடுத்தபோது சீதக்காதி முன் புரிந்து வந்த பெருங்கொடையையும், அவரே கதி என வந்த தமது வறுமை நிலையையும் எண்ணி மனமுருகிக் கீழ்வரும் பாடலைப் பாடினார்.

தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ் நாவலரை
ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
போட்டா னவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.

இதனைப் பாடியதும் ஓர் ஆச்சரியமான செயல் நிகழ்ந்ததாம். சமாதிக் குழிக்குள்ளே இருந்த சீதக்காதியின் கை வெளியே உயர்ந்து வந்தது. அக்கையின் விரல்கள் ஒன்றில் ஒரு வைர மோதிரம் அணியப்பட்டிருந்தது. புலவரை நோக்கி உயர்ந்த கை அதில் அணியப்பட்டுள்ள மோதிரத்தைக் கழற்றி எடுத்துக் கொள்ளுமாறு தம்மை விரும்பி அழைப்பதாகப் புலவர்க்குத் தோன்றியது. வள்ளல் அளித்த கொடையைப் புலவர் ஏற்றுக்கொண்டார். சீதக்காதியின் இவ் அரிய கொடையைப் பாராட்டுவதன் பொருட்டே செத்துங் கொடுத்தான் சீதக்காதி என்ற வழக்கு உண்டாயிற்று. இவ் வரலாற்றின்

உண்மையைக் குறித்துச் சிந்திப்பது பயனற்றதாகும். பலரும் இதனை வெறுங் கதையென்றே எண்ணுவர். கதையாயினும் சீதக்காதியின் அருங் கொடையையும், அக்காலத்து மக்கள் அவன்மீது கொண்டிருந்த பெருமதிப்பையும் இச் செய்தி நன்கு விளக்குகிறது.

இச் சீதக்காதியின் வரலாற்றை ஒரு வகையில் ஒத்ததும் ஆனல் அதனினும் விந்தையானதுமான வரலாறென்று உளது. அதனைக் காண்போம்.

தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களிலே தமிழ்வளர்த்த பெருமை பாண்டியர்க்கே அதிகமாக உரியதென்று பலரும் எண்ணுகிறார்கள். ஒருவகையில் அது உண்மையேயாம். மதுராபுரியில் மூன்று சங்கங்களை நிறுவிப் பல புலவர்களைக் கூட்டி அவர்களைக் கொண்டு கலைவளம் மிக்க பல நூல்களை இயற்றுவித்துத் தமிழ்த் தொண்டு புரிந்த பெருமை பாண்டியரையே சார்வதாகும்.

இப் பெருமையைத் தாமும் பகிர்ந்து கொள்ள விரும்பிய சோழர்கள் தமது நாட்டிலும், சங்கம் ஒன்றை அமைத்தனர் எனக் கூறும் வரலாறும் ஒன்று உண்டு.

ஆனல் சேர அரசர்களோ தமது நாட்டில் சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கம் சிறந்தோங்கியிருக்கும்போது அதற்குப் போட்டியாக வேறோர் சங்கத்தைத் தமது நாட்டில் ஸ்தாபிப்பது அவசியமில்லையென்றே அவர்கள் எண்ணியிருக்க வேண்டும். ஆனல் தமிழ்மொழியை வளர்க்கும் ஆர்வத்தில் அவர்கள் எவர்க்கும் இளைத்தவர்களல்லர். புதிதாகச் சங்கம் அமைப்பதைவிட மதுரையினும், பிற ஊர்களினுமிருந்து தமிழை ஆராயும்

புலவர்களை வறுமைத் துன்பம் வாட்டி, அவர்களது தமிழ்ப் பணிக்கு இன்னல் விளைக்காதவாறு அவர்களுக்கு வேண்டு வனவற்றையெல்லாம் கொடுத்துக் கவலையற்ற உள்ளத்தோடு தமிழ்த்தொண்டு புரிந்து வரும்படி ஊக்கிவந்தனர். சேர மன்னர்கள் தமிழ்ப் புலவர்களுக்குக் கொடுத்ததைப்போன்ற பெருங் கொடையை தமிழ்நாட்டுச் சோழ பாண்டியர்கள் மட்டுமல்ல, எந்த நாட்டிலும் எந்த மன்னனும் கொடுத்த தாகக் கேள்வியுறவில்லை.

சேரவரசர்கள் வரலாற்றைக் கூறும் தனி நூலான பதிற்றுப்பத்திலிருந்து சங்ககாலச் சேரவேந்தர்களின் அளப் பரிய கொடைச்சிறப்பு அறியப்படுகிறது. சேரர்களுக்குப் பதிற்றுப்பத்து அமைந்ததைப்போற் சோழ பாண்டியர் வர லாற்றை எடுத்துக்கூறும் தனி நூல்கள் இல்லை என்பது நினை விற்கொள்ளுதல் தகும். இப்பதிற்றுப்பத்தின் முதற்பத்தும் இறுதிப் பத்தும் காலகதியில் அழிவெய்த, ஏனைய நடுவிலுள்ள எட்டுப் பத்துக்களையும் மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்துள்ளார்கள். அந்நூல் சேர வேந்தர்களின் பெருங்கொடைக்குச் சான்றாக உள்ளது. எல்லா அரசர்களின் கொடையுமே வியக்கத்தக்கது. அவருள் ளும் ஏழாம் பத்திற்குரியவனான செல்வக் கடுங்கோ வாழியா தன் என்ற அரசன் தன்னைப் பாடிய கபிலருக்கு அளித்த பரிசின் அளவைக் கேளுங்கள். முதலில் அக்காலத்து வழங் கிய பொன் நாணயத்தில் ஒரு லட்சம் நாணயத்தைச் சிறு கொடையாக அளித்தான். அவனுள்ளம் அதனால் அமைதி யுறவில்லை. தனது தமிழார்வத்திற்கேற்பப் புலவர்க்கு மிகுதி யாகப் பரிசளிக்க விரும்பி அவரைத் தன் பின்னே வரும்படி அழைத்தான். புலவரும் அரசன் தம்மை எங்கே அழைக் கிறான் என்பதை அறிந்துகொள்ளாமலே அவன் ஆணைப்படி

அவன் பின்னல் நடந்து சென்றார். அரசன் அவரைத் தன் தலைநகரின் அண்மையிலுள்ள நன்றா என்னும் ஒரு குன்றின் உச்சிக்கு அழைத்துச் சென்றான். அங்கே நின்றுகொண்டு புலவரை நாற்புறமும் சுற்றிப் பார்க்கச் சொல்லிக் கண்ணிற் கண்ட இடமெல்லாம் அவருக்குப் பரிசாக அளித்தான்.

இவ்வேந்தன் மகன் பெருஞ்சேரலிரும்பொறை என்பவன். அவன் அக்காலத்தில் விளங்கிய ஓர் ஒப்பற்ற போர் வீரன். அதிகமானின் தகடூரின் மேற் படையெடுத்துச் சென்று அதிகமானையும் அவ்வூரையும் அழித்துச் சினம் ஆறியவன். இப் போர்ச்செய்தி, தகடூர் யாத்திரை என்ற நூலால் அறியப்படுகிறது. போர்க்களத்தில் இத்துணை வீரம் விளக்கின்ற மன்னவன் புலவர் பாடும் பாடல்களுக்கு உள்ளம் உருகுபவனாகவும் இருந்தான். அரிசில்கிழார் என்ற புலவர் பதிற்றுப்பத்து எட்டாம் பத்தைப் பாடிக்கொண்டு இவனைக் காணவந்தார். அப்பாடல்களைக் கேட்டதும் அரசன் தன்னையே மறந்துவிட்டான். தன் அரண்மனையையும் அதன்கண் உள்ள ஒன்பது நூறாயிரம் காணத்தையும் கொடுத்ததோடமையாமல், கவியரசராக விளங்கிய புலவரைப் புவியரசராகவும் காண விரும்பித் தனது அரசு கட்டிலை அவருக்கு உரிமையாக்கி விட்டுத் தன் மனைவியை அழைத்துக்கொண்டு மாளிகையை விட்டு வெளியேறினன். சேர மன்னனது இச்செயலைக் கண்ணுற்றதும் அரிசில்கிழார் திகைத்துப் போய்விட்டார். அரசனது தூய உள்ளத்தையும், தமிழினும் தமிழ்ப் புலமையாளரிடத்தும் அவன் வைக்கும் பெருமதிப்பையும் கண்டு வியந்தார். ஆனல் பழுமரம் தேரும் பறவை போலப் பரிசில் வாழ்க்கையை மேற்கொண்ட புலவர் நாடாளும் செல்வத்தை நயப்பரோ? ஆதலால் அவர் அரசனைப் பார்த்து, "மன்ன! உன் தமிழ்ப்பற்றைப் பாராட்டுகிறேன். உன் போன்ற உப

காரிகளை அணுகிப் பரிசில் பெற்றுண்ணும் வாழ்க்கையை மேற்கொண்டவன் யான். ஆதலின் நீயே இந் நாட்டை ஆள் வாயாக'' என்று வேண்டிக்கொண்டார். அரசனும் மறுக்க முடியாமல் புலவரது வேண்டுகோளுக்கிணங்கினன். ஆனால் புலவரைத் தனக்கு அமைச்சராக இருந்து அரசகாரியங்களில் அறிவுரை கூறவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். புலவரும் அதற்குச் சம்மதித்து அமைச்சராக அமர்ந்தார்.

சேர வேந்தர்களிலே பெரும் புகழுக்குரியவன் செங்குட்டுவன் என்பவனுவன். அவனது போராற்றலையும் அருஞ் செயல்களையும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பித்துள்ளார். அவன் காலத்தில் தமிழ்வேந்தர்களில் அவனே தலைசிறந்தவன். ஆரியவரசர்களாகிய கனகவிசயர் என்போர் தமிழ் வேந்தர்களைப் பழித்துக் கூறியதாகக் கேள்வியுற்ற போது மான வுணர்ச்சி தலைக்கொண்டு எழுந்தவன் இச் செங்குட்டுவனேயாவன். அவ்வாறு கூறிய வடவரசரைச் சேரன் அவரது நாட்டிலே சென்று போர் வென்று, கண்ணகியின் சிலை செய்வதற்குரிய கல்லை அவர்கள் தலையிலேற்றி வஞ்சி நகர்க்குக் கொண்டுவந்து, அவர் கர்வத்தை அடக்கினுன். பத்தினி வழிபாட்டைத் தமிழகத்திலும், கடலுக்கப்பாலுள்ள ஈழம், மாளவம் முதலிய தீவுகளிலும் பரப்பினுன்.

இப் பெருவேந்தனை ஐந்தாம் பத்தாற் பாடியவர் பரணர் என்னும் புலவர் பெருமானுவர். அப் பாடற்குப் பரிசிலாகச் செங்குட்டுவன் தனது ஆளுகைக்கு உட்பட்ட உம்பர்க்காடு என்ற பிரதேசத்தின் வருவாய் முழுவதையும் புலவர்க்கு அளித்துப்பின் தன் மகன் குட்டுவஞ்சேரலையும் கொடுத்தான். குட்டுவஞ்சேரலைக் கொடுத்தது குருகுல வாசஞ் செய்து கல்வி கற்பதன் பொருட்டே என்பது அறிஞர்

கருத்து. செங்குட்டுவன் இவ்வாறு தான் உயிருடன் வாழ்ந்த காலத்தில் கொடைமடம் படக்கொடுத்தவனாக அறியப்படுவதோடு சீதக்காதியைப் போன்று செத்த பின்பும் கொடுக்கின்ற கொடை வள்ளலாகவும் விளங்குகிறான். சீதக்காதியை விடவும் அவனது கொடை ஒருவகையில் உயர்வுடையதாக உள்ளது. சீதக்காதியோ தான் இறந்த அண்மையில், தன் உடல் சமாதிக்குள்ளிருந்து அழிந்து போவதன் முன், தன்னைப் பாடிவந்த புலவர்க்குக் கையை உயர்த்தி மோதிரப் பரிசளித்தான். ஆனால் செங்குட்டுவனோ, கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாயினும் 1800 வருடங்களுக்குப் பின் தன்னைப் பாடித் தன் புகழை உலகறிய வைத்த ஒரு புலவர்க்குப் பெருங் கொடை கொடுத்தான். அதுவும ஒரு முறையல்ல; இருமுறை, மும்முறை அளித்துள்ளான்.

இதைப் படிப்பவர்கள் சிதக்காதியின் கதையைப்போல் இதுவும் சுத்தப் பொய் என்று எண்ணக்கூடும். ஆனால் செங்குட்டுவன்பால் பரிசு பெற்ற புலவரே இன்றும் உயிருடன் வாழ்ந்து, ஒரு பிரத்யட்சப் பிரமாணமாக அமைந்து, தாம் பரிசு பெற்றதாகக் கூறும்போது அதை உண்மை வரலாறென்று கொள்வதில் தடையில்லையன்றோ? செங்குட்டுவன் அளித்த பரிசிலை இந் நூற்றாண்டில் பெற்ற புலவர் யாவர் என்று அறிவதற்குக் கற்போர் உள்ளம் அவாவுதல் இயல்பே. அவர்களே, பழைய தமிழ்ப் புவவர் பரம்பரையில் தோன்றித் தமிழில் அழுத்தமான ஞானம் பெற்றவர்களும், பிறமொழி அறிவின் துணையால் உணர்ந்துகொள்ளப்படும் புதிய ஆராய்ச்சித் துறையின் இயல்புகளைத் தம் கூரிய மதியால் நன்குணர்ந்து, பழமைக்குப் பழமையும் புதுமைக்குப் புதுமையுமாய் விளங்குபவர்களும், அன்பு, அடக்கம், இன்சொல், உறுதி, ஊக்கம், முதலிய குணங்களுக்கொரு குன்றாக நிற்ப

வர்களுமான பேராசிரியர் ராவ்ஸாஹிபு மு. இராகவையங்கார் அவர்களாவர்.

பேராசிரியர் இராகவையங்கார் அவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு கொஞ்சமல்ல. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் தமிழ் மறுமலர்ச்சி யடையத் தொடங்கிய போது அம்மலர்ச்சி செவ்வையாக நிகழ்வதற்குத் துணைபுரிந்த தமிழறிஞர்களில் அன்னுர் ஒருவர். தமிழ் மொழியாகிய மலர் பல நூல்களாகிய ஏடுகளைச் செவ்வனே விரித்துத் தன் நறுமணமாகிய அருங் கருத்துக்களை எங்கும் பரப்பி, யாவரும் நுகர்ந்து இன்புறச் செய்வதற்கு அவர்கள் முக்கிய காரணமாக இருந்தார்கள். தமிழிலக்கியங்கள் பலவும் ஏட்டு வடிவமாக இருக்கும்போதே அவற்றைக் கற்று, அவற்றிலுள்ள அரிய விஷயங்களைச் சிறந்த கட்டுரைகளாக எழுதி, தாம் ஆசிரியராக இருந்து நடத்தின செந்தமிழ்ப் பத்திரிகையிலும் பிற பத்திரிகைகளிலும் வெளியிட்டார்கள். அவர்கள் பல அரிய விஷயங்களைக் கண்டு வெளியிட்ட பின்னர்தான் தமிழிலக்கியங்களின் பெருமையைத் தமிழ் மக்களில் பெரும்பாலோரும் உணர்ந்து கொள்ளத் தொடங்கினர். இராகவையங்கார் அவர்கள் தமிழ் இலக்கியக் கடலுள் மூழ்கிக் கண்டெடுத்து வெளிக் கொணர்ந்த முத்துக்களையே பல அறிஞர்களும் ஐயங்கார் அவர்களுக்குத் தம் நன்றியையோ, கடப்பாட்டையோ அறிவிக்காமல் தமது நூல்களில் பயன்படுத்திப் பெருமை யடைந்துள்ளார்கள். வேளிர் வரலாறு, சேரன் செங்குட்டுவன், ஆழ்வார்கள் காலநிலை, தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, சாசனக் கவியரசர், ஆராய்ச்சித் தொகுதி, இலக்கியக் கட்டுரை முதலிய ஆராய்ச்சி நூல்களும், பெருந்தொகை, சேரவேந்தர் செய்யுட்கோவை என்னும் தொகை நூல்களும் அவர்கள் தமிழுலகத்திற்கு அளித்த நன்கொடை

களாகும். அரிச்சந்திர புராணத்தின் முதனூலாகிய அரிச்சந்திர வெண்பாவின் ஒரே ஒரு ஏட்டுப் பிரதியைத் திருவிதாங்கூர் மகாராஜாவின் அரண்மனை நூல் நிலையத்திலிருந்து பெற்று, திருவிதாங்கூர் சர்வகலாசாலை வெளியீடாக முதன் முதலில் அதனைப் பதிப்பித்த பெருமையும் அவர்களையே சாரும்.

அப்பேராசிரியர் அவர்கள் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாரது உரையில்லாத வஞ்சிக் காண்டப் பகுதியைக் கற்று கடைச் சங்க காலத்தில் வாழ்ந்த செங்குட்டுவனைப் பற்றியும், அவனது தந்தை, தாய், சகோதரன், மனைவி, மாமன் முதலிய உறவினர்களைப் பற்றியும், அவனது சமகால அரசர்கள், புலவர்கள், அவன் நிகழ்த்திய போர்கள், அவன் புதிதாகத் தோற்றுவித்த பத்தினி வழிபாடு இவை பற்றியும், அவனது நாடு, நகர், அரசியல், சமயம், குணச்சிறப்பு, அவன் வாழ்ந்த காலம் ஆகிய பல விஷயங்களைக் குறித்தும் ஆராய்ந்து அவனைப் பற்றிய முழு விவரத்தையும் கண்டறிந்து லட்சோப லட்சம் தமிழர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் அறிவித்து மங்கிக் கிடந்த அம்மன்னவன் புகழை விளக்கமுறச் செய்தார்கள். செங்குட்டுவன் புகழ் பெருக உயிருடன் வாழ்ந்த காலத்தில் பரணர் அவன் பெருமையைப் பாடினர். பேராசிரியர் இராகவையங்கார் அவர்களோ, செங்குட்டுவன் இறந்து 1800 வருடங்கள் சென்றபின், அவன் புகழ் மங்கி இக்கால மக்கள் அவனைக் குறித்து ஒன்றும் அறியமுடியா திருந்த நிலைமையில் அவன் புகழைக் குன்றின் மேலிட்ட தீபம்போல ஒளிபெறச் செய்தார்கள். எனவே, சங்ககாலப் பரணர் செயலினும் இக்கால ஐயங்காரவர்கள் செயல் எத்துணையோ மடங்கு உயர்வுடைய தென்பதற்கு ஐயமில்லை. ஆகவே அவ்

அரும் பணியைச் செய்த பேராசிரியர் அவர்களுக்குச் செங் குட்டுவன் பரிசளிப்பது மிகப் பொருத்தமானதேயாம். ஆனல் அவன் பரிசில் அளித்த வகைதான் விந்தைக்கு இட மாக உள்ளது. அதனை நோக்குவோம்.

இராகவையங்கார் அவர்கள் செங்குட்டுவன் புகழைக் குறித் துத் தாம் அறிந்தவற்றையெல்லாம் முதன் முதலில் 1915-ம் வருடம் ஒரு புத்தகமாக வெளியிட்டார்கள். அந் நூலுக்குப் பொது மக்களிடையே சிறந்த வரவேற்பு இருந்தது. சென்னை சர்வகலாசாலை அதிகாரிகள் அதனை எப். ஏ. பரீட் சைக்குப் பாடப் புத்தகமாக வைத்தனர். ஆயிரக்கணக்கான புத்தகங்கள் விற்பனையாயின. பெரிய முதல் திரண்டது. செங்குட்டுவன் தன் புகழைப் பாடிய புலவர்க்குப் புத்தகத் தின் வாயிலாக இப்பெருந் தொகையைப் பரிசளித்தான். அதனை இரு கைகளாலும் புலவர் ஏற்று “முன்னே இருந்து கொடுத்த செங்குட்டுவன் இன்று எனக்குச் செத்துங் கொடுக்கின்றான்” என்று கூறி அவனை வாயார வாழ்த்தினர். பின்னர் 1931-ம் வருடமும் அந்நூல் ‘இன்டர்மீடியேட்’ வகுப்புக்குப் பாடமாக இருந்தது. முன்னினும் அதிகமான மாணவர்கள் படித்ததால் புத்தகங்கள் பன்மடங்கு அதிக மாகச் செலவாயின. திருவிதாங்கூர் சர்வகலாசாலையிலும் அந்நூல் பாடமாக வைக்கப்பட்டது. செங்குட்டுவன் மீண்டும் மீண்டும் பரிசளித்தான். பேராசிரியர் அவற்றையெல்லாம் மகிழ்வுடன் பெற்றுத் தன் சொந்த ஊராகிய இராமநாத புரத்தில் வீடு வாங்கினர்; விளைநிலம் வாங்கினர்; மாடு வாங் கினர்; மாளிகை வைத்தார்.

மேல் விவரித்த பலவகை விந்தைக் கொடைகளினும் சேரன் செங்குட்டுவன் செத்துங் கொடுத்த செயல் பெரு விந்தை பயப்பதன்றோ!

9. மூவருலா

தமிழ்மொழியில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் உலா என்பது ஒன்று. இளமையும் கட்டழகும் வாய்ந்த ஒரு தலைமகன் வீதியிலே பவனி வரும் போது பேதை முதல் பேரிளம்பெண் ஈறாகவுள்ள எழு வகைப் பருவத்து மகளிரும் குழுமி நெருங்கி நின்று அவனைக் கண்டு காதல்கைம்மிக்கு ஏத்தித் தொழுவதாகக் கலிவெண் பாவில் அமைத்துப் பாடுவதே இப்பிரபந்தம். இதன் இலக் கணம்

திறந்தெரிந்த பேதை முதல்எழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகென்று — அறைந்தகலி
வெண்பா உலாவாம்

என்று வெண்பாப் பாட்டியலில் கூறப்பட்டுள்ளது.

காவியங்களிலே அவற்றின் தலைவர்கள் திருமணம், முடி சூட்டு விழா, போர்வெற்றி முதலிய நிகழ்ச்சிகளின்பின் இங் ஙனம் பவனி வருவதாகப் பாடுவது ஒரு மரபாகும். கம்ப ராமாயணம், சிவகசிந்தாமணி, பெருங்கதை முதலிய காவியங் களில் இத்தகைய உலாவரும் வைபவங்கள் அழகாக வர்ணிக் கப்பட்டுள்ளன. காவியங்களில் ஒரு சிறு அங்கமாகவரும் செய்தியைப் பெரிதாக விரித்துத் தனி நூலாகப் பாடுவதே உலாப் பிரபந்தத்தின் நோக்கமாகும்.

உலாவை உலாச்செய்புள் எனவும், உலாப்புறம் எனவும், வழங்குவர். இப்பிரபந்தம் மானிடத் தலைவர்கள்மேல் மட்டு

மன்றி, தெய்வங்கள் மீதும் பாடப்படும். உலாக்களில் மிகப் பழமை வாய்ந்த ஆதியுலா கைலையங்கிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது இயற்றப்பட்டதாகும். ஆதலால் அதற்குத் திருக்கைலாய ஞானவுலா என்ற ஒரு பெயரும் உண்டு. அதனைச் சேரமான்பெருமாள் நாயனுர் திருக்கைலாயத்தில் எம்பெருமான் சந்நிதியில் அரங்கேற்றியதாகச் சேக்கிழார் கூறுகின்ருர். இந்த ஆதியுலா பதினென்ரும் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளது.

மூவருலா மானிடத் தலைவர்கள்மீது பாடப்பட்ட ஒரு பிரபந்தமாகும். இந்நூல் பிற்காலச் சோழர் மரபிலே தோன்றிப் பன்னிரண்டாம் நூற்ருண்டில் சோழநாட்டை ஆட்சி புரிந்த விக்கிரமசோழன்; அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன், குலோத்துங்கன் மகன் இரண்டாம் இராஜராஜன் ஆகிய மூவேந்தர்கள்மீதும் அம் மன்னர்களின் ஆஸ்தானப் புலவராக இருந்த கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தரால்தனித் தனியாகப் பாடப்பட்ட மூன்று உலாக்களின் தொகுதியாகும்.

இனி உலாப் பிரபந்தங்களின் பொதுவான அமைப்பினைச் சற்று நோக்குவோம். அவற்றின் தொடக்கத்தில் தலைமகனது முன்னேர்கள் பெருமையும், அவனது பெருமையும் அவரவர் புரிந்த அருஞ் செயல்களோடு விரிவாகக் கூறப்படுகின்றன. அதன் பின்னர், தலைவன் சிற்றரசர்களும் பரிவாரங்களும் புடைசூழத் தன் பட்டத்து யானையில் பவனி வரும் செய்தி அழகாக வர்ணிக்கப்படுகிறது. பவனிவரும் நம்பியைக் காண்பதற்காக வீதியின் இருமருங்கும் காத்து நிற்கும் மகளிர் குழாங்களின் வர்ணனையும், அவர்கள் அவன் வடிவழகைக் கண்டு காதல் கொள்ளும் செய்திகளும் அதனையடுத்துக் கூறப்படும். தலைவன் தான் புரிந்த போரில் சிறைப்

பிடித்துக் கொணர்ந்த பெண்டிரும் இக்குழாத்தில் உட்படுவர். அதன்பின் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ மகளிரின் இயல்புகளும், பந்தாட்டம், நீர்விளையாட்டு முதலிய அவரது ஆடல்களும், அவர்கள் தலைவனைத் தரிசித்தலும், அதன் விளைவாக அவர்களிடம் விரகநோய், மெய்ப்பாடு இவை தோன்றுதலும் ஆகிய செய்திகள் முறையே விரித்துரைக்கப் படுகின்றன. உலாவின் பொது அமைப்பு இதுவாயினும், உலா ஆசிரியர்கள் தமது கற்பனை சக்தியால் கருத்துக்களில் பல புதுமைகளை விளைத்தும், சொல்லணி பொருளணிகளை வெவ்வேருக அமைத்தும், அப்பிரபந்தங்களுக்குள்ளே வேற்றுமைகளைத் தோற்றுவித்துக் கற்பவர் உள்ளத்தை இன்புறுத்துவார்கள்.

உலா ஆடவர்க்கு நாற்பத்தெட்டாண்டளவும் உரியதென்றும், நான்கு வருணத்தாரும் அதற்குத் தகுதியுடையாரென்றும் பன்னிரு பாட்டியல் வகுக்கின்றது.

உலாவில் கூறப்படும் கைக்கிளைச் செய்திகள் குலமகளிர்க்கன்றிப் பரத்தையர்க்கே உரியவாம் என்னும் குறிப்பு, தொல்காப்பியம் புறத்திணையியல் முப்பதாம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினின்று வெளியாகிறது. இதற்கொப்பவே இராசராச சோழனுலாவில் பவனிவருகின்ற மன்னனைக் காண்பதற்குக் கூடியிருக்கும் பெண்கள் குழாத்தைக் குறிப்பிடும்போது,

சாயல் அரமகளிர் தத்தம் திருமரபில்
கோயில் உரிமைக் குழாம் நெருங்கி (79)

என்று ஒட்டக்கூத்தர் பாடுகிறார். இங்கே கோயிற்பணிக்கு உரியவர் எனக்கூறியது குலமகளிரை விலக்குவதற்கென்பது உணரத்தக்கது.

உலாப் பிரபந்தம் கலிவெண்பாவில் பாடப்பட வேண்டு மென்பது இலக்கணம். உலாச்செய்யுளில் அடிகள் நிமிர்ந்து ஆசிரியனது கருத்தின் அளவிற்கேற்ப நூற்றுக்கணக்கில் வரும். மோனை, எதுகை முதலிய தொடைகள் அழகாக அமைந்து அதற்கு விழுமிய ஓசையைத் தருகின்றன. அதில் ஓரெதுகை பெற்றுவரும் இரண்டு அடிகளை ஒரு கண்ணி என்று கூறுவது மரபு. ஒவ்வொரு கண்ணியும் நேரிசை வெண்பாவின் முதலிரண்டு அடிகளைப் போன்ற அமைப் பைப் பெற்றிருக்கும்.

உலாச் செய்யுள் வெண்பாவிற்குரிய சீரும் தளையும் மட்டுமே கொண்டு, நாள் மலர் முதலிய வாய்பாடுகளுள் ஒன்றால் முடிவு பெறும். வெண்பாவின் இலக்கணத்தைப் பூரணமாகக் கொண்டு அடிகள் மட்டும் மிக அதிகமாக வரு கின்ற வெண்கவியைக் கலிப்பாவோடு தொடர்பு படுத்திக் கலி வெண்பா என வழங்குவதன் காரணம் சிந்தித்தற்குரிய தாகும். இப் பெயர் வழக்குப் பிற்காலத்தில் ஏற்பட்டதென் பது பேராசிரியர், "மடல் உலா முதலிய பொருண்மேற் பல அடிகளான் வருபவைகளையும் இக்காலத்தார் கலிவெண்பா என்று பெயர் கொடுத்து வழங்குவர்" என்று கூறுவதால் அறியப்படுகிறது.

உலாவில் வெண்பாவிற்குரிய இயற்சீரும் வெண்சீரும் மட்டுமே வருவனவாயினும், அவற்றுள்ளும் வெண்சீரே, அதுவும் நிரைமுதல் வெண்சீரே, சற்று அதிகமாக வருத

லால் கலிப்பாவிற்குரிய துள்ளலோசை அதன்கண் நிகழ் வதற்கு இடமுண்டாகிறது. இதனுல்தான் அதற்கும் கலி வெண்பா என்ற பெயர் அமைவதாயிற்றுப் போலும். வெண்பா அடிகள் கலித்து (அதிகரித்து) வருவதால் கலி வெண்பா என்று பெயர் வந்ததாகக் கூறுதலும் ஆம்.

விக்கிரமசோழனுலா 342 கண்ணிகளையுடையது. குலோத் துங்க சோழனுலாவில் 387 கண்ணிகள் உள்ளன. இராசராச சோழனுலாவில் அடங்கிய கண்ணிகள் 391. இவை ஒவ் வொன்றின் ஈற்றிலும் ஒவ்வொரு வெண்பாவும், குலோத் துங்க சோழனுலாவில் வெண்பாவின் பின்னர் ஒரு கட்டளைக் கலித்துறையும் அமைந்துள்ளன. குலோத்துங்க சோழனு லாவிற்குப் பழைய உரையுண்டு.

சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படும் பிரமாண நூல்க ளில் மூவருலா ஒன்று. இதன்கண் கூறப்படும் செய்திகள் கல்வெட்டுக்களாலும் வலியுறுகின்றன. சரித்திரக் குறிப்புக் களை எழுதும் வழக்கமில்லாத நமது நாட்டில் சிற்சில வரலாற் றுக் குறிப்புக்களை ஆங்காங்கே கொண்டு மிளிரும் இந் நூலும் இதைப் போன்ற நந்திக்கலம்பகம், கலிங்கத்துப் பரணி, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் முதலிய இலக்கியங்களும் சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகும்.

மூன்று உலாக்களின் தொடக்கத்திலும், இதிகாச புரா ணங்களில் வரும் அரிச்சந்திரன், தசரதன், இராமன் முத லிய வேந்தர்கள் சோழர்குல முன்னோர்களாகக் குறிக்கப் படுகின்றனர். மேலும் ஆதிமனு, சிபி, மாந்தாதா, சுரகுரு, சிலுகன், கோச்செங்கணன், முசுகுந்தன், பகிரதன் முத லியோர்களும் தாம் புரிந்த அருஞ் செயல்களோடு சோழன்

முன்னோர்களாகவே சிறப்பிக்கப்படுகின்றனர். கம்பரும் தசரதரின் மூதாதையர்களாகச் சிபி, மாந்தாதா முதலிய மன்னர்களைக் கூறுவதும் (திரு அவதார. 64; குலமுறை. 5-7) இங்கு நினைக்கத்தகும். இவர்களுள் சுரகுரு என்பவர் சிறந்த நீதிமான். அவரது ஆட்சியின் நெறிமுறையைக் கண்டு யமனும் அவர் நாட்டிற்குள் புக அஞ்சினனும். ஆதலால் அங்குள்ள மக்கள் சாதல் தவிர்ந்தனர். எனவே, வயோதிகர்களெல்லாம் முதுமையால் தளர்ந்து கூனிக் குறுகி உயிருடன் இருந்து வந்தனர். அவர்களை ஏனையோர் ஒருவகைத் தாழிக்குள் இட்டுவைத்துப் பாதுகாத்து வந்தார்கள். இது முதுமக்கட்டாழி எனப்படும். இச் செய்தி,

ஓடி மறலி ஒளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியும் (8)

என்று விக்கிரம சோழனுலாவில் கூறப்படுகிறது.

சரித்திரகால அரசர்கள் பலரும் மூவருலாவில் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் பராந்தகன், இராசராச தேவன், இராசேந்திர சோழன், இராசமகேந்திரன், முதற்குலோத்துங்கன் முதலியோராவர். இவர்களுள் இராசராசன் தனது மார்பில் தொண்ணூற்றாறு புண்களை ஏற்ற வீரன் என்றும், பராந்தகன் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்த சிவபக்தன் என்றும், இராசமகேந்திரன் அரங்கநாதருக்கு சேஷசயனம் அமைத்த விஷ்ணுபக்தன் என்றும், முதற்குலோத்துங்கன் சுங்கம் தவிர்த்த பேரரசன் என்றும் சிறப்பிக்கப்படுகின்றனர்.

இனி இவ்வுலா நூல்களின் தலைவர்களான விக்கிரமன், குலோத்துங்கன், இராசராசன் என்னும் மூவேந்தர்களையும் குறித்து அவரவர்க்குரிய உலாக்களினின்றும், கல்வெட்டு முதலிய பிற ஆதாரங்களினின்றும் அறியப்படும் வரலாற்றினைச் சற்று நோக்குவோம்.

விக்கிரம சோழன்

இவன் முதற் குலோத்துங்கனுக்கு அவன் மனைவி மதுராந்தகியிடம் தோன்றியவன். இவன் ஆனிமாதம் உத்திராட நாளில் பிறந்தான். தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே அரச காரியங்களில் வேண்டிய உதவிகள் புரிந்து அவனது அன்பிற்குப் பாத்திரமானான். தந்தை காலமான பின்பு கி. பி. 1118-ல் இவன் அரசு கட்டில் ஏறினான். இவன் தனது வருவாயில் பெரும் பகுதியையும் தில்லைக் கோவிலில் திருப்பணிகள் செய்வதிலும், நிபந்தங்கள் விடுவதிலும் செலவிட்டான். ஸ்ரீரங்கம் பெரிய கோவிலிலும் இவன் பல திருப்பணிகள் புரிந்தான். இவற்றால் இவனது பரந்த சமய நோக்கு வெளியாகிறது.

இவன் பல விருதுப்பெயர்களைப் பூண்டிருந்தான். அவற்றுள் மிகப் பிரசித்தமானது தியாக சமுத்திரம் என்பதாகும். விக்கிரம சோழனுலாவில் இரண்டிடங்களில் இப் பெயரால் இவன் குறிக்கப்படுகிறான். அவை வருமாறு:

> செங்கோன் தியாக சமுத்திரம் நன்னுதலும்
> தங்கோ மறுகில் தலைப்பட்டு (216)
>
> ஏனைக் கலிங்கங்க ளேழனையும் போய்க்கொண்ட
> தானைத் தியாக சமுத்திரமே (331)

கல்வெட்டுக்களிலும் இப் பெயர் வந்துள்ளது. அகளங்கன் என்பது இவனது வேறொரு பட்டப் பெயராகும்.

இவனுக்கு மனைவியர் சிலர் இருந்தனர். அவர்களுள் முக்கோக்கிழான் என்பவள் பெருந்தேவியாக விளங்கினாள். அவள் காலஞ்சென்றபின் தியாக பதாகை என்பவள் பட்டத் தரசியானாள்.

விக்கிரமசோழன் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரம் தலைநகரமாக விளங்கியது. இவனது ஆட்சிக் காலத்தில் சோழநாட்டின் பெரும்பகுதி வெள்ளத்தால் அழிவுற்று அதனல் பஞ்சம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

ஒட்டக்கூத்தர் இவன்மீது இவ்வுலாவே யன்றிப் பரணி நூல் ஒன்று பாடியதாகவும் அறிகின்றோம்.

விக்கிரம சோழனுக்கு உதவியாக இருந்த பல தலைவர்கள் இவ்வுலாவில் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் கருணாகரத் தொண்டைமான், வாணகோவரையன், நரலோக வீரன், வேணாடர்கோன், அனந்தபாலன், சேதிராயன் முதலியோர் முக்கியமானவர்கள்.

இரண்டாங் குலோத்துங்கன்

விக்கிரமசோழன் கி. பி. 1135-ல் இறந்தபோது அவன் மகன் இரண்டாங் குலோத்துங்கன் சிம்மாசனம் ஏறினன். இவன் கரிய நிறமுடையவன். இச் செய்தி இவனது உலாவிலிருந்து அறியப்படுவதாக அதன் பழைய உரையாசிரியர் கூறுகின்றார். இவன் தில்லையில் வைத்து முடி கவித்துக் கொண்டான் என்பர். இவன் காலத்தில் போர் எதுவுமின்றி நாட்டில் அமைதி நிலவியிருந்தது. இவன் தில்லையில், திருப்பணிகள் புரிந்த செய்தியை இவனது உலா 38 முதல் 58 வரையுள்ள கண்ணிகளில் மிக விரிவாகக் கூறுகிறது. அவற்றுள் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தது முக்கியமானதாகும். இக்காரணத்தால் பேரம்பலத்தைப் பொன் வேய்ந்த சோழன் என்று இவன் சிறப்புப் பெயர் பெற்றான். இவன் தில்லை மண்டபத்தில் எழுந்தருளியிருந்த கோவிந்தராஜப் பெரு

மானே எடுத்தெறிந்ததாக இவன் உலாவும் தக்கயாகப்பரணியும் கூறுகின்றன. இவனது சைவாபிமானம் வைணவ சமயத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்யத் தூண்டியிருக்கவேண்டும். திருநீற்றுச்சோழன் என்ற சிறப்புப் பெயரையும் இவன் தரித்திருந்தான்.

இவன் காலத்தில் தமிழணங்கு மிக்த் தழைத்துப் பொலிவுற்று விளங்கினள். தமிழிலுள்ள சிறந்த புலவர்களில் இருவரான ஒட்டக்கூத்தரும் சேக்கிழாரும் இவனால் ஆதரிக்கப்பட்டு இவன் சபையை அலங்கரித்தனர். ஒட்டக்கூத்தர் இவனுக்கு வித்யாகுருவாக விளங்கினர். அவர் இவன் மீது ஓர் உலாவும் ஒரு பிள்ளைத்தமிழும் பாடித் தம் பேரன்பைப் புலப்படுத்தியிருக்கிறார்.

குலோத்துங்கனின் பட்டத்தரசியர் இருவர். அவருள் தியாகவல்லி முதன்மைவாய்ந்தவள். அவளுக்குப் புவனமுழுதுடையாள் என்னும் பெயரும் உண்டு. இரண்டாம் மனைவி முக்கோக்கிழான் என்பவள். இவள் மலாடர் குலத்தில் வந்தவள்.

இரண்டாம் இராசராசன்

இவன் இரண்டாம் குலோத்துங்கனின் திருக்குமாரன்; கி. பி. 1146-ல் அரசுகட்டிலேறினான். இவனது ஆட்சியில் போர் எதுவும் நிகழவில்லை. ஆதலால் மக்களும் பற்பல சமயத்தவர்களும் அமைதியாக வாழ்ந்து வந்தனர். சைவ சமயத்தைப் பேணிவந்ததைப் போலவே இவன் வைணவ சமயத்தையும் பரிபாலித்து வந்தான். இவன் பல தமிழ்ப் புலவர்களை அவையின்கண் இருந்தி ஆதரித்தான். ஒட்டக்

கூத்தர் அந்த அவைக்குத் தலைமை வகித்து அலங்கரித்தார். அக்காலத்தில் அவர் மிக்க முதுமை வாய்ந்தவராக இருந்தார். இராசராசன் அவரை மரியாதையோடு உபசரித்து வந்தான். ஒரு முறை தளர்ச்சியுற்ற புலவருக்கு அவன் கைகொடுத்து உதவினான். அப்பொழுது புலவர் மகிழ்ந்து,

கோலையைத் தடவிய வைவே லரக்கர் குலமடியச்
சிலையைத் தடவிய கையே இதுசெக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத் தடவி மலைந்தவொன்னார்
தலையைத் தடவி நடக்குங்கோல் யானைச் சயதுங்கனே.

(தமிழ்நாவலர் சரிதை 134.)

என்று அவனைச் சிறப்பித்துப் பாடினார். ஒட்டக்கூத்தரைக் கொண்டு தக்கயாகப் பரணியைப் பாடுவித்தோன் இவனே. புலவர் அந்நூலில் பல இடங்களில் இவனைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார். ஒட்டக்கூத்தர் இராசராசசோழ னுலாவை அரங்கேற்றுகையில் இம் மன்னன் ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் வழங்கினான் என்பர். இச் செய்தி,

... ... —தெள்ளித்தம்
முன்னு யகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்னு யிரம்சொரிந்த பூபதியும்

என்று சங்கரசோழனுலாவில் கூறப்படுகிறது. உலாவில் இவன் புகார் நகரவீதிகளில் பவனிவந்ததாகக் கூறப்படுதலின் இவன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் தலைநகராகச் சிறந்து விளங்கியது என்று கருதலாம்.

இலக்கியவரலாறு பற்றிய சில செய்திகளும் இந்நூலால் அறியப்படுகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள்

ஒன்றான களவழி நாற்பது தோன்றிய வரலாறு மூவருலாத் தொகுதியில் அடங்கிய ஒவ்வோர் உலாவிலும் குறிப்பிடப் படுகிறது. கோச்செங்கட் சோழனுக்கும் சேரமான் கணைக் கால் இரும்பொறைக்கும் ஒரு முறை போர் நடந்தது. அதில் சோழ வேந்தன் சேரமானைத் தோல்வியுறச் செய்து, அவனைச் சிறைப்பிடித்துக் கொண்டான். அப்போது சேரமானின் நண்பரான பொய்கையார் என்னும் புலவர் சேரனைச் சிறை வீடு செய்வதற்காகக் களவழி நாற்பது என்ற நூலை இயற்றி அதனைச் சோழன்முன் பாடினர். அதைக் கேட்ட சோழன் மகிழ்ந்து புலவருக்குப் பரிசாக, அவர் விரும்பியவாறே அவரது நண்பனான சேரமானை விடுதலை செய்தான். இச் செய்தி,

> **மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்**
> **பாதத் தளைவிட்ட பார்த்திபனும்** (14)

என்று விக்கிரமசோழனுலாவில் கூறப்படுகிறது. புறநானூறு, கலிங்கத்துப் பரணி, தமிழ்விடுதூது முதலிய இலக்கியங்களிலும் இச் செய்தி வந்துள்ளது. குலோத்துங்கசோழனுலாவின் உரையில் களவழிப்பாக் கொண்டோன் தஞ்சை விஜயலயன் என்று குறிக்கப்படுவது ஆராய்தற்குரியதாகும். இனி செயங்கொண்டார் முதற் குலோத்துங்கன்மீது பாடிய கலிங்கத்துப் பரணியினும் வேறாய கலிங்கப்பரணி என்னும் நூல் ஒன்று மூவருலாவின் ஆசிரியராகிய ஒட்டக்கூத்தரால் அக் குலோத்துங்கன் மகனாகிய விக்கிரம சோழன்மீது பாடப்பட்டதாகத் தெரிகிறது. இந்நூல் இப்போது கிடைப்பதில்லை. இதில் குறிக்கப்படும் கலிங்கப்போர் விக்ரமன் தன் இளவரசுக் காலத்தில் தென் கலிங்கத்தில் நிகழ்த்தியதால் வேண்டுமென வரலாற்றாசிரியர் கூறுவர். இச் செய்தி,

வீரும்பரணியில் வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெருர்பரணி கொண்ட பெருமான்—தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன் (28, 29)

என்று குலோத்துங்க சோழனுலாவினும், இராசராசசோழனுலா (27, 28) வினும், தக்கயாகப்பரணி (776-ம் தாழிசை) யினும், அதன் உரையினும் கூறப்பட்டுள்ளது.

வேறிரண்டு பரணிநூல்களும் சோழ வேந்தர்கள்மீது பாடப்பட்டனவாகத் தெரிகின்றன. அவ் வேந்தர்களுள் ஒருவன் இராசேந்திரன் மகன் இராசாதிராசன். இவன் சாளுக்கிய மன்னனை ஆகவமல்லன் என்பவனோடு கொப்பம் என்ற ஊரில் நிகழ்த்திய போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று பரணிபாடப்படும் சிறப்பைப் பெற்றான்.

… … … —கொலையானை
பப்பத்து ஒருபசிப்பேய் பற்ற ஒருபரணி
கொப்பத் தொருகளிற்றுற் கொண்டகோன் (24)

என்று இராசராசனுலா அவனைச் சிறப்பிக்கின்றது.

மற்றோர் பரணி கொண்டவன் வீரராசேந்திரன். இவன் கொப்பத்தில் போர்செய்த இராசராசனின் தம்பி. இவனும் ஆகவமல்லனோடு போர்புரிந்தே பரணிபாடும் சிறப்பைப் பெற்றான். இவன் செய்த போர் துங்கபத்திரையும் கிருஷ்ணா நதியும் கூடும் கூடலசங்கமம் என்னும் இடத்தில் நிகழ்ந்ததாகும். இச் செய்தி

… … … —கூடல
சங்கமத்துக் கொள்ளும் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும் (22)

என்று விக்கிரமசோழ னுலாவினும்

... ... —ஒப்பொருவர்
பாட வரிய பரணி பகடொன்றின்
கூடல சங்கமத்துக் கொண்டகோன் (25)

என்று இராசராச சோழனுலாவிலும் குறிக்கப்படுகிறது.

கண்டனலங்காரம் என்னும் அணிநூல் ஒன்று தமிழில் உண்டு. அது முழுநூலாக இப்பொழுது கிடைப்பதில்லை; சிற்சில பாடல்கள் மட்டுமே அகப்படுகின்றன. அந்நூல் கண்டன் என்னும் விருது பெற்ற சோழவேந்தன் பெயரால் இயற்றப்பட்டதாதல் வேண்டும். இச் சோழவேந்தன் யாவன்? கண்டனலங்காரத்தில் வரும் "பண்சிலம்ப வண்டாடும் பைந்தார்ச் சனநாதன்" என்ற அடியால் அவ்வேந்தற்குச் சனநாதன் என்ற சிறப்புப் பெயரும் உண்டென்று அறியலாம். இனி கண்டன், சனநாதன் என்னும் இரண்டு பட்டப் பெயர்களும் உரியவன் இரண்டாம் இராசராசன் என்று தெரிய வருகிறது. அவனது உலாவில் வரும்,

கன்னன் களகளபன் கண்டன் கதிரோனும்
தன்னனைய் கவிகைச் சனநாதன் (38)

என்ற கண்ணி இதற்குச் சான்று. இவற்றால் கண்டனலங்காரம் என்ற நூல் இரண்டாம் இராசராசன் மீது இயற்றப்பட்டதென்பது உறுதியாகிறது.

இனி மூவருலாவின் ஆசிரியரான ஒட்டக்கூத்தர் வரலாற்றைச் சற்றுக் காண்போம். இவர் அம்பர் நாட்டில் மலரி என்ற ஊரில் பிறந்தவர். தண்டியலங்கார மேற்கோள் செய்யுள் ஒன்றின் ஈற்றடியில் "மலரி வரும் கூத்தன்" என வருவதால் இது உணரப்படும். ஒட்டக்கூத்தர் தமிழில் நிரம்பிய புலமையும், செய்யுளியற்றும் வன்மையும் வாய்ந்தவர். வடமொழியிலும் இவருக்குச் சிறந்த ஞானமுண்டு. வடமொழிச்

சொற்களையும் தொடர்களையும் தமிழ்க் கவிதைகளில் அமைத்து ஒரு புதிய வனப்பை ஊட்டியுள்ளார்.

இவர் விக்கிரமசோழன் காலத்தில் அவனுக்கு ஆஸ்தான வித்வானுகவும், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அவனது வித்யா குருவாகவும், இரண்டாம் இராசராசன் காலத்தில் அவைத் தலைவராகவும் விளங்கினர். இம் மூவேந்தர்கள் மீதும் ஒவ்வோர் உலாவும், குலோத்துங்கன் மீது ஒரு பிள்ளைத் தமிழும் இயற்றியுள்ளார். விக்கிரம சோழன்மீது ஒரு பரணி பாடியதாகவும் தெரிகிறது. தக்கயாகப்பரணி இவரால் இயற்றப்பட்டதாகும்.

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் ஒட்டக்கூத்தரது சமகாலத்தவர். கலிங்கத்துப் பரணியின் ஆசிரியரான செயங்கொண்டார் இவருக்கு ஒரு தலைமுறைக்கு முன்னே வாழ்ந்தவர். செயங்கொண்டாரையும் அவர் பாடிய பரணியையும் புகழ்ந்து

பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி கவிச்சக்ர வர்த்தி பரவச்
செஞ்சே வகஞ்செய்த சோழன் திருப்பெயர (14)

என்று இவர் தாமியற்றிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் பாடியிருக்கிறார்.

ஒட்டக்கூத்தர் தம் காலத்தில் கவிராக்ஷஸன் என்றும், கவிச்சக்ரவர்த்தி என்றும் யாவுராலும் சிறப்பிக்கப் பெற்றார். அவருடைய கவிதைகள் சொல்வளம் நிரம்பி அமைவதால் அவரைக் கௌடப் புலவர் என்று புலவர்கள் பாராட்டினர்.

நம்பிகாளியார், நெற்குன்றவாணர் முதலியோர் இவரது சமகாலப் புலவர்களாவர்.

ஒட்டக்கூத்தர் மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், தக்கயாகப் பரணி என்பவற்றோடு அரும்பைத் தொள்ளாயிரம், ஈட்டியெழுபது, காங்கேயன் நாலாயிரக்கோவை முதலிய நூல்களையும் இயற்றியதாகத் தெரிகிறது.

இனி, மூவருலாவின் இலக்கிய நயத்தைச் சற்றுக் காண்போம். அச் செய்யுள் பாமரர்க்கு எளிதில் பொருள் விளங்குவதில்லை. யமகம், திரிபு, மடக்கு ஆகிய சொல்லணிகள் ஒவ்வொரு கண்ணியிலும் அமைந்து வருவதால் பதம் பிரித்துப் பொருளை உணர்ந்து கொள்வதில் அருமைப்பாடு உள்ளது. கருத்தூன்றி ஆழ்ந்து சிந்தித்தால் அதன் பொருளையும் நயத்தையும் நன்கு உணர்ந்துகொள்ளலாம். தொட்டனைத் தூறும் மணற்கேணி போலப் பொறுமையுடன் பன்முறை ஊன்றிப் படிக்கும்போதுதான் அதன் பொருள் நன்கு புலனாகிறது. பொருள் விளங்கிவிட்டால் கவிஞனின் புலமையிலும், கற்பனையிலும், சொற்களை ஆளும் திறமையிலும் நம் உள்ளத்தைப் பறிகொடுத்து விடுகிறோம். ஓசைநயம் இந் நூலின் ஒரு தனிச்சிறப்பாகும். செய்யுளை ஓசையுடன் படிக்கும்பொழுதே ஒருவகை இன்பம் உண்டாகிறது. அலைமேல் அலை உயர்ந்து வருவதுபோல் சொற்கள் கதித்துக் கம்பீரமாக இயங்குகின்றன. செய்யுளின் பொருள் உணரமாட்டாதவர்களையும் அதன் ஓசை யின்பம் வசிகரிக்கிறது. சான்றாக விக்கிரமசோழனுலாவில் வரும் ஒரு கண்ணியைப் படிப்போம்.

நீராழி யேழும் நிலவாழி யேழுந்தன்
போராழி யொன்றுற் பொதுநீக்கி (32)

இது சோழனின் போர் வெற்றியை உயர்வு நவிற்சிபடக் கூறுகிறது. இதனை ஒருமுறை படிக்கும்பொழுதே அதன்

ஓசை இன்பத்தை அனுபவிக்கின்றோம். இக் கண்ணியில் ஆழி என்ற சொல் மூன்றிடங்களில் வந்துள்ளது. இடத்திற் கேற்ப அது மூன்று வகையாய்ப் பொருள்படுகிறது. நீராழி ஏழு என்பதில் ஆழி என்பதற்குக் கடல் என்று பொருள். நிலவாழி என்னுமிடத்தில் அச் சொல் தீவு என்று பொருள் படும். போராழி என்னும்போது போர்க்குரிய சக்ராயுதம் என்று பொருள்படுகிறது. பாடலின் பொருளையும் நயங்களை யும் இப்பொழுது நாம் நன்கு உணர்ந்து கொள்கிறோம். விக்கி ரமன் பல அரசர்களுக்குப் பொதுவாக இருந்த கடல்களையும் நிலப்பரப்பையும் அவ் அரசர்களைத் தன் சக்ராயுதத்தால் போரில் வென்று, அவையனைத்தையும் தனக்கே உரிமை யாக்கிக் கொண்டான் என்பது கருத்து. இங்கே சோழனது வெற்றி உலகியலைக் கடந்து வர்ணிக்கப்படுவது ஒட்டக்கூத் தருக்குச் சிறப்பாக உரிய காம்பீர்யத்தைக் காட்டுவதாகும்.

கவிஞர் ஒரே குலத்தில் வந்த தந்தை, மகன், பெயரன் ஆகிய மூன்று சோழவேந்தர்களைப் பாட்டுடைத் தலைவர் களாகக் கொண்டதும், அவர்கள் அனைவரையும் ஒரே வகை யான உலாப் பிரபந்தத்திலேயே பாட எண்ணியதும், தமது புலமைக்கும் கற்பனைக்கும் தாமாகவே ஒரு கட்டுப்பாட்டை வகுத்துக்கொண்டதாகும். குலமுன்னோர் செய்திகளாக ஒருலாவிற் சொல்லியவற்றையே மற்றை உலாக்களிலும் கூறவேண்டியிருக்கிறது. ஏழு பருவ மங்கையரது கைக்கிளைச் செய்திகளிலும் இயற்கையிலேயே ஓர் ஒற்றுமை அமைந்துள் ளது. எனவே ஒருலாப்பாடி முடிந்ததும் சாதாரணப் புலவர் களுக்கானல் கற்பனையூற்று முற்றிலும் வறண்டுபோகும். அவர்கள் வேறுமோர் உலாப் பாடவேண்டிய அவசியம் நேர்ந் தால் அதில் முன்னைய உலாவில் வந்த சொல்லும் பொரு ளுமே மீண்டும் வெளிப்பட்டுக் கற்போருக்கு வெறுப்பை

விளைப்பனவாக இருக்கும். ஆனால் மூவருலாவோ கவியுலகிலே மன்னாதி மன்னனாக விளங்கிய கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டதாகலின், அதில் சொல்லும் பொருளும் ஓரிடத்திலேனும் சோர்வுபடுதலன்றி, அடிதோறும் புத்தின்பம் ஊற்றெடுத்துப் பெருகுவதாக உள்ளது. சோழர்தல முன்னோர் வரலாறுகளாக ஓரிடத்திற் கூறியவற்றையே மீண்டும் ஈரிடங்களிற் கூறநேரினும் அவற்றைச் சொல்லும் முறையும், கையாளும் சொற்களும் வெவ்வேறாக உள்ளன. இதுபோலவே, பெண்பாற் பருவம் ஏழினையும் வர்ணிக்கும்போதும் ஒவ்வொரு பருவத்துப் பெண்களும் இயற்கைக்குப் பொருத்தமான தத்தம் தனி இயல்புகளோடு நம் மனக் கண் முன் காட்சி தருகிறார்கள். அவர்களுடைய தோற்றம், உணர்ச்சி, சொல், செயல் ஆகியவற்றில் பருவத்திற்கேற்றவாறு வேற்றுமைகள் புலப்படுகின்றன. மேலும் மூன்று உலாக்களிலும் வருகின்ற ஒரே பருவத்துப் பெண்களுக்குள்ளும் சிற்சில வேற்றுமைகள் புலப்படுமாறு கவிஞர் வர்ணிப்பது பாத்திர சிருஷ்டியில் அவருக்கிருந்த ஆற்றலை நன்கு விளக்குகின்றது.

குலோத்துங்க சோழனுலாவில் வரும் ஒரு பேதைப் பெண்ணின் வருணனையை நோக்குவோம். பேதை என்பது 5 முதல் 7 வயது வரையுள்ள இளம்பருவத்தைக் குறிப்பதாகும்.

ஆடாத தோகை அலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை — சூடத்

தவிராத சூதம் தரையாத வஞ்சி
குவிராத திங்கட் குழவி — அவிகள்

இயங்காத தன்கா இறக்காத தேறல்
வயங்காத கற்பக வல்லி — தயங்கினர்க்

கூழைச் சுருண்முடிக்கக் கூடுவதுங் கூடாதாம்
ஏழைப் பருவத் திளம்பேதை (124—127)

அறிவு தோன்றப்பெறாத பேதைப்பருவம் என்பதை ஏழை என்ற சொல்லால் கவிஞர் புலப்படுத்துகிறார். அவளது சுருண்ட கூந்தல் பின்னி முடிப்பதற்குப் போதிய வளர்ச்சியை இன்னும் அடையவில்லை. அப்பேதைமகளை ஆசிரியர் ஒவ்வொரு காரணம்பற்றி மயில், தாமரை, கிளி, மாமரம், வஞ்சிக்கொடி, சந்திரன், பூஞ்சோலை, தேன், கற்பகவல்லி இவற்றோடு உவமிக்கின்றார். ஆயினும் மிக்க இளமை காரணமாக அப்பேதை அவ்வுவமானப் பொருள்களோடு முற்றிலும் ஒத்திருப்பதில்லை. மயில் என்றால் மேகத்தைக் காணும்போது ஆடவேண்டுமல்லவா? ஆனால் இப் பேதையோ கரியமேகத்தைக் கண்டும் 'ஆடாதமேதாகை'. மேகத்தைக் கண்டாலும் ஆடுவதற்குரிய உள்ளுணர்ச்சி அரும்பப்பெறாத மிக இளைய பருவம் என்பதைக் கவிஞர் இதனால் விளங்கவைக்கின்றார். இவ்வாறே ஏனைய உவமைகளும் அவளது இளமைத்தன்மையைக் குறிப்பால் உணர்த்துகின்றன.

உலாவில் பெதும்பைப்பருவம் பாடுதற்குக் கஷ்டம் என்பார்கள். 'பேசும் உலாவிற்குப் பெதும்பைபுலி' என்ற தனிப்பாடல் அடியினைக் காண்க. பெதும்பை என்பது 8 முதல் 11 வயது வரையுள்ள பருவம். இப்பருவம் விக்கிரமசோழனுலாவில் மிக அழகாக வர்ணிக்கப்படுகிறது.

மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசைகவர்ந்து கொண்டாள் — நிழல்விரவு

முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள் — கன்னி

மடநோக்கந் தான்வளர்த்த மானுக் கவித்து
விடநோக்கம் வேலிரண்டிற் கொண்டாள்— சுடர்நோக்கம்
தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மா தவிக்கவித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள் (135-138)

வர்ணனை மேலும் பல கண்ணிகளில் தொடர்ந்து செல்கின்றது.

குழந்தைகளின் மழலைக்குச் சாதாரணமாகக் கிளியின் பேச்சை உவமை கூறுவதுண்டு. ஆனால் தத்தை மொழியினும் குழலிசை சிறந்த உவமையாகும். கவிஞர் பெதும்பைப் பருவத்துக் குழந்தையின் குரலை வர்ணிக்கும்போது அது கிளியின் பேச்சைவிடக் குழலோசையையே பெரிதும் ஒத்திருந்தது என்று கூறவிரும்புகிறார். அக்கருத்தை அவர் வெளியிடும் நயம் பாராட்டுதற்குரியது. குழந்தை தான் வளர்க்கின்ற கிளிக்குத் தனது மழலைச்சொல்லை அளித்து விட்டதாம். அதனையே கிளி பயின்று மேன்மை பெற்றுள்ளது. கிளிக்குத் தனது மழலையை அளித்த குழந்தை, பின்னர் உத்தம இலக்கணங்களிற் குறையாத குழலினிடமிருந்து அதன் இனிய ஓசையைக் கவர்ந்துகொண்டதாம். இவ்வாறே பெதும்பையின் நகை, பார்வை, நடை முதலியவற்றையும் புலவர் கவி நயம்படக் கூறுகின்றார்.

இராசராசன் உலாவில் ஒரு பேரிளம்பெண் சோழனைக் கண்டு காதல்கொள்ளும் செய்தி வர்ணிக்கப்படுகிறது. அவள் மன்னனைத் தன் கண்ணிற்குள்ளே அகப்படுத்திக்கொண்டதாகக் கவிஞர் பாடுகிறார்.

... ... —பூக்காழும்

ஆரேற்ற பொற்றேள் அபயனை ஆயிரம்
பேரேற்ற தெய்வப் பெருமானைக் — காரேற்ற

அடல்போ லடுதிகிரி அண்ணலைத் தன்பாற்
கடல்போ லகப்படுத்துங் கண்ணுள் (354—355)

என வருகிறது. ஆத்திமாலையைச் சூடிய அபயனது வர்ணனை திருமாலிற்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. அபயன் ஆயிரம் பெயர் உடையவன்; பகைவரை அடுவதற்குரிய திகிரியைக் கொண்டவன். திருமாலும் இவ்விருசிறப்பிற்கும் உரியராவர். அவ்வண்ணலாகிய சோழனைத் தன்பால் அகப்படுத்தும் கடல்போன்ற பெரிய கண்ணையுடையவள் அப் பேரிளம் பெண். குளிர்ச்சியும் பரப்பும் காரணமாகக் கண்ணைக் கடலுக்கு உவமை கூறுவது மரபு. இங்கே பெண் அபயனைக் கண்ணிற்குள் அகப்படுத்தியசெய்தி திருமாலுக்கும் பொருந்த வருகிறது. அவரோ பாற்கடலுக்குள் அமர்ந்து துயில் கொள்பவர்.

... அடுதிகிரி அண்ணலைத் தன்பாற்
கடல்போ லகப்படுத்துங் கண்ணுள்

என்னும் கண்ணியில் வரும் தன்பால் என்பதிலுள்ள லகரம் சந்தியால் றகரமாகிப் பாற்கடல் என்று ஒலித்துத் தொனியால் திருமால் துயில்கொள்வதற்குரிய இடத்தை உணர்த்துதல் காண்க. இவ்வாறு நயமுள்ள இடங்கள் மூவருலாவில் நூற்றுக்கணக்கில் உள்ளன.

அக்காலத்துப் பெண்கள் அணிந்த அணிவகைகள் இராசராச சோழனுலா 322 முதல் 324 வரையுள்ள கண்ணிகளில் கூறப்படுகின்றன.

உலாவிலுள்ள ஒவ்வொரு கண்ணியும் கற்பனை மலிந்த ஒரு பொருளைத் தாங்கி அதனோடு யாப்பின் நெருக்கடிக்கும் உள்ளாவதால் அதனுள்வரும் சொற்களிற் சில குழைவுற்றுப் புத்துருவம் பெறுகின்றன. இராசராச சோழனுலா 143-ம் கண்ணியில்

... ... —மழைத்துப்
புடைபோ யளகம் பொதுக்குவதன் முன்னே

என்பதில் வரும் மழைத்து என்ற சொல் அதற்குச் சான்று. மழை என்ற சொல் எப்பொழுதும் பெயராகவே வழங்கும். இங்கு அது வினையாக உருமாறியுள்ளது. மழைத்து என்ற புத்துருவம் மழையின் தன்மையைப்பெற்று என்று பொருள் படுகிறது.

மூவருலா, சொல்லணி, பொருளணி முதலிய அணி வகைகளாலும் கற்பனைநயங்களாலும் ஒரு சிறந்த இலக்கிய மாக விளங்குகிறது. அதனுள் வந்துள்ள வரலாற்றுக் குறிப்புக்கள் அந்நூலின் மதிப்பை உயர்த்துகின்றன. தமிழிலுள்ள இலக்கியச் செல்வங்களில் மூவருலா ஒன்று என்பதில் ஐயமில்லை.

10. பட்டினப்பாலை

முற்காலத்தில் இலக்கியங்களை இயற்றிய ஆசிரியர்கள் சில நியதிகளை மேற்கொண்டு அவற்றை இயற்றியுள்ளனர். அந்நியதிகள் பின்வந்த புலவர்களாலும் கைக்கொள்ளப்பட்டமையால் அவை இலக்கிய மரபு என்று பெயர் பெற்றன. அவற்றுள், கவிதைகள் இலக்கியங்கள் இவற்றின் பொருள்களை அகம் புறம் எனப் பாகுபாடு செய்வது ஒன்று.

அகமாவது, அன்பொத்த காதலன் காதலிகளின் உள்ளத்தில் தோன்றும் இன்பம். அவ்வின்பம் பற்றிய ஒழுக்கத்தை அகம் என்ற பெயரால் குறிப்பர். புறமாவது, அறமும் பொருளும் பற்றிய ஒழுக்கமாகும். அகப்பொருளை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை, என ஏழு திணைகளாக வகுப்பர். ஐந்திணையுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன அடங்கும். புறப்பொருளையும் இவ்வாறே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி பாடாண் என்னும் ஏழு திணைகளாகப் பிரிப்பர்.

ஐந்திணையுள் குறிஞ்சியாவது, தலைவன் தலைவியர் தம்முட் கூடும் கூட்டம். கூடிய தலைவன் பற்பல காரணங்களாற் பிரிவது பாலைத்திணையாகும். அப்பிரிவைச் சகித்துத் தலைவன் வருந்துணையும் தலைவி ஆற்றியிருப்பது முல்லை எனப்படும். தலைவன் குறித்த காலத்தில் வாராமல் காலம் நீட்டித்தவிடத்துத் தலைவி ஆற்றாமல் இரங்குவது நெய்தல் திணையாகும். பிரிந்த தலைவன் வந்து கூடிய பின்பு தலைவன்

தலைவியர்களிடையே காதலின்பத்தை மிகுவிப்பதற்காக நிகழும் சிறு கலகம் மருதத்திணைக்கு உரியதாகும். அகம் புறம் என்னும் பொருள்கள் பற்றிப் புலவர்கள் வகுத்துக் கொண்ட மரபுகள் இவையும் இவைபோல்வன பிறவுமாம்.

இவ் ஐந்திணை பற்றிப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்புக்களே நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்னும் தொகை நூல்கள். பத்துப்பாட்டிலும் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை என்பன அகத்திணைக் குரியன. தமிழிலக்கியங்களில் மற்றைத் திணைகளை விடவும் பாலைத்திணையே மிகுதியாகப் பாடப்பட்டுள்ளது. இதற்குத் தக்க காரணங்களும் இருத்தல் வேண்டும். தலைவன் தலைவியர்களிடையே யுள்ள அன்பு அவர்கள் கூடியிருக்குங் காலத்தில் இருந்ததைவிடவும் பிரிந்திருக்கும் போதுதான் மிக்க விளக்கம் பெறுகிறது. முன்னர்க் கூடியிருக்கும்போது இன்பத்தை அளித்த சூழ்நிலையும் நுகர்ச்சிப் பொருள்களும் பிரிந்திருக்கும் வேளையில் துன்பத்தை மிகுவிக்கும் சாதனங்களாக மாறுகின்றன. அப்பிரிவுக் காலத்தில்தான் ஒருவர்க்கொருவர் இன்றியமையாதவர் என்ற உண்மையை அவர்கள் நன்கு உணர்கின்றனர். முன் அவர்கள் மனத்திலிருந்த குறைகளும் வருத்தங்களும் அப்பிரிவால் ஏற்படும் ஆற்றாமையாகிய வெம்மையால் வெந்து சாம்பராகித் தூய அன்பு ஒன்றே அவர்கள் உள்ளத்தில் நிலைபெறுகிறது. மேலும், தலைவனும் தலைவியும் பிரிந்திருக்கும்வேளையில் அவர்கள் உள்ளத்தில் நிகழும் வருத்தங்களும், மீண்டும் கூடப்பெறும் நாளை ஆவலோடு எதிர்பார்க்கும்போது தோன்றும் இன்பக் கற்பனைகளும் இலக்கியப் புலவனது கருத்துக்குச் சிறந்த வளமூட்டுகின்றன.

இப் பாலைத்திணையைச் செவ்வையாகப் பாடும் திறம்பற்றிப் பாலைக் கௌதமனர், பாலை பாடிய பெருங்கடுங்கோ என்று புலவர்கள் சிறப்பிக்கப் பெறுவராயினர்.

பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பட்டினப்பாலை மிக்க பொருட் சிறப்பு வாய்ந்ததாகும். அது சங்க காலத்தில் சோழ நாட்டை ஆண்ட கரிகாற்பெருவளத்தான் மீது கடியலூர் உருத்திரங்கண்ணனர் என்ற புலவர் பாடியது. பாட்டின் பெயரில் அமைந்துள்ள பட்டினம் என்பது சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிப்பதாகும். புலவர் அப்பட்டினத்தின் சிறப்புக்களை மிக விரிவாக வர்ணிக்கின்றார். ஆகவே, பட்டினத்தின் சிறப்பைப் பாலைத்திணையோடு இணைத்துக் கூறுவதே இப்பாடலின் பொருள் என்று தெரியலாம்.

இப் பாடலைக் கரிகாலன் முன்னிலையிற் பாடி அவனிடம் பரிசில் பெறுவதே புலவரின் தலையாய நோக்கமாகும். எனவே அரசன் மனம் மகிழும்படி அவனது நாடு, நகர் இவற்றின் சிறப்புக்களையும், அவனது ஆற்றல், வீரம், செங்கோன்மை முதலிய பெருமைகளையும் புகழ்ந்து பாடுவதையே புலவர் முக்கியமாகக் கருதியிருக்கவேண்டும். அவ்வாறு கருதுவது மிகப் பொருத்தமானதும் ஆகும். அங்ஙனம் பாடுவதற்குப் புலவர் பாலைத் திணையைப் பொருளாகத் தேர்ந்து கொண்டது அவரது திறமையை நன்கு புலப்படுத்துகிறது. அத்திணை அதற்குரிய வாய்ப்பை மிகுதியாக அளிக்கிறது. புலவர் அவ் வாய்ப்பைப் பயன்படுத்திப் பாலைத் திணையோடு, காவிரிப்பூம் பட்டினத்தையும் கரிகாலனையும் இணைக்கும் வகை மிக்க நயமுடையதாகும். அதனை நோக்குவோம்.

ஒரு தலைவன் பொருளீட்டுவதன் பொருட்டு அயல் நாட்டிற்குச் செல்ல விரும்புகிறான். பொருளை ஈட்டிக் கொண்டு வந்து தலைவியோடு இப்பொழுது வாழ்வதைவிடவும் மிக இன்பமாக வாழவேண்டுமென்பதே அவன் நோக்கம். அவன் செல்லவேண்டிய வழியோ ஒரு சுரநெறியாகும். ஆயினும் தலைவன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், தன் அன்புமிக்க காதலியைப் பிரிந்திருக்கவேண்டுமே என்று எண்ணும்போதுதான் அவன் உள்ளம் மிக வருந்துகிறது. தான் பிரிந்து சென்றால் தலைவி ஆற்றாமல் இறந்துவிடக் கூடுமோ என்றும் தலைவன் அஞ்சுகின்றான். தலைவியின் அகன்ற மெல்லிய தோள்களை எண்ணும்போது அவளைப் பிரிவதற்கு மனம் வரவில்லை. இவ்வாறு ஒருகணம் பொருளை நாடித் தலைவியைப் பிரிய நினைவதும், மறுகணம் தலைவியின் பிரிவிற்கு வருந்திச் செலவு தவிர எண்ணுவதுமாகத் தலைவனது உள்ளம் இருதலைக் கொள்ளி எறும்புபோல ஊசலாடுகிறது. பின்னர் அவன் நெடுநேரம் நிதானமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருகிறான். தலைவியைப் பிரிவதால் அடையவிருக்கும் செல்வம் எவ்வளவு பெரிதாயினும் அது தனக்கு வேண்டுவதில்லை என்று தன் நெஞ்சோடு கூறுகிறான். அப் அப்பெருஞ் செல்வத்தின் அளவைக் குறிப்பிடும்போதுதான் 'கரிகாற் சோழனால் ஆளப் படுவதும் மிக்க செழுமை படைத்ததுமான காவிரிப்பூம் பட்டினம்' என்ற கருத்தை அமைக்கின்றான். அதனோடு தான் செல்லவேண்டிய சுரநெறியைக் குறிக்கும்போது கரிகாலன் பகைவர்களை அழிப்பதன் பொருட்டு அவர்கள்மீது ஓச்சிய வேலைவிடவும் அது வெம்மை வாய்ந்ததென்றும், பிரிந்துபோக எண்ணிய தன் தலைவியின் விசாலமான மெல்லிய தோளைக் குறிப்பிடும்போது அது கரிகாலனின் செங்கோலை விடவும் குளிர்ச்சியுடையது என்

றும் கூறுகின்றான். இனி இக் கருத்து நூலிற் கூறப்படு வதனை நோக்குவோம்.

முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே. (218-220)

திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் றோளே. (299-301)

இதுவே பட்டினப்பாலையிற் கருக்கொண்ட பொருள்; அதன் உயிர் நிலை.

காவிரிப்பூம் பட்டினத்தை வர்ணிக்கும்போது, புலவர் அந்நகர் வழியாகப் பாய்ந்து அதற்கு அழகைத் தரும் காவிரி யாற்றின் சிறப்பை முதலிற் கூறுகிறார். ஓர் ஊருக்கு அணித் தாக ஆறு அமைந்திருப்பது அதற்குச் சிறப்பைத் தரும் என்று நம் முன்னோர்கள் கருதினர். "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்ற முது மொழியைக் காண்க. புராண இதி காசங்களில் நாட்டு வர்ணனை நகர வர்ணனைகளோடு ஆற்று வர்ணனையும் ஓர் அங்கமாக வருவதும் இதுபற்றியேயாம்.

காவிரியாறு:

காவிரியாறு வற்றாத நீர்ப்பெருக்கையுடையது. மழை பெய்யாத வற்கட காலங்களிலும் அதில் தண்ணீர் நிறைந்து செல்லும். மழை பெய்யாமல் இருப்பதற்குச் சுக்கிரன் என் னும் கிரகம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லாமல் தெற்கு முகமாகச் செல்வதே காரணமென்று வான நூலறி ஞர்கள் கூறுவர். அக்காலத்தில் மழைத் துளியைப் பருகி உயிர் வாழும் வானம்பாடிப் பறவை மிக்க வருத்தமுறுமாம்.

காவிரி எந்நாளும் கரைபுரண்டு பாயும் போது, தான் அரித்துக் கொண்டுவரும் பொன் துகளைக் கரைகளில் கொழித்துச் செல்லும்.

மருத நிலம்:

காவிரியின் நீர் வளத்தால் அருகிலிருக்கும் மருத நிலங்கள் மிக்க செழுமையடைகின்றன. அகன்ற வயல்களில் செந்நெல், கரும்பு முதலிய பயிர்கள் மாறாமல் விளைந்து நல்ல பயனைத் தருகின்றன. அங்குள்ள கரும்பாலைகளில் கருப்பஞ்சாறு காய்ச்சப்படும் பொழுது எழுகின்ற புகை வயல்களில் வளரும் நெய்தற் பூக்களிற் பட்டு அவை வாடுகின்றன. எருமைக் கன்றுகள் வயல்களில் விளைந்திருக்கும் நெற்கதிர்களை விலாப்புடைக்கத் தின்று, அருகில் நெல் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நெற்கூடுகளின் நிழலிற் படுத்து உறங்குகின்றன. குலைகளையுடைய தென்னை, பனை, கமுகு, மா, வாழை முதலிய மரங்களும் மஞ்சள், இஞ்சி, சேம்பு முதலிய செடிகளும் அங்கே செழிப்பாக வளர்கின்றன.

மருதநில மக்கள்:

இம் மருத நிலத்தில் வாழும் மக்கள் மிக்க செல்வமுடையவர்கள். அவர்கள் வீடுகளின் முற்றத்தில் நெல் முதலிய தானியங்கள் உலர வைக்கப்பட்டிருக்கும். அவற்றைச் சிறுமியர் காவல் காத்துக் கொண்டிருப்பர். அத் தானியங்களைத் தின்பதற்காகக் கோழிகள் அப்பக்கமாக வருவதுண்டு. அவ்வாறு வரும் கோழிகளை அச்சிறுமியர் தம் காதுகளில் அணிந்துள்ள குழைகளைக் கழற்றி எறிந்து வெருட்டுவார்களாம். அக் குழைகள் எடுப்பாரின்றி முற்றத்திலேயே கிடக்கும். பின்பு அம் முற்றத்தில் நடை வண்டியை

உருட்டி விளையாடும் சிறுவர்களின் வண்டிச் சக்கரங்களைப் போகவொட்டாமல் தடுக்கும்.

அகநகர் வியன் முற்றத்துச்
சுடர் நுதல் மட நோக்கின்
நேரிழை மகளிர் உணங்குணக் கவரும்
கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலங்கும். (20-25)

மருதநில மக்கள் பகை முதலியவற்றால் வரும் எவ்வகைத் துன்பமுமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். இத்தகைய ஊர்கள் ஒன்றுக்கொன்று அணிமையாய் அச்சோழ நாடெங்கும் உள்ளன.

உப்பங்கழிகள், பொழில்கள், பொய்கைகள்:

காவிரிப்பூம் பட்டினத்தின் அகன்ற கடற்கரையிலே உப்பங்கழிகள் உள்ளன. அவற்றில் தமிகளில் கட்டப்பட்ட பெரிய படகுகள் குதிரைப் பந்திகள்போல் ஒன்றன்பின் ஒன்றாக மிதந்து கொண்டிருக்கும். அப்படகுகளில் பரதவர் தாம் விளைக்கும் உப்பை ஏற்றிச் சென்று விற்றுப் பதிலாக நெல்லை ஏற்றிக்கொண்டு மீள்வர். உப்பங் கழிகளை யடுத்துத் தோட்டங்களும், நல்ல பயனைத் தரும் தோப்புக்களும் அழகிய பூஞ்சோலைகளும் உள்ளன. அவற்றின் அருகில் அகன்ற கரையையுடைய பொய்கைகள் காணப்படுகின்றன. பொய்கையின் சமீபமாய்க் கோயில்கள் இருக்கின்றன. நீர் நிறைந்த பொய்கையும் அதனை அடுத்துள்ள கோயிலும் தெளிந்த வானத்திலிருக்கும் சந்திரனையும் அதன் அருகிலுள்ள முடம் நுகம்போல் விளங்கும் மக நட்சத்திரத்தையும்

ஒத்திருக்கும். அப் பொய்கையில் மலர்ந்துள்ள பன்னிற மலர்கள் கண்ணிற்கினிய காட்சி அளிக்கின்றன. இவை யன்றி மூழ்குவோர்க்கு இம்மை மறுமை இன்பங்களை அளிக்கவல்ல பெரிய ஏரிகளும் அங்கே உண்டு.

மதில்கள், மாடங்கள், அட்டில்கள்:

காவிரிப்பூம் பட்டினத்தை உறுதியான மதில்கள் சூழ்ந் திருக்கின்றன. பிறரால் ஒருபொழுதும் வெல்லப்படாமை யால் அம்மதில்களில் ஜயமாது தங்குவதாகக் கூறுவர். மதி லின் கதவுகளில் சோழனது அடையாளமாகிய புலியுரு செதுக்கப்பட்டுள்ளது. மதிலினுள்ளே உயரமான மாட மாளிகைகள் இருக்கின்றன. அவற்றில் சித்திர வேலைப் பாடுகள் அமைந்த ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அம் மாளிகைகளில் வாழும் செல்வந்தர்கள் அறவொழுக்கம் நிரம்பியவர்கள். அறஞ் செய்தற்பொருட்டு மிகுதியான சோறு அவர்களது அட்டிலில் சமைக்கப்படுகிறது. அச் சோற்றை வடிக்கும்போது சிந்தும் கஞ்சி ஆறுபோல் வீதி களில் பாயும். அவ்வீதிகளில் எருதுகள் ஒன்றோடொன்று சண்டையிடும்போது அவை சேறுகின்றன. சேறு உலர்ந்து, பின்பு அவ்வீதி வழியாகத் தேர் ஓடும்போது தூகள் மேலெ ழுகிறது. அத்தூகள் மாளிகைகளின்மீது படிவதால் அவை புழுதியிற் புரண்ட யானைகள் போலத் தோற்றமளிக்கின் றன. எருதுகள் நிற்கும் சாலைகளும் அந்நகரில் உள்ளன.

அறநிலையிய அகவட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
ஆறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகித்

தேரோடத் துகள்கெழுமி
நீருடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும் (42-50)

பள்ளிகள், யாகசாலைகள், காளிகோட்டம்:

சமணர்களும் பௌத்தர்களும் தவம் புரியும் பள்ளிகளும், முனிவர்கள் தங்கி யாகஞ் செய்யும் சோலைகளும் அங்கே உண்டு. முனிவர்கள் வேள்வி இயற்றும்போது குயில் தன் பேடையோடு அங்கிருந்து அகன்று பூதங்கள் காவல் புரியும் காளி கோட்டத்திற்குச் சென்று அங்குள்ள புறக்களுடன் தங்குகின்றன.

பரதவர் பிள்ளைகளின் விளையாடல்:

கடற்கரையிலே கரிய மணல் மேடுகள் பல உள்ளன. அவற்றைச் சூழ்ந்து மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அங்கே பரதவரின் பிள்ளைகள் சென்று அடப்பம் பூ, ஆம்பற் பூ இவைகளைச் சூடியும் இறு மீன், ஆமை இவற்றின் மாமிசத்தைத் தின்றும் பொழுது போக்குவர். பின்பு அவர்கள் நாள்மீன்களும் கோள்களும் கலந்தாற்போல் ஒருங்கு திரண்டு கைகளாலும் ஆயுதங்களாலும் ஒருவரையொருவர் தாக்கி நெடுநேரம் மற்போர் புரிவர். பின்னும் அவர்கள் வலியடங்காதவராய்க் கவணிற் கற்களை வைத்து வீசுவர். அதைக்கண்டு பனைமரத்தின் மேலிருக்கும் பறவைகள் அஞ்சிப் பறந்து போகின்றன.

செம்படவர் புறச்சேரி:

செம்படவர்கள் புறச்சேரியில் வாழ்கின்றனர். அங்கே உறைக்கிணறுகள் உள்ளன. செம்படவர்கள் பன்றி, கோழி,

செம்மறியாட்டுக்கிடாய், கௌதாரிப்பறவை இவற்றை வளர்க்கின்றனர். அவர்கள் குடியிருக்கும் வீடுகள் குறுகிய கூரையுடையவை. அவ்வீடுகளின் முன் பக்கத்தில் அவர்கள் மீன் பிடிப்பதற்கு உபயோகிக்கும் நீண்ட தூண்டிற்கோலைச் சார்த்தி வைத்திருப்பர். அது பார்வைக்கு இறந்த வீரர்கள் பொருட்டு நாட்டிய வீரக்கல்லின் முன் கேடயத்தை வரிசை யாக வைத்து வேலை நிறுத்தியது போலக் காணப்படும். வீட்டின் முன் பக்கமுள்ள வெண்மணல் நிறைந்த முற்றத்தில் வலைகள் விரித்து உலரவைக்கப்பட்டிருக்கும். அவை சந்திர னிலுள்ள களங்கம்போல் தோன்றும்.

நிலவடைந்த இருள்போல
வலையுணங்கு மணல்முன்றில் (82-83)

காவிரித் துறையில் கடல் தெய்வ வழிபாடு:

நிறைமதி விளங்கும் உவாநாளில் செம்படவர்கள் பூக் கள் மலிந்த காவிரித்துறையில் இன்பமாய்ப் பொழுதுபோக்கு வர். அவர்கள் அன்று கடலில் மீன்வேட்டைக்குச் செல்லா மல் தம் மனைவியர்களுடன் கடல் தெய்வத்தை வழிபடுகின்ற னர். அவ்வழிபாட்டு முறை விசேஷமானது. சினைகொண்ட சுறுமீனின் கொம்பை மணலிலே நட்டு அதனையே வருண னுக எண்ணி வணங்குகின்றனர். அப்போது அவர்கள் வெண் கூதாள மலரையும் தாழம் பூவையும் சூடிக்கொள்வர்; பனையி லிருந்து இறக்கும் கள்ளையும், நெல்லிலிருந்து தயாரிக்கும் கள்ளையும் தம் மனைவியருடன் பருகுவர்.

செம்படவர்களின் பொழுது போக்கு:

செம்படவர்கள் பின்பு காவிரி கடலோடு கலக்கும் சங் கமத் துறையில் இறங்கி, அலைகளைக் கைகளால் உழக்கி நீந்தி,

நீராடுகின்றனர். கடலாடிய புண்ணியத்தால் முன் செய்த தீவினைகள் அகல்கின்றன. கடலாடும்போது உடலிற் படிந்த உப்பு நீங்குவதற்காக அவர்கள் பின்பு சுத்த ஜலத்தில் குளிக்கின்றனர். அதன்பின் நண்டைப் பிடித்து ஆட்டியும், மண்ணில் பாவை செய்தும் விளையாடுகின்றனர்; பலவகையான நுகர்ச்சிப் பண்டங்களை அனுபவித்து மகிழ்கின்றனர். இவ்வாறு அகலாக் காதலுடன் தம் மனைவியரோடு பகற்பொழுது முழுவதும் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். இங்ஙனம் காவிரித் துறை அவர்களுக்குச் சுவர்க்க நாட்டை ஒத்துத் தோன்றுகிறது.

காவிரி கடலோடு கலப்பதற்குக் கரியமலையில் செந்நிற மேகம் கவிந்திருப்பதையும், தாயின் நகிலைக் குழந்தை தழுவுவதையும் புலவர் உவமை கூறுகிறார்.

செல்வர்களின் இன்பவாழ்க்கை:

அக்காவிரித் துறையிலே உயர்ந்த மாடங்கள் பல இருக்கின்றன. அவற்றில் வாழ்கின்ற செல்வர்கள் முன்னிரவில் பாடல் கேட்டும், நாடகம் பார்த்தும், வெண்ணிலவொளியில் இருந்து அதன் இன்பத்தை அனுபவித்தும் பொழுது போக்குகிறார்கள். பின்னர் அவர்கள் தம் மாளிகையின் மேல்மாடிக்குச் சென்று தம் மனைவியருடன் காதல் இன்பம் துய்க்கின்றனர். அவ்வேளையில் அம்மகளிர் தம் பட்டாடையைக் களைந்து நொய்ய வெண்துகிலை அணிந்துகொள்கின்றனர். அதன்பின் ஆடவரும் பெண்டிரும் மயக்கத்தால் தத்தம் மாலைகளை மாறிமாறிச் சூடிக்கொள்கின்றனர். பின்னர் அவர்கள் விளக்கை அணைக்காமலே நித்திரையில் ஆழ்கின்றனர். அவ்விளக்கு, கடையாமம் வரையிலும் எரிந்துகொண்டிருப்பதால், கடலிலே கட்டுமரத்திற் செல்லும் பரதவர்கள் அதனை

மாடத்திலுள்ள பலகணி வழியாகக் கண்டு எண்ணிக் கணக்கிடுகின்றனர்.

சுங்கம் கொள்வோர்:

இத்தகைய கடையாமத்திலே கடற்கரையிலிருக்கும் பண்டசாலைத் தெருவில் அரசர்க்குச் சேரவேண்டிய சுங்கப் பொருள்களைப் பிறர் கவராதபடி பார்க்கும் காவலாளர்கள், சூரியனது தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் தளர்ச்சியடைந்தாலும் ஓய்வின்றி இயங்கி வருதல் போலப் பின்னிரவில் உறக்கத்தில் மடிந்தும் சுங்கம் வாங்குவதில் மட்டும் குறைபடாமல் இருக்கின்றனர்.

பண்டசாலைகள்:

பண்டசாலைகளிலே பிற நாடுகளிலிருந்து கடல்வழியாக வந்து இறக்கப்பட்ட பொருள்கள் ஏராளமாகக் கிடக்கின்றன. அதுபோலவே உள்நாட்டிலிருந்து கடல் வழியாக வெளிநாடுகளுக்கு அனுப்பும் பொருட்டு வந்து குவிந்து கிடக்கும் பண்டங்களும் மிகுதியாக உள்ளன. அவற்றை அளந்து வரையறை செய்தல் இயலாது. இவ்வாறு கரையிலிருந்த பண்டங்கள் கடலிலும், கடலிலுள்ள பண்டங்கள் கரையிலும் வந்து தொகுவது, கடலிலிருந்து மேகம் எடுத்து வந்த நீர் மலையிலே மழையாகப் பெய்வதையும், அந்நீரே பின்பு கடலிற் சென்று பரவுவதையும் ஒத்திருக்கிறது. பண்டசாலை அதிகாரிகள் அப்பண்டங்களின்மீது சோழனது புலிமுத்திரையைப் பொறித்துப் பின் சுங்கம் கொள்வதற்காக அவற்றை வெளியே அகற்றிப், பொதிந்து மூடிவைக்கின்றனர். குவிந்துகிடக்கும் அப் பண்டப் பொதிகளின்மீது ஆண் நாய்களும் ஆட்டுக்கிடாய்களும் ஏறிக் குதிக்கின்றன. அக்காட்சி மேகம் தவழும் மலைகளில் வருடைமான் துள்ளிக் குதிப்பதைப் போன்றுள்ளது.

அங்காடித் தெரு:

அங்காடித் தெருவின் ஒரு பக்கத்தில் முருகவேளுக்கு மகளிர் வெறியாட்டு எடுக்கின்றனர். அங்கே குழல், யாழ், முழவு, முரசு ஆகிய இசைக்கருவிகள் ஒலிக்கின்றன. இதனைப் பக்கத்திலுள்ள மாடங்களின் மீதிருந்து பெண்கள் பார்த்துக் கைகூப்பித் தொழுகின்றனர். அம் மாடங்கள் மேகம் அளாவ உயர்ந்திருக்கின்றன. நெருங்கிய பல படிக்கட்டுக்களையுடைய வளைந்த திண்ணைகளும் சிறுவாயில், பெருவாயில், பேரிடைகழி முதலியனவும் அம்மாடங்களில் அமைந்துள்ளன. அவற்றின் சாளரங்கள் வழியாகத் தென்றற்காற்று உள்ளே வீசுகிறது. அம் மாடத்தில் நிற்கும் மகளிர்கள் பவளம் போன்ற நிறமும், சிவந்த அடியும், மயில் போன்ற தோற்றமும், மான் போன்ற நோக்கும், கிளிபோலும் மழலையும் உடையவர்கள். அவர்கள் மென்மையான ஆடையைத் தரித்துள்ளாகள். கையில் வளையல் அணிந்திருக்கின்றனர். அவர்களது விரல்கள் காந்தட்பூவின் கொத்தை ஒத்திருக்கின்றன. இத்தகைய விழாக்கள் அங்காடித் தெருவில் இடையறுது நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

பலவகைக் கொடிகள்:

செழுமை மிக்க அந்நகரிலிருக்கும் கோயில்களின் வாயில்களில் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பலரும் தொழுது செல்வர். கடைத்தெருவின் இருபக்கங்களிலும் நெல், அரிசி இவை சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கொட்டகாரங்கள் இருக்கின்றன. மக்கள் அவ்விடங்களைத் தெய்வத் தன்மை வாய்ந்தனவாகக் கருதி, மெழுகி, பாக்கு வெற்றிலைகளைச் சொரிந்து வெள்ளிய அரிசியைப் பலியாகத் தூவியுள்ளனர். அங்கே கால்களின் மீது அமைந்த கவிந்த சட்டங்

களில் வெண்மையான துகிற்கொடிகள் கட்டப்பட்டுள்ளன. அக்கொடிகள் ஆற்றங்கரையிலுள்ள வெண் மணலில் வளர்ந்திருக்கும் கரும்பினது பூவை ஒத்திருக்கின்றன. நூற்கேள்விகளில் சிறந்த ஆசிரியர்கள் தர்க்க விஷயங்கள் குறித்துத் தகுதியுடையாரோடு வாதம் புரிவதற்கு அடையாளமாக உயர்த்திய கொடிகளும் அந்நகரில் உள்ளன.

பல் கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும் (169-171)

இக்கொடிகள் போலிப் புலவர்களுக்கு அச்சத்தை விளைப்பனவாகும். புகார்த் துறைமுகத்திலே தறிகளில் கட்டப்பட்டு நெருங்கி நிற்கும் மரக்கலங்கள் கட்டுத்தறிகளை அசைக்கும் யானைகளைப் போன்று காணப்படுகின்றன. அம் மரக்கலங்கள் மீதும் கொடிகள் கட்டப்பட்டிருக்கின்றன. புகார் நகரில் கள் விற்கும் கடைகள் பல உள்ளன. அங்கே மீன் இறைச்சி இவைகள் பொரிக்கப்படுகிற ஆரவாரம் கேட்கும். அவ்விடங்களில் கள் விற்கப்படுவதை அறிவிப்பதற்காகக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய கொடிகள் மிக அதிகமாக இருப்பதால் சூரியனது கதிர்களுக்கு அந்நகரில் நுழைய முடிவதில்லையாம்.

இறக்குமதிப் பொருள்கள்:

புகார் நகர வீதியிலே பல நாடுகளிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவை, அயல் நாடுகளிலிருந்து கடல் வழியாக வந்த குதிரைகள், வண்டிகளில் வந்த நல்லமிளகு மூடைகள், வடக்கிலுள்ள மேருமலையில் தோன்றிய மாணிக்கம், பொன்

என்பன, பொதியமலையிலிருந்து கிடைத்த சந்தனக்கட்டை அகிற்கட்டைகள், தென் கடலில் தோன்றிய முத்து, கீழ் கடலிலிருந்து எடுத்த பவளம், கங்கை காவிரி இந்நதிகளில் உண்டாகும் பலவகைப் பொருள்கள், இலங்கையிலிருந்து வந்த உணவுப்பொருள்கள், பர்மாவிலிருந்து வந்த நுகர்ச்சிப் பொருள்கள், இன்னும் சீனம் முதலிய பிறநாடுகளிலிருந்து வந்த பல பண்டங்கள் என்பனவாம். அரிய பெரிய இப் பண்டங்கள் அனைத்தும் நிலமகளின் முதுகு நெளியும்படி அப் புகார் நகரில் ஒருங்கே தொக்கிருக்கின்றன.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு (185-193)

வணிகர் சிறப்பு:

அந்நகரில் வணிகர்கள் சீரும் சிறப்புமாய் வாழ்கின்றனர். அவர்கள் அந்தணர்களைக் கொண்டு வேள்விகள் புரிவித்துத் தேவர்களை வழிபடுகின்றனர். அந்தணர்களுக்கும் வேண்டும் பொருள்களைக் கொடுத்து அவர்களது புகழைப் பரப்புகின்றனர். இன்னும் பசு, எருது இவற்றைப் பாதுகாக்கின்றனர். தம்பால் வந்தோர்க்கெல்லாம் பல பண்டங்களையும் சோற்றையும் அளித்து விருந்தோம்புகின்றனர். இத்தகைய அறச் செயல்களைப் புரிவதால் அந்நகரில் வறுமையுடை

யோர் இல்லையாயினர். வறுமையின்மையால் கொலை களவு புரிவாரும் அங்கில்லை. எனவே மீன் ஆடு முதலிய பிராணி களுங்கூடத் தழைத்து மனம் செருக்கித் தமக்குப் பகையாக வுள்ள வலைஞரின் முற்றத்திலும், ஊன் விற்பாரின் குடிசை முன்பும் அஞ்சாமல் திரண்டு நிற்கின்றன. அவ் வணிகர்கள் மிக்க நேர்மையுடையவர்கள்; நுகத்தில் தைத்த பகலாணிபோல நடுவு நிலைமையில் திறம்பாதவர்கள்; பழிக்கு அஞ்சுபவர்கள்; வாய்மையே பேசுபவர்கள். அவர்கள் வாணிகம் புரியும்போது

தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைபடாது
பலபண்டம் பகர்ந்துவீசும் (209-211)

இயல்புடையவர்கள். அவர்கள் பிறர் பொருள்களையும் தம் பொருள்போற் பேணி, லாபத்தை வெளிப்படையாகச் சொல்லி வாணிகம் செய்கின்றனர். இத்தகையோரை வேத வாணிகர் என்று நச்சினர்க்கினியர் தமது உரையில் கூறு கிறர். இவ் வணிகர் வாழுமிடங்கள் அங்நகரில் நெருக்க மாக உள்ளன.

பிற நாட்டு வணிகர்:

காவிரிப்பூம் பட்டினம் எப்பொழுதும் திருவிழா நடை பெறுகின்ற ஒரு மூதூர் போன்று சிறப்பும் ஆரவாரமும் உடையதாயிருக்கும். வேற்று நாடுகளிலிருந்து பல்வேறு பாஷைகளைப் பேசுகின்ற மக்கள் வியாபாரத்தின் பொருட்டு இங்கு வந்து, இங்குள்ள தமிழ் மக்களோடு நெருங்கிக் கலந்து பழகி உறவாடுகின்றனர்.

பாட்டிற் கருக்கொண்ட பொருள்:

தலைவன் பொருள்வயிற் பிரிய எண்ணிய தன் நெஞ்சைப் பார்த்து "ஏ நெஞ்சமே! (இதுகாறும் கூறிவந்த) குறையாத சிறப்பினையுடைய காவிரிப்பூம்பட்டினமே எனக்கு உரிமையாற் கிடைப்பதாயினும், நீண்ட கரிய கூந்தலையும் விளங்குகின்ற ஆபரணங்களையுமுடைய எனது தலைவி இங்கே தனித்திருக்க அவளைப் பிரிந்து வரமாட்டேன்" என்று கூறுகிறான்.

தலைவன் மேலும், தான் செல்ல விரும்பிய கானகத்தின் வெம்மையைக் குறிப்பிடும்போது அது கரிகாலன் பகைவர்களுக்கு எதிராக எடுத்த வேலினும் கொடியதாயிருந்தது என்று கூறுகிறான். அவ்வாறு கூறும்போது கரிகாலனது வீரம், வெற்றி, அவனால் அழிவுற்ற பகைவர் நாடுகளின் நிலை முதலியவற்றை அத்தலைவன் வாயிலாகப் புலவர் விளக்குகிறார். இதனால் பாடலின் கருத்து வளம் பெறுவதோடு பாட்டுடைத் தலைவனாகிய கரிகாலனைப் புகழ்வதற்குரிய வாய்ப்பும் புலவர்க்குக் கிடைக்கிறது.

கரிகாலன் சிறையிலிருந்து தப்புதல்:

கரிகாலன் சிறுவனாயிருந்தபோது பகைவர்கள் அவனைப் பிடித்துச் சிறையிலிட்டனர். புலிக்குட்டி கூட்டில் வளர்ந்தாற்போல அவன் அச்சிறைக்குள் இருந்து வந்தான். அக்காலத்தில் அவனது வீரம் முதலிய பெருமைக் குணங்கள் முற்றி முதிர்ந்தன. பின்னர், குழிக்குள் அகப்படுத்தப்பட்ட களிறானது, அக்குழியைக் கோட்டாற் குத்தி அழித்து மேலேறித் தன் பிடியை அடைந்தாற் போலக் கரிகாலன் சிறைக்கூடத்தின் உயர்ந்த மதிலைத் தாண்டி,

எதிர்த்த வீரர்களை வாளால் வென்று தனக்குரிய அரசுரிமையை மீட்டுக் கொண்டான்.

பகைவர்களை வெல்லுதல்:

கரிகாலன் அதனோடு அமைதியுறாமல் பகைவர் நாடுகளின் மீது தன் யானைப்படை, குதிரைப்படைகளோடு தண்டெடுத்துச் சென்றான். அவனது யானைகளோ பகைவரது அரண்களை அழித்து அவற்றின் கதவுகளைத் தன் கொம்புகளாற் குத்தி எடுத்தும் பகை வேந்தர்களின் கிரீடமணிந்த தலைகளைத் தன் முன்காலால் இடறியும் வீரம் விளைப்பவை. கரிகாலன் போருக்குச் செல்லும்போது உழிஞை, பூளை முதலிய பூக்களைச் சூடி குற்றுச் செடி படர்ந்த பொற்றை போற் காணப்பட்டான். அவனது பாசறையில் போர் முரசங்கள் முழங்கின. இவ்வாறு சென்று கரிகாலன் பகைவரது முன்னணிப் படையை அழித்துவிட்டான். மாற்றாரின் வீரர்கள் போர்க்களத்தில் வீழ்ந்து மடிந்தனர். அவர்களது பிணத்தைத் தின்பதற்காகப் பருந்துகள் ஆகாயத்தில் உலாவின.

ஏரிகளைச் சிதைத்தல்:

முன்னணிப் படைகளை அழித்தபின் கரிகாலன் பகைவரின் கோட்டைக்குள்ளே சென்று அங்கிருந்த பெரிய ஏரிகளை இடித்துப் பாழாக்கினான். ஆதலால் முன் கரும்பும், செந்நெல்லும், குவளையும், நெய்தலும் நெருங்கி வளர்ந்து, முதலைகள் மிக்கிருந்த பெரிய ஏரிகளெல்லாம் இப்பொழுது பாழாகி, நீரற்று, அறுகும் கோரையும் வளர்ந்து, வயல் எது, வாவி எது என்று அறிதற்கியலாதபடி கலைமானும் பிணைமானும் குதித்து விளையாடும் பாழ் இடங்களாயின.

அம்பலங்களை அழித்தல்:

பகைவர் நாடுகளில் பல அம்பலங்கள் இருந்தன. அவற்றில் தெய்வம் உறையும் தறிகள் பல உண்டு. அத் தறிகளில் பூச் சூடப்பட்டிருக்கும். அவ் அம்பலங்களை மேற் பார்ப்பதற்காகப் போர்க்களத்திற் சிறைப்பட்ட மகளிர் நியமிக்கப்பட்டிருந்தனர். அம் மகளிர் நீருண்ணும் துறையிலே நீராடி, அம்பலத்தை மெழுகி, விளக்கேற்றுவர். அயலூரிலிருந்து வருபவர்கள் அவ் அம்பலங்களிற் சென்று தொழுது அங்கே தங்குவர். அத்தகைய அம்பலங்களையெல்லாம் கரிகாலன் பாழ்படுத்தி விட்டதால் அவற்றில் இப்பொழுது யானைகள் பிடிகளோடு சென்று தங்கி அவற்றிலுள்ள நெடிய தூண்கள் தளரும்படி உராய்கின்றன.

மன்றங்களைப் பாழ்படுத்தல்:

மாற்றரசர் நாடுகளிலுள்ள மன்றங்களையெல்லாம் கரிகாலன் பாழ்படுத்தியுள்ளான். அம்மன்றங்களில் முன் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. திருவிழாக்காலங்களில் தெருவில் நறிய பூக்கள் சிதறப்பட்டிருக்கும்; கூத்தாது முழவோசையும் யாழிசையும் இணைந்து ஒலிக்கும். அத் திருவிழாக்கள் இப்பொழுது அங்கு இல்லையாயின. அவை, நெருஞ்சில் பூண்டும் அறுகும் வளர்ந்து, நரிகள் தங்கி ஊளையிடுவதற்கும், கூகையும் கோட்டானும் எதிர் எதிர் கூவுவதற்கும் உரிய பாழிடங்களாக மாறின.

நகரங்களை அழித்தல்:

பகைவர்க்குரிய நகரங்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன. முன்பு அந்நகரிலுள்ள பெரிய மாடங்களின் தலைவாயில்களில் விருந்தோம்புதலாகிய அறம் இடையறாது

நிகழ்ந்து வந்தது. அவற்றின் அடுக்களையில் பெருஞ்சோறு சமைத்த வண்ணமாய் இருக்கும். அம்மாடங்களின் உயர்ந்த திண்ணைகளில் கிளிகள் அமர்ந்து இன்சொல் மிழற்றும். இவ்வாறு பால் பொங்கிக்கொண்டிருந்த அந்நகரம் பாழாயினமையால் காலிற் செருப்பணிந்தவர்களும், வில்லைத் தாங்கியவர்களுமான வேடர்கள் அங்கே சென்று நெற்கூடுகளிலுள்ள நெல்லையெல்லாம் கொள்ளைகொண்டு உண்டுவிட்டார்கள். இப்பொழுது வறிதாயிருக்கின்ற நெற்கூடுகளின்மீது பகற்பொழுதிற் கூகைகள் இருந்து குழறுகின்றன.

பகையரசர்கள் பணிதல்:

பகைவர் ஊர்களையெல்லாம் பாழ்படுத்தியும் கரிகாலன் உள்ளம் அடங்கவில்லை. உலகத்தார், "கரிகாலன் மலைகளை அகழ்வான்; கடலைத் தூர்ப்பான்; ஆகாயத்தை விழப்பண்ணுவான்; காற்றை இயங்காமல் தடுப்பான்;

> மலைஅகழ்க்குவனே கடல்தூர்க்குவனே
> வான்வீழ்க்குவனே வளிமாற்றுவன் (271-272)

அவன் தெய்வத்தன்மை வாய்ந்தவனாதல் வேண்டும்" என்று வியந்து கூறும்படி அவன் தான் எண்ணியதை எண்ணியவாறு முடிக்க வல்லவன். ஆதலால்,

> பல்லொளியர் பணிபொடுங்கத்
> தொல்லருவாளர் தொழில்கேட்ப
> வடவர் வாடக் குடவர் கூம்பத்
> தென்னவன் திறல் கெட (274-277)

ஒளிநாடு, அருவாளநாடு, வடநாடு, குடநாடு, பாண்டிநாடு இவற்றின் மன்னர்கள் ஆற்றல் கெட்டு மன எழுச்சி குன்றிப் பணிந்து அவன் ஏவிய தொழில்களைச் செய்கின்றனர்.

பொதுவரையும் வேளிரையும் அழித்தல்:

கரிகாலன் மேலும் தனது யானைப்படைகளின் பலத்தாலும், தனது ஆற்றலாலும் இடைய அரசர்கள்மீது வெகுண்டு சென்று அவர்கள் வம்சத்தையே நிர்மூலமாக்கிவிட்டான். அதுபோலவே, இருங்கோவேள் முதலிய வேளிர்குல அரசர்களையும் அழித்துவிட்டான்.

சோனாட்டையும் உறந்தையையும் வளம்படுத்தல்:

இதன்பின் கரிகாலன் தனது நாட்டை வளம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டான். காட்டை அழித்து மக்கள் வாழ்வதற்குரிய நாடாகச் செய்தான். குளங்களைத் தோண்டி நாட்டின் வளத்தை மிகுவித்தான். பின் தன் உறந்தை நகரை விரிவாக்கினான். அதில் கோயில்களைக் கட்டினான்; குடிகளை நிறுவினான்; கோட்டையில் சிறுவாயில் பெருவாயில்களை அமைத்தான். ஞாயிலில் அம்புக் கட்டுக்களை அமைத்து அதனை வலியுடையதாகச் செய்தான். கரிகாலன் தனது பகைவர் எவராக இருந்தாலும் அவருடன் போர் செய்வேன் என்று தன் ஆற்றல் தோன்றக் கூறினான்; அவன் சொன்ன சொற் பிறழாத கொள்கையுடையவன். பல அரசர்கள் ஒன்றாகச் சேர்ந்து எதிர்த்தாலும் தான் தனியாக இருப்பதற்கு அஞ்சிப் புறங்கொடுத்தல் செய்யாதவன். ஆதலால் அவனது நகரைச் சூழ்ந்துள்ள மின்போல் ஒளிவீசும் மதிலின்கண் வீரத் திருமகள் என்றும் நிலைபெற்று வாழ்கின்றாள்.

கரிகாலன் மகிழ்ச்சி:

கரிகாலன் தன் மார்பில் சந்தனத்தைப் பூசி அதன்மீது ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்துள்ளான்; காலில் வீரக்கழலைக் கட்டியுள்ளான். முன்பு முழவு முதலிய அரச சின்னங்களை உடையராயிருந்து அவனோடு போர் செய்து

தோற்றுத் தம் பெருமை குன்றிய அரசர்கள் அவனது பாதங்களில் விழுந்து பணிகின்றனர். மார்பில் பூசிய சந்தனம் புதல்வர்கள் ஓடியாடி விளையாடுவதாலும், தம் மனைவியரோடு கூடுவதாலும் அழிந்துபோகிறது. இத்தகைய சிறப்புகளோடு சிங்கம் போன்ற வலிமையும் படைத்தவன் அத்திருமாவளவன்.

பொருள் முடிபு:

இத்தகைய வெற்றித்திரு வாய்ந்த கரிகாலன் தன் பகைவர் மீது ஓச்சிய வேலை விடவும் கொடியதாயிருந்தது தலைவன் போக எண்ணிய கானம். ஆனால், தலைவியின் அகன்ற மெல்லிய தோள்களோ கரிகாலனின் செங்கோல் போன்று குளிர்ச்சியுடையவை.

தலைவன் இவ்வாறு தலைவியைப் பிரிய மனமின்றி, பொருளீட்டும் தன் எண்ணத்தைக் கைவிட்டுச் செலவு தவிர்வது, தனது பிரிவை ஆற்றாது வருந்தும் தலைவியை ஆற்றுவித்துப் பின் பிரியவேண்டுமென்ற நோக்கத்தை உட்கொண்டேயாகும். எனவே, இப்பாடல் பிரிதல் நிமித்தமாகிய பாலை ஒழுக்கத்தைக் கூறுவது என்பதை அறியலாம்.

உருத்திரங் கண்ணனார் இப் பாடலைக் கரிகாலன் முன்னிலையிற் பாடினார். அவன் மிக்க மகிழ்ச்சியடைந்து, புலவர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான். இதனையே,

> **தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்**
> **பத்தொ டாறுநூ றாயிரம்பெறப்**
> **பண்டுபட்டினப் பாலைகொண்டதும்** (இராச. 21)

என்று ஜெயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியில் சிறப்பிக்கின்றார்.

ILAKKIYA THENRAL

By

R. VEERABHADRAN, M. A., L. T.
LECTURER
UNIVERSITY COLLEGE
TRIVANDRUM

Printed at the Santi Press, Nagercoil.